# சமூக அறிவியல் I

## பகுதி - 1

## வகுப்பு IX

**Social Science I**
**Part 1**
**STD IX**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

**2024**

ST-519-1-SOC.SCI.-I (T)-9-VOL-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**சமூக அறிவியல் I**

**9**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in
e-mail : scertkerala@gmail.com, Phone : 0471 - 2341883,
Typesetting and Layout : SCERT
First Edition : 2024
*Printed at* : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே,

தற்கால சமூகத்தை வேறுபடுத்தி அறிந்துகொள்ளவும் பயனுள்ள ஈடுபாடுகளில் செயல்பட்டு, பொறுப்புணர்வுமிக்க குடிமகனாக வாழ நம்மால் இயல வேண்டும். அதற்கு சமூக அறிவியல் கல்வி. நமக்கு உதவுகிறது. கற்கால மனித வாழ்க்கையின் அடிப்படை சிறப்புதன்மைகள் உருவான இடத்திலிருந்துதான் இந்தப் புத்தகம் தொடங்குகிறது. தொடர்ந்து கருத்துக்களை ஆரம்பகால நாடுகள், இந்தியாவில் நாடுகளின் உருவாக்க வரலாறு ஆகியன கலந்துரையாடப் படுகின்றன. புத்த, சமணமத கருத்துக்கள் உருவான சூழ்நிலையும், நாடு உருவாக்கமும், பௌதிக வளர்ச்சி ஆகியவற்றில் உள்ள தொடர்பும் இதில் விளக்கப்பட்டுள்ளன. 'பூமிதானமும் இந்தியச் சமூகமும்' என்ற பாடத்தில் பூமிதான நடைமுறையின் வழியாக இந்தியச் சமூகத்தில் நிலமானியமுறை உருவான வரலாறு வெளிப்படுத்தப்படுகிறது. இந்திய அரசியலமைப்பிலுள்ள அதிகாரப் பங்கீடு, இந்தியாவின் மக்கள் தொகை போக்கு பற்றியும் இந்தப் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. முக்கியமான தகவல் உறைவிடங்களை அறிமுகப்படுத்தியும், பகுப்பாய்வு செய்தும், விளக்கியும், அறிவு உருவாக்கம் ஏற்படும் விதத்தில் பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் – தொழில்நுட்ப வசதிகளைக் கற்றலில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மக்களாட்சி மற்றும் மதச்சார்பற்ற மதிப்புகளுடன் அறிவியலும் அத்துடன் பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையையும் இதன் வழியாக மாணவர்களிடம் உருவாக்கப்பட வேண்டும்.

வாழ்த்துக்களுடன்

**முனைவர். ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ,**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்

# TEXTBOOK WRITING COMMITTEE

## Adviser

**Dr. K.N. Ganesh**
Chairman, Kerala Council for
Historical Research

## Chairperson

**Dr. Sivadasan P.**
Professor, Department of History
University of Calicut

## Experts

**Dr. K.K. Radha**
Principal (Rtd.)
Govt. College for Women
Thiruvananthapuram

**Dr. Pradeep Kumar K.**
Associate Professor & Head
Department of Political Science
Govt. College, Attingal, Thiruvananthapuram

**Dr. Baiju K.C.**
Professor & Vice Chancellor (in charge)
Department of Economics
Central University of Kerala, Kasaragod

## Members

**Bino P. Jose**
Assistant Professor,
St. Dominic's College Kanjirappally,
Kottayam

**Dr. Nandakumar B.V.**
Assistant Professor, S N College
Varkala, Thiruvananthapuram

**Yusuf Kumar S. M.**
Principal, GHSS, Chithara, Kollam

**Aju S.**
HSST, History GHSS
Vechoochira Colony, Pathanamthitta

**Pradeepan T.**
HSST, History GHSS, Palayad, Kannur

**Najeem A.**
Principal, GHSS, Kadakkal, Kollam

**Rajan M.**
HST, Social Science
GHS Nagalassery, Palakkad

**Mr. Sreejith M. Muthadath**
HST Social Science
CNN GHS Cherpu, Thrissur

**Sandhyarani P.S.**
HST, Social Science, GHSS Anchal West, Kollam

## Tamil Version

### Expert

**Dr. Jeyakrishnan P**
Professor & Head, Dept. of Tamil, University of Kerala, Thiruvananthapuram.

### Members

**Vijaya A**, Headmistress, GHS Pambanar.
**Geetha A**, HST Social Science, GHS Pambanar.
**Ramar P**, HST Social Science, GVHSS & TTI Kumily.
**Jayanthy S**, HST Social Science, GMRS Peermade.
**Justin Raj D**, HST Social Science, PHS Vandiperiyar.

## Academic Coordinator

**Suresh Kumar S.**
Research Officer, SCERT, Kerala

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | கற்காலத்திலிருந்து முன்னோக்கி | 07-24 |
| 02 | கருத்துக்களும் ஆரம்பகால நாடுகளும் | 25-44 |
| 03 | பூமிதானமும் இந்தியச் சமூகமும் | 45-62 |
| 04 | இந்திய அரசியலமைப்பிலுள்ள அதிகாரப் பங்கீடு | 63-82 |
| 05 | இந்திய மக்கள்தொகையின் போக்கு | 83-100 |


இப்பாடப்புத்தகத்தில் கற்றலுக்கு உதவும் சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- கூடுதல் வாசிப்பிற்கு மதிப்பீடு செய்வதற்கு உட்பட்டதல்ல
- குறிப்பு தயாராக்குதல்
- கற்றல் செயல்பாடு
- கலவைப்பட உருவாக்கம்
- மதிப்பீட்டு வினாக்கள்
- கருத்துப் பலகை உருவாக்கம்
- தொடர் செயல்பாடுகள்
- கலந்துரையாடல் நடத்தலாம்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.



# 1 கற்காலத்திலிருந்து முன்னோக்கி

மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனிதர்களின் புத்திசாலித்தனம் என்பதை கடந்த கடிதத்தில் பார்த்தோம் அல்லவா. புத்திசாலித்தனம் இல்லையென்றால் பெரிய காட்டு விலங்குகள் மனிதர்களை அழித்திருக்கும்.... ஆதிகால மனிதர்களிடம் எதிரிகளை எதிர்த்து போராட சிறந்த ஆயுதங்கள் எதுவும் இல்லை. அவைகளுக்கு நேராகக் கற்களை வீச மட்டுமே முடிந்திருந்தது... பின்னர் அவர்கள் கற்களால் கோடாரி, ஈட்டி, போன்ற கருவிகளும். கல் ஊசிகளும் செய்ய கற்றுக் கொண்டனர். இவ்வகையான பலவித கற்கருவிகள் தென் கென்சிங்டன் (லண்டன்), ஜெனிவா, போன்ற அருங்காட்சியகங்களில் பார்த்தோமல்லவா.

மேலே ஜவஹர்லால் நேருவின் "தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்" என்ற நூலின் ஒரு பகுதியைதான் வாசித்தீர்கள். இந்தக்கடிதம் பழங்கால மக்களின் வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறது.

இங்குக் காட்டு விலங்குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள மனிதர்கள் எவ்வகையான கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்று அவர் கூறுகிறார்?

- கல்லாலான கோடாரி
- 
- 

அக்கால மனிதர்கள் இவ்வகையான கருவிகளை எதற்கெல்லாம் பயன்படுத்தியிருக்கலாம்?

- விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள
- வேட்டையாட
- 

மேற்கண்ட தேவைகளுக்காக மனிதன் ஆரம்பக்காலத்தில் உருவாக்கிய கருவிகள் கற்களால் ஆனவை. பின்னர் கற்களுக்குப் பதிலாக உலோகங்கள் வந்தன.

மனிதன், கருவிகள் உருவாக்குவதற்காகப் பயன்படுத்திய பொருட்களின் அடிப்படையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மனித வரலாற்றை வெவ்வேறு கால கட்டங்களாகப் பிரிக்கின்றனர்.




## கற்காலம் (Stone Age)

மனித வரலாற்றில் ஆரம்ப காலகட்டம் கற்காலம் என்று அழைக்கப்பட்டது ஏன் என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்துள்ளீர்களா? அக்காலத்திலுள்ள மனிதர்கள் கருவிகளையும் ஆயுதங்களையும் கற்களைப் பயன்படுத்தி உருவாக்கினார்கள். எனவே வரலாற்றாசிரியர்கள் ஆரம்பகால கட்டத்தைக் கற்காலம் எனச் சிறப்பித்தனர். கற்களாலான கருவிகளை உருவாக்கும் முறையின் அடிப்படையில் கற்காலத்தைப் பழைய கற்காலம், இடைக்கற்காலம், நவீன கற்காலம் என மூன்று காலங்களாகப் பிரித்தனர்.

இவை ஒவ்வொன்றின் சிறப்புத் தன்மைகளைப் பார்ப்போம்.

## பழைய கற்காலம் (Palaeolithic Age)

கரடுமுரடான கற்கருவிகளே பழைய கற்காலக் கருவிகளின் சிறப்பம்சம் ஆகும். 'பாலியோலித்திக்' என்ற சொல் 'பாலியோஸ்' (பண்டைய) மற்றும் 'லித்தோஸ்' (பாறை) ஆகிய இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து உருவானது.

கருவிகளை உருவாக்கல் ஆதிகால மனிதனின் வாழ்வாதார நடைமுறைகளுடன் தொடர்புடையதாகும். கருவிகளின் பயன்பாட்டில் மூன்று முக்கிய நிலைகள் இருந்ததை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பயன்பாடு (Utilization) | கிடைக்கும் கற்களை அவற்றின் வடிவத்தை மாற்றாமல் பயன்படுத்தும் முறை |
| உருவமாற்றம் (Fashioning) | கிடைக்கும் கற்களைத் தேவைகேற்ப வடிவமைத்து பயன்படுத்தும் முறை |
| தரப்படுத்துதல் (Standardization) | ஒவ்வொரு தேவைகேற்ப பலவையான கருவிகளை உருவாக்கும் முறை |

பழைய கற்காலத்தில் பல கட்டங்களில் ஆதிகால மனிதர்கள் பயன்படுத்திய பலவித கருவிகளின் படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை உற்றுநோக்கி கருவிகளின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக.



கூழாங்கல் கருவிகள் (Pebble tools) | இருமுக மையக் கருவிகள் (Biface core tools) | துகள் கருவிகள் (Flake tools)


வெட்டுவதற்கான கல் கருவிகள்
(Chopper-Chopping tools)

பிளேடு நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட கல் கருவிகள்

## முதன்மைக்கற்களும் துகள்களும் (Core and Flakes)

ஒரு துண்டு கல்லை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துண்டுகளாக உடைக்கும் போது அதில் மிகப் பெரிய துண்டை 'முதன்மைக்கல்' (Core) என்றும் சிறிய துண்டுகளைத் 'துகள்கள்' என்றும் அழைத்தனர். முதன்மைக்கல் கொண்டு உருவாக்கும் கருவிகளை முதன்மைக் கருவிகள் என்றும், துகள்கள் கொண்டு உருவாக்கும் கருவிகளைத் துகள் கருவிகள் என்று அழைப்பர்.




பழைய கற்காலத்தின் பிற்பகுதியில் மனிதர்கள் கற்களால் உருவாக்கிய ஆயுதங்கள் மட்டுமின்றி எலும்புகளினால் உருவாக்கப்பட்ட கருவிகளையும் பயன்படுத்தினர். கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுநோக்கவும்.



படத்தில் காணப்படும் கருவிகள் உங்களுக்குத் தெரிந்த ஏதாவது கருவிகளுடன் தொடர்பு உள்ளனவா? உண்டெனில் அவை எவையெல்லாம் என்று எழுதவும்.

- 
- 
- 

'பழைய கற்காலத்தில் கருவிகள் தயாரித்தலும் தொழிநுட்ப வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் நடத்தவும்.


ஷோவெ (பிரான்ஸ்)


லங்கோ (பிரான்ஸ் )


யானைத் தந்தத்தால் உருவாக்கப்பட்ட சிற்பம் சரைஸ்க், ரஷ்யா


குசாக் (பிரான்ஸ்) குகையில் குகை ஓவியங்கள்


ஸ்பெயினில் லா கர்மா குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்பினாலான கலைவடிவங்கள்

பழங்கால மனிதர்களின் கலைப்படைப்புகளின் படங்கள் மேலே தரப்பட்டுள்ளன. இந்தப் படங்களிலிருந்து உங்களால் என்னனென்ன புரிந்துகொள்ள முடியும்? எளிமையான ஒழுகும் கோடுகள், செதுக்கப்பட்ட ஓவியங்கள், சிற்பங்கள் போன்றன கற்காலத்தின் பிற்பகுதியில் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டதை இப்படங்களிளிருந்து புரிந்துகொள்ளலாம். விலங்குகளின் சித்திரிப்பு (ஷோவெ, லஸ்கோ குகைகள்) விலங்கு மற்றும் ஒரு பெண்ணின் செதுக்கப்பட்ட உருவம் (குசாக்குகை) மற்றும் வீனஸ் சிலை (சரைஸ்க், ரஷ்யா), ஆகியவை சடங்கு மற்றும் நம்பிக்கையுடன் தொடர்புடையவை என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஸ்பெயினில் உள்ள லா கர்மா குகையில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகளில் உள்ள சிற்பங்கள் அக்கால மக்களின் கலைத் திறமைக்குச் சான்றுகளாகும்.

குகை ஓவியங்கள் வரைவதற்கு பல்வேறு வகையான நிறங்கள் பயன்படுத்தப்பட்டன. செடிகள், மரப்பட்டைகள் மற்றும் காய்களை அரைத்து, செங்கல் பொடி சேர்த்து நிறங்கள் செய்யப்பட்டன. சூரிய ஒளி எட்டாத குகைகளில் உட்புறச்சுவர்களில் கல் ஊசிகள் மற்றும் கூரான ஆயுதங்களைப் பயன்படுத்தி இத்தகைய படங்களை வரைந்திருந்தனர்.குகைகளின் மேல் சுவர்களிலும் ஓவியங்கள் வரைந்திருப்பதை பார்க்க முடியும். இத்தகைய ஓவியங்களும் சிலைகளும் பண்டைய மனிதனின் அறிவுசார் வளர்ச்சி மற்றும் தொழிநுட்ப வளர்ச்சிக்குச் சான்றாகக் கருதப்படுகின்றன.

பழங்கால கருவிகளிலிருந்தும் கலைகளிலிருந்தும் மனித வாழ்க்கையைப் பற்றிய என்னென்னத் தகவல்களைப் பெறலாம் எனப் பார்ப்போம்.




சிறியகுழு (Bands)

நூற்றுக்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட சிறிய குழுக்களே

சிறியகுழு இசைக்குழுவினர்கள் இரத்த உறவுகளால் இணைக்கப் பட்டிருந்தனர்.




உலக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பழங்கால குகை மையங்களின் சிறப்பம்சங்களை அடையாளப்படுத்தவும்.

## இடைக்கற்காலம் (Mesolithic Age)

இடைக்கற்காலம் என்பது பழைய கற்காலத்திலிருந்து புதிய கற்காலத்திற்கு மாறுதலை ஏற்படுத்திய காலகட்டமாகும். மெசோலித்திக் என்ற சொல் 'மெசோஸ்' (நடுத்தரம்) 'லித்தோஸ்' (பாறை) ஆகிய இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டது. கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுநோக்கவும். படத்தில் உள்ள பழையகற்காலக் கருவிகளுக்கும் இடைக்கற்காலத்தில் காணப்படும் கருவிகளுக் கும் இடையிலான வேறுபாட்டை ஆராய்வோம்.


இடைக்கற்கால கருவிகள்

- இவை பழைய கற்காலத்தில் பயன்படுத்தப் பட்ட கருவிகளைவிடச் சிறிய கருவிகளாகும்.
- மைக்ரோலித்திக் அல்லது நுண்ணியகற்கள் எனப்படும் கற்கருவிகள் பயன்படுத்தப்பட்ட காலமாகும்.

ஆரம்பகால மனிதர்களின் கருத்துப் பரிமாற்றம் வளர்ச்சியடைந்தது பழைய கற்காலத்தின் பிற்பகுதியில்தான் என்பதை முன்னர் குறிப்பிட்டிருந்தோம்

அல்லவா. ஆனால் இந்தியாவில் இந்த வளர்ச்சியை இடைக் கற்காலத்தில்தான் பார்க்க முடிகிறது. மத்தியபிரதேசத்திலுள்ள பிம்பேட்கா, லக்ஜாவோர் மற்றும் கதொட்டியா குகை மையங்களிலுள்ள கலைப்படைப்புகள் ஆதிகால மனிதனின் வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.


பிம்பேட்கா


லக்ஜாவோர்


கதோட்டியா


லக்ஜாவோர்


லக்ஜாவோர்


லக்ஜாவோர்

படங்களை ஆராய்ந்து அவை பழையகற்கால மனிதனின் எந்தெந்த வாழ்க்கை நிலைகளைக் குறிப்பிடுகின்றன எனப் பட்டியிலிடவும்.

- வேட்டையாடல்
-
-
-
-
-

இந்தப் படத்திலிருந்து இடைக்கற்கால மக்களின் வாழ்க்கைமுறைகளை நாம் புரிந்துகொள்ளலாம். இந்தக் காலகட்டத்தின் சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- நுண்ணிய கற்கள் (மைக்ரோலித்துகள்) அல்லது நுண்ணிய கற் கருவிகளின் பயன்பாடு.
- வேட்டையாடுதல் மற்றும் சேகரிப்பது தவிர மீன்பிடித்தலையும் வாழ்வாதாரமாகக் கொண்டனர்.
- விலங்குகளைப் பழக்கி வளர்த்தற்கான குறிப்புகள்.
- பொழுதுபோக்குகள்
- பாலின அடிப்படையில் தொழில் பிரிவு.

| இடைக்கற்கால மையங்கள் | |
|---|---|
| ஸ்டார்கார் குகை | இங்கிலாந்து |
| பாஹியான் குகை | இலங்கை |
| சரை நாஹர்ராய் | இந்தியா (உத்திரப்பிரதேசம் ) |

## ஸ்டார்கார் – ஐரோப்பாவின் இடைக்கற்கால மையம்

இது வடகிழக்கு இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட இடைக்கற்காலத்தின் ஒரு திறந்தவெளி குடியிருப்பு பகுதியாகும். இப்பகுதியில் உயிரி எச்சங்கள் காணப்படுவது முக்கிய சிறப்பம்சமாகும். கற்கள் கொண்டும் எலும்புகள் கொண்டும் உருவாக்கிய கருவிகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. ஆரம்பகால மரவேலைக்கான சான்றுகளும் இங்கு கிடைத்துள்ளன. ஆதிகால மனிதர்கள் இந்தப் பகுதியைத் தற்காலிக வசிப்பிடமாக பயன்படுத்தியதாகக் கருதப்படுகிறது.






### சரைநாஹர்ராய்: இந்தியாவில் ஒரு இடைக்கற்கால மையம்

உத்தரப்பிரதேசத்தின் பிரதாப் நகர் மாவட்டத்தில் 'ஆக்ஸ்போ' ஏரியின் கரையில் சரைநாஹர்ராய் அமைந்துள்ளது. இடைக் கற்காலத்தின் முக்கிய அம்சமான 'நுண்ணிய கற்கள்' இங்கு கண்டுபிடிக்கப்படுள்ளன. இங்குக் கிடைத்த உயரமான மனித எலும்புகள் முக்கியமான தொல்பொருள் சான்றுகளாகும். இவற்றில் ஆண்களின் உயரம் 180 சென்டிமீட்டரும் பெண்களின் உயரம் 170 சென்டிமீட்டரும் ஆகும். வேட்டையாடுவதற்காக அம்பும் வில்லும் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுகிறது. விதைகள் சேகரித்து சேமித்து வைத்ததற்கும் விலங்குகளின் தோல்கள் ஆடைகளாகப் பயன்படுத்தியதற்கான சான்றுகளும் உள்ளன.

பழைய கற்காலத்திற்கும் இடைக் கற்காலத்திற்கும் இடையிலான மனித வாழ்க்கையின் வேறுபாடுகளைப் பட்டியலிடவும்.

## நவீன கற்காலம் (Neolithic Age)

மனித வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியக் காலமாகும். 'நியோஸ்' (நவீனம்) 'லித்தோஸ்' (பாறை) என்ற சொற்களிலிருந்து நியோலத்திக் என்ற சொல் உருவானது. மனிதன் 'தன்னையே உருவாக்குகிறான்' (Man makes Himself) என்ற நூலில் கோர்டன் சைல்ட். மனித வாழ்க்கையை மாற்றியமைத்த புதிய கற்காலத்தின் இரண்டு முக்கிய மாற்றங்களைக் கீழே குறிப்பிடுவது இவ்வாறாகும்.

*இது "மனித பொருளாதார நிலையை முற்றிலுமாக மாற்றிய முதல் புரட்சியாகும். மனிதனின் உணவுத்தேவையை நிறைவேற்றுவதில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது புதிய கற்காலத்திலாகும். உணவுக்கு உகந்த தாவரங்கள், வேர்கள், மற்றும் மரங்களைத் தேர்ந்தெடுத்து நடுவதற்கும் பயிர் செய்யவும் மேம்படுத்துதற்கும் ஆரம்பித்தனர். தன்னால் உணவு அளிக்க முடிகின்றதும் பாதுகாப்பு அளிக்க முடிகின்றதுமான விலங்குகளைத் தொலை நோக்குப் பார்வையுடன் பழக்கி வளர்ப்பதில் மனிதன் வெற்றி கண்டான். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும்.*

மேற்குறிப்பட்ட விளக்கத்தில் நவீன கற்காலத்தில் என்னென்ன மாற்றங்கள் குறிப்பிட்டுள்ளன.

- 
- 

சுற்றுப்புறத்தில் மனிதனுடைய ஈடுபாட்டினால் ஏற்பட்ட மாற்றங்களே இதற்கு அடிப்படையாயின. நவீன கற்காலத்தில் புதிய வாழ்வாதார முறைகளுக்கு மனிதன் தொடக்கமிட்டான். அவைக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- விலங்குகளைப் பழக்கி வளர்த்தனர்
- வேளாண்மையின் ஆரம்பம்




வரைபடத்தைக் கவனியுங்கள். பிறை சந்திரன் வடிவில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியை நீங்கள் காணலாம். கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பகுதியை விவசாயத்தின் ஆரம்பம் என்று கூறுகிறார்கள். இப்பகுதி 'வளமான பிறை சந்திரன்' (பெர்டையில் கிரசன்ட்) என்று அழைக்கபடுகிறது. இந்தப் பகுதி இன்று எந்தெந்த நாடுகளில் உள்ளது என்று கண்டுபிடிக்கவும்?

விலங்குகளைப் பழக்கி வளர்ப்பதற்கும் வேளாண்மையைத் தொடங்குவதற்கும் மனிதனைத் தூண்டிய காரணிகள் எவையென்று பார்ப்போம்.

- மக்கட்தொகை பெருக்கம்
- மனித குடியிருப்புகளின் அதிகரிப்பு
- சிக்கலான சமூக அமைப்பு
- உணவுப்பொருட்களின் பற்றாக்குறை
- தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட மாற்றம்

ST-519-3-SOC.SCI.-I (T)-9-VOL-1





நவீன கற்காலத்தின் கருவிகள் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. படங்களை உற்றுநோக்கி அவற்றின் சிறப்பம்சங்களைக் கண்டறியவும்.

- மெருகூட்டிய கருவிகள்
- 
- 

இத்தகையக் கருவிகள் வேளாண்மை செய்வதற்கும் மரங்களை வெட்டுவதற்கும் நிலத்தை உழுவதற்கும் மனிதனுக்கு உதவின. இது மனித வாழ்வில் பெரும் மாற்றத்திற்கு துவக்கம் குறித்தது.

வேளாண்மை மற்றும் கால்நடைவளர்ப்பு, உணவு பொருட்களின் நிலையான விநியோகக்தை உறுதி செய்தது. இதன் விளைவாக நிரந்தர குடியிருப்புகள் மற்றும் விவசாய கிராமங்கள் வளர்ந்து வந்தன. மண்பாண்டங்கள் செய்தல், களிமண் கொண்டு உருவாக்கிய செங்கற்களின் பயன்பாடு, தானியங்கள் சேமிப்பதை உறுதிசெய்தன. விவசாயத்தில் அதிக உற்பத்தி ஏற்பட்டதால் சமூகத்தின் ஒரு பிரிவினர் விவசாயத்திலிருந்து விடுபட்டு பிற தொழில்களில் ஈடுபடத் தொடங்கினர். மண்பாண்டம் செய்தல், நெசவு செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபடத் தொடங்கினர். இவ்வாறு சமூகத்தில் பல தொழில்பிரிவுகள் உருவாக காரணமானது. இது சமூக அமைப்பில் பெரிய மாற்றங்களுக்கு துவக்கம் குறித்தது. இன்று நாம் காணும் மனித முன்னேற்றங்களுக்கு அடிப்படை புதிய கற்காலத்தில் உருவான மாற்றங்களாகும். இத்தகைய மாற்றங்களின் பின்னணியில்தான் இந்தக் காலகட்டத்தைப் "புதிய கற்கால புரட்சி" என்று தொல்பொருள் ஆய்வாளரான கோர்டன் சைல்ட் குறிப்பிடுகிறார்.



மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் நவீன கற்கால மாற்றங்ககளை ஒரு நழுவு வரைபடத்தின் வழியாக விளக்கவும்.

- விலங்குகளைப் பழக்கி வளர்த்தல்
- 
- 
- 
- 

உலக வரைபடத்தை உற்று நோக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ள நவீன கற்கால மையங்கள் எந்தெந்த நாடுகளிலுள்ளன எனக் கண்டுபிடித்து அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.




| நவீன கற்கால மையங்கள் | நாடுகள் |
|---|---|
| ஜெரிகோ | ------------------------------------------------ |
| ஜார்மோ | ------------------------------------------------ |
| அலிகோஷ் | ------------------------------------------------ |
| மெகர்கட் | ------------------------------------------------ |

## ஈராக்கின் குர்திஷ் குன்றுகளில் ஜார்மோ

ராபர்ட் ஜே, பிரைட்வுட், குர்திஷ் மலைகளில் (நவீன ஈராக்) ஜார்மோயில் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு தலைமை தாங்கினார். ஜார்மோ மக்கள் பார்லி மற்றும் இரண்டு வகையான கோதுமைகளைப் பயிரிட்டிருந்தனர். ஆடுகளையும் பிற விலங்குகளையும் பழக்கி வளர்த்ததற்கான சான்றுகள் உள்ளன. இங்குள்ள வீடுகள் சிறு குடிசைகளாயிருந்தன. அவர்கள் களிமண் கொண்டு மனிதனுடையவும் விலங்குகளுடையவும் உருவங்களை உருவாக்கியிருந்தனர். அவர்கள் உருவாக்கிய மனித உருவங்களில் மிக முக்கியமானது ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் உருவம் ஆகும்.



### மெகர்கட் : இந்தியத் துணை கண்டத்தின் நவீன கற்கால மையம்

நவீன கற்காலத்தின் முக்கிய சிறப்பம்சம் மனிதன் விலங்குகளைப் பழக்கி வளர்த்தல், வேளாண்மை ஆகியவற்றிற்கு தொடக்கம் குறித்த பழைய கற்கால இந்தியாவின் முதல் பகுதியே மெகர்கட். (தற்பொழுது பாகிஸ்தானில் உள்ளது) என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார். இப்பகுதி 'பிரட் பாஸ்கட் ஆப் பலுசிஸ்த்தான்' (bread basket of Baluchistan) என்று அழைக்கப்படுகிறது .

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் வெவ்வேறு கற்காலங்களைப் பகுப்பாய்வு செய்து ஒரு டிஜிட்டல் பதிப்பைத் தயாரித்து சமூக அறிவியல் மன்றத்தில் காட்சிப்படுத்தவும்.

- கருவிகள்
- வாழ்வாதாரங்கள்
- கருத்துப் பரிமாற்றம்

## உலோக காலம் (Metal Age)

மனிதன் ஆயுதங்களை உருவாக்குவதற்கு கற்களுக்குப் பதில் உலோகங்களைப் பயன்படுத்தியதுடன் உலோக காலத்திற்குள் நுழைந்தான். தொழில்நுட்பத்தில் மனிதன் முன்னேற்றம் அடைந்த காலம் உலோக காலம். மனிதன் முதன்முதலில் பயன்படுத்திய உலோகம் தாமிரம் (செம்பு) ஆகும்.

இக்கால கட்டத்தில் இயற்கையான தாமிரத்தை ஆயுதங்களாகவும் கருவிகளாகவும் மாற்றும் தொழிநுட்பத்தில் மனிதன் திறன் பெற்றான். ஆரம்பகால வேளாண்ம கிராமங்களான சாதல் ஹோயூக் (துருக்கி), சயோனு (வடக்கு சிரியா) மற்றும் அலிகோஷ் (ஈரான்) போன்ற இடங்களிலிருந்து தாமிரம் (செம்பு) கண்டுபிடிக்கப்பட்டது. BCE 7000 இதன் காலகட்டமாகக் கருதப்படுகிறது.

கல்லாலான கருவிகளைவிட செம்புக் கருவிகளின் நன்மைகள் யாவை?

- பொருத்தமான வடிவத்திலும் உருவத்திலும் மாற்ற முடியும்.
- அதிக காலம் நிலைநிற்கும்
-
-

## தாமிரக் கற்காலம் (Chalcolithic Age)

கற்காலத்தைப் பற்றி நாம் ஏற்கனவே விவாதித்திருக்கிறோம் அல்லவா? செம்புக் கருவிகளைப் பயன்படுத்திய காலத்திலும் மனிதன் கற்கருவிகளைக் கைவிடவில்லை. கற்கருவிகளுடன், செம்புக்கருவிகளையும் பயன்படுத்திய காலகட்டம் தாமிரக் கற்காலம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இடங்களிலிருந்து தாமிர காலத்தின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.



தைமாபாத்தில் (மகாராஷ்டிரா) இருந்து அடக்கம் செய்வதற்கு பயன்படுத்திய தாழிகள்



நெவாசாவில் (மகாராஷ்டிரா) இருந்து கிடைத்த களிமண் மற்றும் கற்கலை பொருட்கள்.

## வெண்கலக்காலம் (Bronze Age)

*BCE 6000 க்கும் 3000 க்கும் இடையில் மனிதன் காளை மற்றும் காற்றின் சக்தியைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான். கலப்பை, சக்கரம் படகு போன்றவற்றையும் பயன்படுத்தத் தொடங்கினான். உலோகவியல் மேலும் வளர்ந்தது. அதன் விளைவாக விவசாயம் பரவலாகிக் கூடுதல் உற்பத்திக்கு வழிவகுத்தது. விவசாயம் அல்லாத பிறத் தொழில்களும் வலுப்பெற்றன. இதன்மூலம் மனிதன் நாகரிக வாழ்க்கைக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். மனிதன் 'தன்னையே உருவாக்குகிறான்'. கோர்டன் சைல்ட்* (Man Makes Himself).

**வெண்கலம் (Bronze)**

செம்பும் (Copper) வெள்ளீயமும் (Tin) சேர்ந்த ஒரு உலோகக்கலவை வெண்கலம் ஆகும். செம்பைவிட கடினமான ஓர் உலோகம் ஆகும்

இது நாகரிக வாழ்வில் மனிதன் நுழைவதைப் பற்றிய விளக்கம் ஆகும். நாகரீகம் என்பது ஒரு பகுதியில் மக்கள் கூட்டமாக வாழ்வதும், பாதிக்கும் மேற்பட்டவர்கள் வேளாண் அல்லாத பிறத்தொழில்களான கைவினை பொருட்களை உருவாக்குதல், கைத்தொழில்கள், வாணிபம் போன்றவற்றில் ஈடுபட்டு வாழக்கூடிய ஒரு சூழல் ஆகும். பரந்த தெருக்கள், பொதுக்கட்டிடங்கள், மேம்பட்ட வசதிகள், பரபரப்பான வாழ்க்கை, மற்றும் பொழுதுபோக்கு ஆகியவை நகர வாழ்க்கையின் சிறப்பியல்புகளாகும். நாகரிக வாழ்க்கை வெண்கல காலத்தில் தொடங்கியதுதான் என்பதை நீங்கள் கற்றுக் கொண்டீர்களல்லவா?

எவையெல்லாம் வெண்கலக் கால நாகரீகங்கள் என்பதை அட்டவணைப்படுத்தவும்.

- 
- 
- 
- 

ஹரப்பா நாகரிகம் இந்தியாவில் வெண்கலக் காலத்தில் வளர்ந்தது. ஹரப்பா, மொகஞ்சதாரோ, லோதல் போன்ற நகரங்களில் திட்டமிட்டுக் கட்டப்பட்ட பொதுக் கட்டிடங்கள், பெரிய குளம் (Great Bath), வீடுகள், தெருவீதிகள், கழிவுநீர் ஓடைகள், தானியக்களஞ்சியங்கள், பல்வேறு வகையான கைவினைப்பொருட்கள் மற்றும் வாணிபம் ஆகியவை நகரமயமாக்கலை நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. அதனால்தான் ஹரப்பா நாகரிகம் இந்திய வரலாற்றில் முதலாம் நகரமயமாக்கல் என்று கூறப்படுகிறது.

**சப்த சிந்து பிரதேசம்**

சப்த சிந்து பகுதி என்பது சிந்து நதி மற்றும் அதன் துணை நதிகளை உள்ளடக்கிய பகுதி ஆகும்.

**இந்தோ – ஐரோப்பிய மொழிகள்**

சமஸ்கிருதம், லத்தின், கிரேக்கம், ஜெர்மன், ஆங்கிலம், ஸ்வீடன், ரஷ்யன், போலிஷ், ஸ்பானிஷ், பிரெஞ்சு மற்றும் ரோமானியம் ஆகியவை இதில் அடங்கும்.

## வேதகாலம் (Vedic Age)

ஹரப்பா நாகரீகத்தின் அழிவிற்குப் பிறகு சப்தசிந்து (வடமேற்கு இந்தியா) பகுதிக்குள் நுழைந்தவர்கள் ஆரியர்கள் ஆவர். ஆரியர்கள், இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசினார்கள். மொழியியல் சான்றுகளின் அடிப்படையில் ஆரியர்கள் மத்திய ஆசியாவில் தோன்றியவர்களாக கருதப்படுகிறார்கள்.

இக் காலத்தை பற்றிய அறிவை வேதங்களிலிருந்து பெறுகிறோம். எனவே இக்காலம் வேதகாலம் என அழைக்கப்படுகிறது. வேதகாலம் B.CE. 1500 க்கும் 600 க்கும் இடைப்பட்ட காலமாகும்.

வேதகாலம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.

வேத காலம்

→ ஆரம்பகால வேத காலம் (ரிக்வேதம் இயற்றப்பட்ட காலம்)

→ பிற்கால வேத காலம் (யஜுர், சாம, அதர்வ வேதங்கள் இயற்றப்பட்ட காலம்)

ஆரம்பகால வேதகாலத்திலும், பிற்கால வேதகாலத்திலும் மக்களின் வாழ்க்கையை ஒப்பிடலாம்:–

| ஆரம்பகால வேதகாலம் | பிற்கால வேதகாலம் |
|---|---|
| • சப்தசிந்து பிரதேசம் | • கங்கை சமவெளிவரை பரவியது. |
| • இடையர்களின் பொருளாதார நிலை | • வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. |
| • அரை நாடோடிகள் (Semi-Nomadis) | • நிலையான வாழ்க்கை |
| • சமூகத்தில் பெண்களுக்கு உயர்ந்த அந்தஸ்து. | • பெண்களின் சமூக அந்தஸ்து குறைந்தது. |
| • காடுகளை வெட்டி தீயிட்ட பகுதிகளில் வேளாண்மை செய்தனர். | • இரும்பின் பயன்பாடு |
| • சமூகம் பல இனக்குழுக்களாக காணப்பட்டது. | • சாதி அமைப்பு வலுவடைந்தது. |
| • வழிபாடுகள் எளிமையானவையும் ஒவ்வொரு குடும்ப தலைவரும் செய்யக்கூடியதுமாக இருந்தன. | • வழிபாடுகள் சிக்கலானதாகவும், விலை உயர்ந்ததாகவும் மாறின. ஒரு குறிப்பிட்ட பிரிவின் வழிபாடு அவர்களது உரிமையாக மாறியது. |
| • இயற்கை சக்திகளை வழிபட்டனர். | • சிறப்பு வழிபாட்டு தெய்வங்கள் தோன்றின. |
| | • பல்வேறு கைவினை பொருட்களின் துவக்கம் |

## வேத இலக்கியம்

வேதம் என்றால் அறிவு (வித்) வேதம் நான்கு வகைப்படும் அவை ரிக்வேதம், யஜூர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம் என்பவை ஆகும். இவற்றில் ரிக்வேதம் முதல் வேதமாகும். நான்கு வேதங்களைத் தவிர பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் ஆகியவை வேத இலக்கியத்தின் பகுதிகளாகும். வேத காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான முக்கிய உறைவிடம் வேதகால இலக்கியமாகும்.

## சாதி அமைப்பு

நான்கு சாதிகள் இருந்தன. பிராமணர்கள் சமயப்பணிகளில் ஈடுபட்டிருந்தனர். சத்திரியர்கள் நாட்டை ஆட்சி செய்ததோடு பாதுகாக்கவும் செய்தனர். வைசியர்கள் விவசாயம் மற்றும் வணிகத்தில் ஈடுபட்டனர். சூத்திரர்கள் இந்த மூன்று வகுப்பினருக்கும் அடிமைப்பணி செய்திருந்தனர்.

கற்காலத்திலிருந்து உலோகக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து கருத்தரங்கு நடத்தவும்.

இந்தப் பாடத்தில் மனித வரலாற்றின் தொடக்கத்தையும் பல காலங்களில் உருவான வளர்ச்சியையும் பார்த்தோம். காடுகளிலும் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்து இயற்கையோடும் விலங்குகளோடும் சண்டையிட்டு போராடி தன் புத்திசாலித்தனத்தால் முன்னோக்கிப்பயணத்தைத் தொடங்கிய மனிதன், தன் தேவையைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப கண்டுபிடிப்புகளையும் படைப்புகளையும் உருவாக்கினான்.

முன்னேற்றப் பாதையில் நாகரிகமடைந்த மனிதன் தனக்கு சொந்தமான சமூக, அரசியல், மற்றும் பொருளாதார அமைப்புகளை உருவாக்கினான். இன்று நாம் 21 ஆம் நூற்றாண்டை அடைந்தபோது, மனித வரலாற்றின் பல்வேறு வளர்ச்சி கட்டங்களைத் திரும்பிப் பார்க்கும்போது மனிதர்கள் எவ்வளவு முன்னேறிச் சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

## தொடர் செயல்பாடுகள்

- ஆரம்பகால மனிதர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் மற்றும் கருவிகளின் படங்களைச் சேகரித்து ஒரு டிஜிட்டல் ஆல்பத்தை உருவாக்கவும்.
- வெவ்வேறு கற்கால மனிதர்கள் பயன்படுத்திய ஆயதங்கள் மற்றும் கருவிகளின் மாதிரிகளை உருவாக்கி அவற்றை சமூக அறிவியல் வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- மனித வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் விளக்கப்படம் தயாரிக்கவும்.
- ஆரம்பகால மனித வாழ்க்கையுடன் தொடர்புடைய இடங்களைக் குறித்து ஒரு நிலப்படத்தொகுப்பை உருவாக்கவும்.

# 2 கருத்துக்களும் ஆரம்பகால நாடுகளும்

*‘சித்தார்த்தன் ராஜவீதி வழியாக இரதத்தில் பயணித்த பொழுது மிகவும் நலிந்த ஒரு வயதான முதியவரைக் கண்டார். சற்று நேரம் கழித்து கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு நடுங்கிக் கொண்டு இருக்கும் ஒரு மனிதனையும் கண்டார். அதன்பிறகு, வெள்ளை துணியால் போர்த்தப்பட்ட ஓர் இறந்த உடலைச் சிலர் புலம்பிக்கொண்டு தங்களது தோள்களில் சுமந்து கொண்டுச் சுடுகாட்டை நோக்கி செல்வதையும் கண்டார். மிகுந்த வேதனை அளிக்கக்கூடிய இந்தக் காட்சிகளைக் கண்ட பின்னர் அவர், ஒரு துறவி தெருவில் பிச்சை எடுப்பதையும் கண்டார். மனவேதனை ஒன்றும் இல்லாது அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்ட அந்தத் துறவி சித்தார்த்தனை மிகவும் கவர்ந்தார். இக்காட்சிகள்தான் சித்தார்த்தனுக்கு அமைதியும் சமாதானமும் கிடைப்பது துறவர வாழ்க்கையில்தான் என்ற தீர்மானத்திற்கு வருவதற்கு வழிவகுத்தது.*

*A,L. Basham, The wonder that was India, 2003) p. 167*

*ஏ எல் பாஷாம் ,தி வோண்டர் தேட் வாஸ் இந்தியா , 2003) 1981*

இது B.C.E 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்து வந்த தத்துவ ஞானி கௌதம புத்தரின் வாழ்க்கை தொடர்பான ஒரு நிகழ்வாகும். இளவரசனாக, பணக்கார மற்றும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தாலும் மகிழ்ச்சியில்லாத சித்தார்த்தனின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமுனையை இது விவரிக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள மக்களின் துன்பங்களுக்கான காரணத்தைத் தேடி துறவர வாழ்க்கையை மேற்கொண்டு ஞானோதயம் பெற்றுப் பின்னர் கௌதம புத்தர் என அறியப்பட்டார்.

ST-519-4-SOC.SCI.-I (T)-9-VOL-1

B.C.E 6 ஆம் நூற்றாண்டு உலக வரலாற்றில் ஒரு முக்கியதுவம் வாய்ந்த காலகட்டம் ஆகும். இது இந்தியாவில் வர்த்தமான மகாவீரர், கௌதம புத்தர், ஈரானில் சரதுஸ்டிரா, சீனாவில் கண்பூசியஸ், கிரேக்கத்தில் ஹெராக்ளிட்டஸ் போன்றவர்கள் புதிய சிந்தனைகளைப் பரப்பிய காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் உலகம் முழுவதும் பொருளாதாரம் அரசியல் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்ட புதிய அரசாட்சி முறைகள் நடைமுறைக்கு வந்தன. அத்தகைய மாற்றங்கள் குறித்துதான் இந்த அலகில் நாம் கலந்துரையாட உள்ளோம்

## கங்கை சமவெளியில் கருத்தியல் புரட்சி



ஆரம்ப கால இரும்புக் கருவிகள்

B.C.E 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் புதிய சிந்தனைகள் முக்கியமாக கங்கை சமவெளியில் உருவாயின. நவீன சிந்தனைகளின் வளர்ச்சியில் கங்கை சமவெளியிலுள்ள பௌதீக நிலைகள் முக்கிய பங்கு வகித்தன. இந்த பௌதீக சூழல்கள் பின்வரும் காரணிகளால் உருவாயின.

- இரும்புக் கருவிகளின் பரவலான பயன்பாடு
- விவசாய உற்பத்தியில் அதிகரிப்பு
- வியாபாரம் மற்றும் நகரங்களின் வளர்ச்சி

B.C.E 6 ஆம் நூற்றாண்டில் விவசாயம் மற்றும் கால்நடைகளை அடிப்படையாக கொண்ட ஒரு சமூக – பொருளாதார அமைப்பு கங்கை சமவெளியில் உருவானது. இது யாகங்களுக்கும் மிருகபலிக்கும் முக்கியத்துவம் அளித்த வேதகால சடங்குகளுடன் பொருத்தப்படுவதாக இல்லை. யாகங்களுக்காக கால்நடைகளைப் பரவலாக பலியிடுவது அவற்றை சார்ந்திருந்த விவசாயத்தை கடுமையாக பாதித்தது. இது வேதகால சடங்குகளுக்கு எதிராக மக்களைச் சிந்திக்கத் தூண்டியது.

வியாபார முன்னேற்றத்தின் மூலம், சிறந்த பௌதீக சூழ்நிலைகளைக் கைகொண்ட வைசியர்கள் அதற்குத் தகுந்த உயர்ந்த சமூக நிலையை அடைய விரும்பினர்.

இக்காலதில் சாதி அமைப்பிற்கு வெளியே சில பிரிவினர் தோன்றினர். அவர்களில் பணக்கார ஜமீன்தார்கள் மிக முக்கியமானவர்களாக இருந்தனர். வியாபாரத்தைத் தொழிலாகக்கொண்ட இவர்களிடம் நிலம் கைவசமிருந்தது. பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையிலிருந்த இவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தை அடைந்தனர். இந்தச் சமூகச் சூழலில்தான் புதிய சிந்தனைகள் உயர்ந்து வந்தன. இச்சிந்தனைகளில் முக்கியமானவை சமண – புத்த மதத்தத்துவங்கள் ஆகும். வைசியர்கள், ஜமீன்தார்கள் ஆகியோர்களின் ஆதரவு இந்தச் சிந்தனைகளுக்குக் கிடைத்தது.



BCE 6 ஆம் நூற்றாண்டில் விவசாயப் பொருளாதாரம் வலுப்பெற்று புதிய கருத்துக்களின் எழுச்சிக்கு சூழல் உருவாக்கியது எவ்வாறு? கலந்துரையாடவும்.

## சமண மாதம்

வர்த்தமான மகாவீரர் பீகாரில் வைசாலிக்கு அருகிலுள்ள குந்தலை என்ற கிராமத்தில் பிறந்தார். சமண மத நம்பிக்கையின்படி, வர்த்தமான மகாவீரர் 24 வது தீர்த்தங்கரர் ஆவார்.

### தீர்த்தங்கரர்கள்

'தீர்த்தங்கரர்' என்ற சொல்லின் பொருள் "துறவரத்தால் ஞானம் பெற்றவன்." என்பதாகும் சமண நம்பிக்கையின்படி 24 தீர்த்தங்கரர்கள் உள்ளனர். அவர்களில் ரிஷபதேவர் முதல் தீர்த்தங்கரர் ஆவார். 23 வது தீர்த்தங்கரர் பார்சுவநாதர் ஆவார். வர்த்தமான மகாவீரர் 24 வது (கடைசி) தீர்த்தங்கரரும் ஆவார். பார்சுவனாதரின் கொள்கைகளோடு தன்னுடைய தத்துவங்களையும் சேர்த்து சமணமதத்தின் கருத்துக்களை மகாவீரர் பரப்பினார்.



மதுரையிலிருந்து கிடைத்த தீர்த்தங்கரரின் சிலை



**சமணமத கருத்துக்கள்**

- உலகிலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் உயிர் உள்ளது.
- உயிர்களுக்குத் தீங்கு செய்யாதே.
- பிறப்பும் மறுபிறப்பும் கர்மாவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.

வேதங்களின் அடிப்படை கொள்கைகளை மறுத்த மகாவீரர் முக்தி அடைவதற்கு மூன்று கொள்கைகளை முன்வைத்தார். அவை சரியான நம்பிக்கை, சரியான அறிவு, சரியான செயல் என்பவையாகும். மூன்றும் மூன்று ரத்தினங்கள் என அழைக்கப்படுகிறன்றன. மகாவீரர் தன்னுடைய கருத்துக்களைப் பிராகிருத மொழிகளில் மக்களிடையே பரப்பினார். சமணமதத்தின்படி துறவிகளும், பெண் துறவிகளும் ஐந்து விரதங்களைக் கடைபிடிக்க வேண்டியிருந்தது. அவை எதையும் கொல்லக்கூடாது, திருடக் கூடாது, பொய் சொல்லக் கூடாது, பிரம்மசாரியத்தைக் கடைபிடிக்க வேண்டும், சொத்துக்களைச் சேர்த்து வைக்கக் கூடாது என்பவையாகும். பிற்காலத்தில் சமண மதத்தில் ஸ்வேதம்பரர், திகம்பரர் என இரண்டு பிரிவினர் உருவாயினர். சமண மதம் வலியுறுத்தும் அகிம்சை என்ற கொள்கை இந்தியத் தத்துவச் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

### கேரளமும் சமண மதமும்

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பரவிய சமணமதம் கேரளத்திலும் பரவியிருந்தது. கேரளத்தில் வயநாடு ஒரு முக்கியமான சமணமத மையமாக இருந்தது. சமண மதக் கோயில்களின் எஞ்சியப் பகுதிகள் இப்போதும் இங்கு காணப்படுகின்றன.



வயநாட்டில் சமணமதகோயில்

## துன்பங்களுக்கான காரணம் தேடிய கௌதம புத்தர்

திகநிகாயாவில் வைத்து நடைபெற்ற புத்தருடைய நீண்ட சொற்பொழிவில் முப்பத்தி ஒன்றாவது சூக்தத்தில் (Sukta), புத்த மதத்தில் புதிதாகச் சேர்ந்த இளைஞனிடம் புத்தர் கூறும் அறிவுரை பின்வருமாறு.

குடும்ப வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் தங்களது கடமைகளைச் சரியாகவும் செய்யவேண்டும். முதலாளிகள் தங்கள் வேலையாட்களுடனும் தொழிலாளர்களுடனும் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவர்களின் உடல் தகுதிக்கு மீறி மிகவும் கடுமையான பணிகளைச் செய்ய வைக்கக் கூடாது. அவர்களுக்குத் தேவையான உணவும் நியாயமான ஊதியமும் வழங்க வேண்டும். உடல், மனநலன்களைப் பாதுகாக்க வேண்டும். தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு கிடைக்கும் நியாயமான ஊதியத்தில் திருப்தியடைந்து நன்றாக வேலை செய்து தங்கள் முதலாளியின் அந்தஸ்தை உறுதிபடுத்த வேண்டும்.

புத்தரின் அறிவுரைகளும் தத்துவங்களும் மிகவும் எளிமையானவையும் நடைமுறைக்கு ஏற்றவையுமாக இருந்தன. வேதங்களையும் யாகங்களையும் முறைகளையும் அவர் நிராகரித்தார். கங்கை சமவெளியில் புதிய சூழ்நிலைகளுக்கு உகந்தவைகளாக இருந்தது அவருடைய 'அகிம்சை' என்ற கொள்கை. விவசாய வளர்ச்சியில், விவசாயத்திற்காக நிலத்தைப் பண்படுத்துவதற்கும் வியாபாரப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கும் கால் நடைகளின் தேவை இருந்தது. ஆனால் யாகங்களில் கால்நடைகளை அதிகமாகப் பலியிட்டது விவசாயத்தையும் பொருட்கள் கொண்டுசெல்வதையும் அதிகமாக பாதித்தது. யாகங்களுக்கு எதிராக உள்ள அவருடைய கொள்கை, விவசாயிகளைப் பெரிதும் கவர்ந்தது. சாதாரண மக்களின் மொழியாயிருந்த பாலி மொழியில் புத்தர் தனது கொள்கைகளைப் பரப்பினார்.

புத்தருடைய வாழ்க்கையில் நடந்த மிக முக்கிய நிகழ்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் ஒரு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு தயார் செய்யவும். மேலும் விவரங்களைப் பள்ளி நூலகத்திலிருந்து சேகரிக்கவும்.



மதுரையிலிருந்து கிடைத்த புத்தர் சிலை (CE ஒன்றாம் நூற்றாண்டு )




### அஷ்டாங்க மார்க்கம்

- சரியான கண்ணோட்டம்
- சரியான சிந்தனை
- சரியான வார்த்தை
- சரியான செயல்
- சரியான வாழ்க்கை
- சரியான முயற்சி
- சரியான நினைவு
- சரியான தியானம்

அஷ்டாங்க மார்க்கம் மத்திய மார்க்கம் என்றும் அறியப்பட்டது.

### மத்திய மார்க்கம்

ஒருவர் கடினமான சந்நியாசம்(துறவரம்) மேற்கொள்வதை புத்தர் எதிர்த்தார். அதுபோல ஆடம்பர வாழ்க்கை மேற்கொள்வதையும் புத்தர் நிராகரிக்கின்றார். இரண்டிற்கும் இடையிலுள்ள மத்திய மார்க்கத்தைப் புத்தர் உபதேசிக்கின்றார்.

## புத்தரின் தத்துவங்கள்

- வாழ்க்கை துன்பங்கள் நிறைந்தது
- ஆசைதான் துன்பத்திற்கு காரணம்
- ஆசையைத் துறந்தால் துன்பங்கள் இல்லாமலாகும்
- இதற்கு அஷ்டாங்க மார்க்கத்தைக் கடைபிடிக்கவும்

## ஸ்தூபங்கள்

புத்தரின் பௌதீக எச்சங்களையோ, புத்தர் பயன்படுத்திய பொருட்களையோ புதைத்த இடங்களில் உருவாக்கிய கட்டிடங்ளே ஸ்தூபங்கள். இவை அரைவட்ட வடிவில் கட்டப்பட்டுள்ளன. சிற்பவேலைபாடு நிறைந்த சாஞ்சி, சாரநாத் போன்ற இடங்களிலுள்ள ஸ்தூபங்கள் மிகவும் புகழ்பெற்றவைகளாகும்.

புத்தமத பிரச்சாரத்திற்காகத் துறவிகளின் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருந்ததன. சாதி – பாலின வேறுபாடுகள் இல்லாமல் எல்லோரையும் இச்சங்கங்களில் உட்படுத்தினர். இக்குழுக்களில் பெண்கள் 'பிக்குணிகள்' என்றும் ஆண்கள் பிட்சுகள் என்றும் அறியப்பட்டனர். கலந்துரையாடல்கள், பெரும்பான்மையினரின் கருத்துக்கள் இவற்றின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.


மத்திய பிரதேசத்து செஞ்சி ஸ்தூபம்

“நதிகள் ஒழுகி சமுத்திரத்தில் கலந்து அவற்றின் பெயர்கள் இல்லாமலாவதுபோல் ஒருவர் புத்த துறவிகள் சங்கத்தில் உறுப்பினரானவுடன் அவருடைய சாதி, பதவி, குடும்பம் போன்றவற்றை மறந்துவிடுகின்றார்" என்று புத்த மத துறவிகள் சங்கத்தைப் பற்றிப் புத்தர் குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் புத்தமதம், மகாயானம், ஹீனயானம் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. மகாயானத்தைப் பின் பற்றுபவர்கள் புத்தரைத் தெய்வமாக வணங்கினர். புத்தமதம் இந்திய கலாச்சாரத்திற்கு ஏராளம் நன்கொடைகளை அளித்துள்ளது. "புத்தமத சங்கத்தின்" செயல்பாடுகள் சமூகத்தில் ஜனநாயக உணர்வும் மதிப்பும் வளர உதவியாக அமைந்தன.

### உலகம் இந்தியாவை அறிகின்றது

பண்டைய உலகம் இந்தியாவை அறிந்தது புத்தமதத்தின் மூலமாகும். சீனா, ஜப்பான், பர்மா, திபெத், ஆப்கானிஸ்தான், தென் கிழக்காசியா, இலங்கை ஆகிய நாடுகளில் புத்த மதம் பரவியது.

புத்த மத துறவிகளுடைய அமைப்புகளின் செயல்பாடுகள் ஜனநாயகமுறையில் இருந்தனவா? மதிப்பிடுக?


உத்தர் பிரதேசத்தில் சாரநாத் ஸ்தூபம்

### கேரளமும் புத்தமதமும்

புத்தமத நம்பிக்கைகள் கேரளத்திலும் பரவலாக இருந்தன. பண்டைய தமிழ் இலக்கியமான 'மணிமேகலை'யின் நாயகியான மணிமேகலை புத்தமதத்திற்கு மாறியதாக கூறப்படுகிறது. புத்தர் சிலைகள் கேரளத்தில் பல்வேறு இடங்களில் இருந்ததற்கான எச்சங்கள் கிடைத்துள்ளன. சில மலையாளச் சொற்களும் இடப்பெயர்களும் புத்தமத தாக்கத்தைக் குறிப்பிடுகின்றன.

BCE 6–ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட சமூக – பொருளாதார சூழல்களைப் புத்தர் எவ்வாறு எதிர்கொண்டார்? கலந்துரையாடவும்.

குறிப்புகள்

- வேதச் சடங்கு முறைகள்
- சாதி முறை
- பெண்களின் நிலை

புத்தர் மற்றும் மகாவீரர் முன் வைத்த பொதுவான கருத்துக்களைக் கண்டுபிடித்துப் பட்டியலிடவும்.

## பொருள்முதல்வாதம்

வேறுபட்ட கருத்துக்களால் உருவானதே பண்டைய காலம் முதல் உள்ள இந்தியக் கலாச்சாரத்தின் முக்கிய சிறப்பம்சம். B.C.E 6 ஆம் நூற்றாண்டில் பல கருத்துக்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் ஒன்றுதான் பொருள்முதல்வாதம். இந்தக் கருத்தினைக் கூறியவர் அஜிதா கேசகம்பலின் ஆவார். இவர் புத்தரின் சமகாலத்தவர். இந்த உலகில் அனைத்து மத நடைமுறைகளும் அர்த்தமற்றவை என்றும், சொர்க்கம், நரகம் இல்லை என்றும் அவர்கள் கருத்து தெரிவித்தனர். பொருள்முதல்வாதிகள் 'மனிதன் நான்கு காரணிகளால் ஆக்கப்பட்டுள்ளான்' அவர்கள் இறக்கும்போது அவர்களின் திடப்பொருள் பூமியிலும், திரவம் தண்ணீரிலும், வெப்பம் நெருப்பிலும், சுவாசம் காற்றிலும், புலன்கள் வெற்றிடத்திலும் கரைகின்றன" என்று கூறுகின்றனர்.

➢ இவர்கள் பொருள்முதல்வாதிகள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள். ஏன்?

புதிய கருத்துக்கள் மற்றும் மதங்களின் உருவாக்கத்துடன் தொடர்புடைய இடங்களை உள்ளடக்கிய ஒரு மெய்நிகர் சுற்றுப் பயண (Virtual Tour) அறிக்கையைத் தயாரிக்கவும்.

## மகாஜனபதங்கள் அல்லது ஆரம்ப கால நாடுகள்

இதுபோன்ற முடிவுகள் ஒன்றாக எடுத்து காலந்துரையாடப்படும் வரை, அவர்கள் ஒன்றாக வேலை செய்யும் வரை, பெரியவர்கள் மதிக்கப்படும் வரை, ஆதரவும் கிடைக்கவும் கவனமாகவும் கேட்கும் வரை, வஜ்ஜியிலுள்ள பெண்கள் சுதந்திரமாக வாழும் வரை; கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள வழிபாட்டுத்தலங்கள் இருக்கும் வரை; வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் சுதந்திரமாக நடமாடும் வரை, அவர்கள் மதிக்கப்படும் வரை வஜ்ஜி நிலைத்திருக்கும்.

ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட புத்தர் படைப்பான 'திகநிகாயா' யில் வஜ்ஜி (மகாஜனபதம்) என்ற தேசத்தைப் பற்றி புத்தர் கூறியது மேலே குறிபிட்டுள்ளது. அன்றைய வஜ்ஜியின் ஆட்சி முறைகளைப்பற்றி என்னென்ன காரியங்களை இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடிகிறது?

| |
|---|
| • கூடி விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன. |
| • |
| • |
| • |
| • |
| • |

### ஜனபதங்கள்

'ஜனபதம்' என்றால் மக்கள் வாழும் இடம் என்று பொருள். காடுகளை தீ பயன்படுத்தி எரித்து விளைநிலங்களும், குடியிருப்புகளும், உருவாகின. மக்கள் நிலையாக வாழ்ந்தனர். இவ்வாறு ஜனப்பதம் உருவானது. பிற்கால வேதங்களில் பல்வேறு ஜனப்பதங்களைப் பற்றி குறிப்பிடப்படுகின்றன.

BCE 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த பல நாடுகளில் வஜ்ஜியும் ஒன்று. இந்த நாடுகள் எவ்வாறு உருவாயின என்று பரிசோதிக்கலாம்.

வேதகாலத்தில் கோத்திர சமூக முறை நிலைநின்றிருந்தது. அவர்கள் 'ஜனா' என்று அழைக்கப்பட்டனர். வேளாண்மை பரவலாகிவிட்டதால் இந்தப் பழங்குடியினர் ஒரே இடத்தில் நிரந்தரமாகக் வாழத் தொடங்கினர். இவை ஜனபதங்கள் என்று அழைக்கப்பட்டன.

ஜனபதங்களிலுள்ள வேளாண்மையின் கூடுதல் உற்பத்தி நகரங்கள் மற்றும் வாணிப வளர்ச்சிக்கு வழி வகுத்தது. வாணிபத்துடன் பல்வேறு கைவினைப் பொருட்களின் உற்பத்தி மையங்களாகவும் நகரங்கள் மாறின. இத்தகைய மாறுபட்ட பொருளாதார செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் ஒழுங்குபடுத்துவதற்கும் சில கட்டுப்பாடுகள் தேவைப்பட்டன. இச்சூழலில் கோத்திரங்களை அடிப்படையாகக்கொண்ட ஆட்சிமுறை மறைந்தது.

ST-519-5-SOC.SCI.-I (T)-9-VOL-1

## நகரங்கள்

நீண்ட நாள் பயணத்திற்குப் பிறகு புத்தரும் அவரது சீடர் ஆனந்தரும் குஷி நகரை அடைந்தனர். கலந்துரையாடலின் போது பல விஷயங்களையும் புத்தரின் நிர்வாணத்தையும் பற்றி பேசினர். காடுகளில் மண் குடிசைகள் மட்டுமே இருக்கும். குஷிநகரத்தில் மரணம் நடக்கக்கூடாது என்றும் சம்பா, ராஜகிரகம், ஸ்ராவஸ்தி, சாகேதா, கௌசாம்பி, வாரணாசி போன்ற பெருநகரங்களில்தான் இறுதி இளைப்பாறுவதற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் ஆனந்தன் கருத்து தெரிவித்தார். புத்த படைப்பான 'திகனிகாயிலிருந்து' என்னென்ன தகவல்களைப் புரிந்து கொண்டீர்கள்?

வேளாண்மைக்கும், மண்ணுக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத உறவு இந்தக் காலத்தில்தான் வளர்ந்தது. இது அவரவருடைய நிலபகுதி என்ற உணர்வை உருவாக்கியது. இவ்வாறுதான் நாடு உருவானது. ('அங்குத்தரணிகாயா' என்ற புத்தமத படைப்பில் 16 அரசுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.) இவை மகாஜனப்பதங்கள் என்று அழைக்கப்பட்டன. வரலாற்றாசிரியர்கள் மேலே விவரிக்கப்பட்ட மாற்றங்களை இரண்டாவது நகரமயமாக்கல் என்று குறிப்பிடுகின்றனர்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலபடத்திலிருந்து 16 மகாஜனபத வார்த்தைகளைக் கண்டுபிடித்து பட்டியலிடவும்.



நிலபடம் 1

| | | |
|---|---|---|
| • | • | • |
| • | • | • |
| • | • | • |
| • | • | • |
| • | • | |
| • | • | |

## மகாஜனபதங்களின் ஆட்சி முறை



(கௌசாம்பியில் உள்ள சுவர்)
மகாஜனபதத்தின் தலைநகரம்

சமகால படைப்புகள் மகஜனபதங்களின் ஆட்சி முறை பற்றிய சில தகவல்களை வழங்குகின்றன. அக்காலத்தில் பொறுப்புடைய வரிவசூல் முறையும், நிலையான இராணுவமும் நிலவிலிருந்ததன. பாலி மொழியில் எழுதப்பட்ட நூல்களில் காணப்படும் பலி என்ற சொல்லுக்கு வரி என்று பொருள்படும். பாகா என்பது மற்றொரு வகை வரி. தானியங்களையும் கால்நடைகளையும் முக்கிய வரிகளாக கொடுத்து வந்தனர். காடுகளில் வசிப்பவர்கள் வன வளங்களை வரியாகச் செலுத்தும்போது கைவினை கலைஞர்கள் குறிப்பிட்ட நாட்களில் வேலை செய்தனர்.

ஆட்சி அமைப்பிற்கு ஏராளம் அதிகாரிகள் இருந்தனர். சதபதபிராமணர்' என்ற படைப்பில் மன்னருக்கு உதவிய சேனானி, புரோகிதன், கிராமணி என்பவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளனர். மகாஜனபதங்களுக்கு கோட்டைகளும் தலைநகரங்களும் இருந்தன.

## மகதத்தின் வளர்ச்சி



கோத்திர அரசு முறையிலிருந்து மகாஜன பதங்கள் வரையிலான வளர்ச்சியின் பல்வேறு நிலைகள், அவற்றின் சிறப்பம்சங்கள் என்பவற்றை கண்டுபிடித்து கலந்துரையாடவும்.

பதினாறு மகாஜனபதங்கள் தங்களுக்குளே அதிகாரத்திற்காகத் தொடர்ந்து போர்களில் ஈடுபட்டன. இறுதியில் வெற்றி பெற்றது மகதம் ஆகும். வரைபடம் (1) லிருந்து மகதத்தின் இருப்பிடத்தைக் கண்டறியவும். மகதம் தற்போது எந்த மாநிலத்தில் உள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

மகதம் நல்ல மழைகிடைக்கின்ற வளங்களைக் கொண்ட ஓர் உற்பத்தி பிரதேசமாக இருந்தது, மேலும் இரும்பு தாதும் இங்கு அதிகமாக காணப்பட்டது. எனவே ஆயுதங்களுக்குத் தேவையான இரும்பு அங்கிருந்தே கிடைத்தது. அன்றைய போர்களில் யானைகள் முக்கிய பங்கு வகித்தன. மகதத்தின் காடுகளில் யானைகள் அதிகமாக இருந்தன. இது மகதத்தின் போர்வெற்றியை உறுதி செய்தது. கங்கையும் அதன் துணை நதிகளும் சரக்குப் போக்குவரத்திற்கு உறுதுணையாக இருந்தன. பிம்பிசாரன், அஜாதசத்ரு போன்ற திறமையான ஆட்சியாளர்கள் மகதத்திலிருந்தனர்.

### மகத்ததின் அரச வம்சங்களும் முக்கிய அரசர்களும்

- ஹரியங்கா அரச வம்சம் – பிம்பிசாரன், அஜாதசத்ரு
- சிசுநாகஅரசவம்சம் – சிசுநாகன்
- நந்த அரசவம்சம் – மகாபத்ம நந்தன்

மகதத்தின் வளர்ச்சிக்கு புவியியல் காரணிகள் முக்கிய காரணங்களாக இருந்ததாக நீங்கள் கருதுகிறீர்களா?எதனால்?

## மகத்தலிருந்து மௌரிய பேரரசிற்கு

மகதத்தில் பல்வேறு பட்ட அரசவம்சங்கள் ஆட்சி செய்திருந்தனர். அவர்களில் நந்தவம்சத்தின் கடைசி ஆட்சியாளரான தனநந்தனைத் தோற்கடித்து BCE. 321 இல் சந்திரகுப்தமௌரியர், மௌரியப் பேரரசை நிறுவினார்.

*"இது ஓர் அழகான பெரியநகரம் ஆகும். இந்த நகரைச் சுற்றி பெரிய மதில் இருந்தது. இது 64 நுழைவு வாயில்கள் மற்றும் பல கோபுரங்களையும் கொண்டுள்ளது. இரண்டு மூன்று அடுக்கு மாடிவீடுகள் மரத்தாலும் மண்கட்டைகளாலும் கட்டப்பட்டிருந்தன. அரசனின் அரண்மனையும் மரத்தால் உருவாக்கபட்டதாக்கும்."*

மௌரிய பேரரசின் தலைநகரமான பாடலிபுத்திரம் (இன்றைய பாட்னா) நகரத்தைக் குறித்துக் கிரேக்க தூதுவரான மெகஸ்தனிஸின் குறிப்பே மேலே தரப்பட்டுள்ளது. கௌடில்யர் எழுதிய 'அர்த்தசாஸ்திரம்' பேரரசர் அசோகரின் கல்வெட்டுகள், அப்போது புழக்கத்தில் இருந்த நாணயங்கள் போன்றவை மௌரிய அரசின் வரலாற்றை ஆய்வு செய்ய உதவுகின்றன

### அர்த்தசாஸ்திரமும் மற்றும் சப்தாங்க சித்தாந்தமும்:



மௌரிய பேரரசு பற்றிய தகவல் முக்கியமான வரலாற்றுச் சான்றாகும் கௌடில்யரால் எழுதப்பட்ட அர்த்த சாஸ்திரம். மைசூரிலுள்ள தொல்பொருள் நூலகத்துறைத் தலைவராக இருந்த ஆர்.சியாம சாஸ்திரிக்கு தஞ்சாவூரில் உள்ள ஓர் பண்டிதரிடமிருந்து அர்த்த சாஸ்திரத்தின் கையெழுத்துப் பிரதி கிடைத்தது. இதை 1907 இல் சியாமசாஸ்திரி வெளியிட்டார். இந்தப் படைப்பு 15 அத்தியாயங்களைக் கொண்டது. ஒரு நாடு ஏழங்க கோட்பாடுகளின் அடிப்படையில் நிலைநிற்கின்றது என அர்த்தசாஸ்திரம் விவரிக்கிறது.

- சுவாமி – அரசன்
- அமாத்யா – அமைச்சர்கள்
- ஜனபதம் – நிலம் மற்றும் மக்கள்
- தண்டா – நீதி நியாயம்
- துர்கம் – கோட்டைகட்டி பாதுகாக்கப்பட்ட பகுதி
- சேளஷம் – கருவூலம்
- மித்ரா – நட்பு நாடுகள்

மௌரிய பேரரசின் மிகவும் புகழ் பெற்ற ஆட்சியாளர் அசோக சக்ரவர்த்தியாவார். அவர் கலிங்கம் (இன்றைய ஒடிஷா) – (வரைபடம்–2 பார்க்கவும்) அவர் கலிங்கத்தின் மீது படையெடுத்து கீழடக்கியதால் மௌரிய பேரரசு விரிவடைந்தது. கலிங்க யுத்தத்திற்குப் பிறகு அசோக சக்ரவர்த்தி போர்களைக் கைவிட்டதாகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.



ரூமின்தேயி (லும்பினி) கல்வெட்டு

'புத்த சாக்யமுனி பிறந்த இந்த இடத்தில் தேவனாபிரியா பிரியதர்ஷி அரசாட்சி பொறுப்பை ஏற்று இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்விடத்திற்கு நேரில் வந்து வழிபாடு செய்தார். இது அந்தப் புனித ஆத்மா பிறந்த இடமாகும் என்பதை அறிவிக்கும் பொருட்டு இவ்விடத்தில் கருங்கல் மதில்களால் அமைந்த ஸ்தூபம் நிறுவப்பட்டது. லும்பினியிலுள்ள மக்களைப் 'பலி' யிலிருந்து விடுவித்து அவர்களுக்கு விளைச்சலின் எட்டில் ஒரு பகுதியை $(\frac{1}{8})$ மட்டும் வீதமாக கொடுத்தால் போதும் என தீர்மானிக்கப்பட்டது. நேப்பாளில் ரூமின்தேயியில் (லும்பினி) உள்ள கல்வெட்டுகளும் அதன் மொழிபெயர்ப்பும் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டிலிருந்து மௌரிய பேரரசைக் குறித்து என்னென்ன நீங்கள் புரிந்துகொண்டீர்கள்?

- ..............................................................................................
- ..............................................................................................
- ..............................................................................................
- ..............................................................................................

## அசோக கல்வெட்டுக்கள்

அசோகச் சக்ரவர்த்தியின் ஏராளம் கல்வெட்டுக்கள் இந்திய துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்துள்ளன. இவை பிராமி, கரோஷ்டி அராமிக் லிபிகளில்(எழுத்துக்கள்) எழுதப்பட்டுள்ளன. அசோகரின் கல்வெட்டுகளை முதன்முதலாக 1838 இல் ஆங்கிலேயரான ஜேம்ஸ் பிரின்செப் வாசித்தார். பெரும்பாலான கல்வெட்டுக்களிலும் 'தேவனாம்பிரிய' (தேவனுக்கு விருப்பமானவன்) என அரசனைக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் கர்நாடகத்திலுள்ள மாஸ்கி, உதேகுளம், நிட்டூர் போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகளில் 'அசோகர்' என்ற பெயர் உள்ளது.

நவீன இந்தியாவில் பயன்படுத்தியிருந்த கல்வெட்டுகளும் பிராமி எழுதிலிருந்து உருவனவையாகும் .


பிராமி


ஹிந்தி


வங்காளி


மலையாளம்


தமிழ்

## மௌரிய ஆட்சி

மௌரிய பேரரசு பரந்த பரப்பளவைக் கொண்டது எனப் பார்த்தீர்கள் அல்லவா?. இனி நாம் அவர்களின் ஆட்சிமுறை எவ்வாறு இருந்தது என்பதைக் குறித்து பார்ப்போம்.

ஆட்சி வசதிக்காக நம்முடைய நாட்டைப் பல்வேறு மாநிலங்களாகப் பிரித்திருக்கிறோம்? மட்டுமல்ல, மாநிலங்களுகெல்லாம் தலைநகர்களும் உள்ளன. மௌரிய பேரரசு இதுபோல் பல்வேறு மாகணங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இந்த மாகண பகுதிகள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலிருந்தன. தலைநகரமான பாடலிபுத்திரம் மௌரிய சக்ரவர்த்தியின் நேரடி கட்டுப்பாட்டிலிருந்தது.

வரைபடம் 2 லிருந்து மாகாணங்களின் தலைநகர்களைக் கண்டுபிடித்து அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.

வரைபடம் 2




▲ மாகாணங்களின் தலைநகர்கள்

◈ பேரரசின் தலைநகர்

| | |
|---|---|
| தென் மாகாணங்கள் | |
| மேற்கு மாகாணங்கள் | |
| வடக்கு மாகாணங்கள் | |
| கிழக்கு மாகாணங்கள் | |

மௌரியர்களின் இராணுவத்திற்கு ஐந்து பிரிவுகள் இருந்தன. அவை காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை, கடற்படை என்பவை. இராணுவ ஆட்சியின் பொறுப்பை 30 உறுப்பினர்களைக் கொண்ட குழு கண்காணித்தது.

தனது குடிமக்களுகிடையில் ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்ட அசோக சக்கரவர்த்தி கைகொண்ட கொள்கைகள் 'அசோகதம்மா' (தர்மா) என்று அறியப்படுகின்றது. அசோகரின் செப்பேடுகளிலிருந்துதான் நாம் இதனைக் குறித்து அறிந்துகொண்டோம்.

'அசோகத்தம்மா'யிலுள்ள முக்கியமான கருத்துக்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.




பரந்த பேரரசின் பொறுப்பான ஆட்சிக்கும் பல்வேறு சமூக பிரிவுகளை ஒருங்கிணைத்து நிறுத்துவதற்கும் வேண்டி உருவாக்கப்பட்ட கொள்கையாகும். 'அசோகத்தம்மா' என்று முக்கிய வரலாற்று ஆசிரியரான 'ரொமீலா தாபர்' குறிப்பிடுகின்றார்.


ரொமீலா தாபர்

இன்றைய இந்திய ஆட்சிமுறையிலுள்ள என்னென்ன சிறப்பியல்புகள், மௌரிய பேரரசின் ஆட்சிமுறையில் காணமுடியும். என்பதை கலந்துரையாடி ஒப்பீடு செய்யவும்.



## வாணிப வளர்ச்சி

இந்தியாவில் வழகத்திலிருந்த ஆரம்பகால நாணயங்களே படத்தில் தரப்பட்டுள்ளன. இவை முத்திரை பதிக்கப்பட்ட நாணயங்கள் (Punch Marked Coins) என்று அறியப்படுகிறன. இவை வெள்ளி மற்றும் செம்பினால் உருவாக்கப்பட்டவையாகும். இவை வணிகத்திற்காக நாணயங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றாகும் .




கரை வழியும், கடல் வழியும் மற்றும் நதிகள் மூலமாகவும் பொருட்கள் கொண்டுசெல்லப்பட்டன. தானியங்கள், துணிவகைகள், உலோகம் போன்றவை வணிகத்தின் முக்கிய பொருட்களாக இருந்தன. அக்காலப் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள 'சேத்', 'சாத்தவாஹகர்கள்' என்ற சொற்கள் வணிகர்களைக் குறிப்பிடுகின்றன .

வரைபடத்தைக் உற்றுநோக்கி, எந்தெந்தப் பகுதிகள் வழியாக வாணிபம் நடை பெற்றது என்பதைக் கண்டுபிடித்து அடியாளப்படுத்தவும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் மகாஜனப்பதங்கள் உருவானதன் சூழ்நிலையிலும் பிற்காலத்தில் எவ்வாறு மௌரிய பேரரசாக உருவெடுத்தது என்பதையும் குறித்தல்லவா இதுவரை விவாதித்தோம். இதே காலயளவில் சமமான அரசியல் மாற்றங்களைக் கண்ட மற்றொரு பகுதி தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள

கிரீஸ் ஆகும்.

## கிரேக்கத்தில் நாடு உருவாக்கம் :

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்திலிருந்து கிரேக்கத்தின்

வரைபடம் 4




இருப்பிடத்தைக் கண்டறியவும்.

கிரீஸில், பொதுவான பாதுகாப்பு மற்றும் ஆட்சிகாகவும் கிராமங்கள் ஒன்றிணைதிருந்தன. அவை நகர நாடுகள் என்று அறியப்பட்டன. நகர நாடு என்பது ஒரு நகரமும் அதை சுற்றியுள்ள விவசாயக் கிராமங்களுமாகும். மலைகளும், எரிமலைகளும் இந்த நகர நாடுகளுக்கு இயற்கையான எல்லைகளை வழங்கின. சில நகர நாடுகள் தீவுகளாக இருந்தன. நகர நாடுகளின் தலைநகரங்கள் உயர்ந்த மலைகளில் அமைந்திருந்தன. ஏதென்ஸ், ஸ்பாட்டா, கொரிந்து, தீப்ஸ் போன்றவை கிரீசின் முக்கியமான நகர நாடுகள் ஆகும்.

## ஜனநாயக வழியில் ஏதென்ஸ்:

இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரே, கிரேக்க நாட்டில் ஏதென்சில் காணப்பட்ட ஆட்சி முறை நவீன ஜனநாயகத்தைப்போல இருந்தது. இது மற்ற நகர நாடுகளில் உள்ள ஆட்சிமுறையிலிருந்து

வேறுபட்டதாகும். அடிமைகள் அல்லாத 30 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்களையும் குடிமகன்களாகக் கருதியிருந்தனர் இந்தக் குடிமகன்கள் அடங்கிய ஒரு குழு முக்கியமான காரியங்களில் தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். இதன் அடிப்படையில் அவர்கள் ஆண்டுக்கு நான்கு முறை கூட்டம் கூடினர். வணிகர்களாகப் பணிபுரிந்த

மத்தியதரை கடல் பகுதியில் (Mediterranean sea) வணிகத்தின் முக்கிய மையமாக, ஏதென்ஸ், ஒரு வளமான நகர – நாடக இருந்தது. ஏதென்சில் கப்பல் கட்டுதல் மற்றும் கடற்பயணம் ஆகியவற்றில் திறமையான பலர் இருந்தனர். அவர்கள் தொடர்ந்து அருகிலுள்ள பகுதிகளுக்குச் சென்று புதிய ஆலோசனைகளையும் திறன்களையும் பெற்றனர். பிற பகுதிகளிலிருந்து பல சிந்தனையாளர்கள் ஏதேன்சுக்கு கவரப்பட்டனர். அவர்கள் சோபிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர். இவ்வாறு ஏதேன்சில் வந்தடைந்த சிந்தனையாளர்களில் ஒருவரான ஹெறாடோட்டஸ் வரலாற்றின் தந்தை என்று அழைக்கப்படுகிறார் .

நவீன ஜனநாயகத்திலிருந்து ஏதென்ஸின் ஆட்சிமுறை எந்தெந்த நிலைகளில் வேறுபட்டிருந்தது?

மகாஜனப்பதங்களையும் கிரேக்கத்தின் நகர நாடுகளையும் ஒப்பிடு செய்க.

வெளிநாட்டினர், கைவினைக் கலைஞர்கள், பெண்கள் ஆகியோரை குடிமக்களாகக் கருதவில்லை.

BCE ஆறாம் நூற்றாண்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்ட ஒரு காலகட்டமாகும். அந்த நேரத்தில் மக்களின் வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. பௌதீக வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் அரசியல் அரங்கிலும் சிந்தனைத் துறையிலும் பிரதிபலித்தன. இதன் விளைவாகப் புதிய சிந்தனைகள் தோன்றின. இவை பிற்கால மனித வராற்றிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின.


BCE ஆறாம் நூற்றாண்டு
பௌதீக துறை மாற்றங்கள்
கருத்துக்களில் உருவான மாற்றங்கள்
புத்த மதம்
சமணமதம்
பொருள்முதல் வாதம்
இரும்புக் கருவிகளின் பயன்பாடு
வேளாண்மை முன்னேற்றம்
உற்பத்தி அதிகரிப்பு
வணிகம்
நகரங்கள்
நாடுகளின் உருவாக்கம்
ஜனபதங்கள்
மகாஜனபதங்கள்
மகதம்
மௌரிய பேரரசு
கிரேக்கத்தின் நகர நாடுகள்
அலக்சாண்டரின் பேரரசு

## தொடர் செயல்பாடுகள்

- BCE 6 ஆம் நூற்றாண்டில் புதிய சிந்தனைகளைப் பிரபலப்படுத்திய சிந்தனையாளர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை தயாரிக்கவும். படங்களைச் சேர்த்து அவற்றை அழகுபடுத்தவும்.
- ஜனபதங்கள் முதல் மௌரியப் பேரரசு வரை என்ற தலைப்பில் நிலபடங்களை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் பிரசெண்டேஷனைத் தயாரிக்கவும்.
- கருத்துக்களும் நாடு உருவாக்கமும் என்ற தலைப்பில் ஒரு வினாநிரல் தயாரிக்கவும்.

# 3 பூமிதானமும் இந்தியச் சமூகமும்

வாகாடக மன்னன் இரண்டாம் ஸ்ரீ விந்திய சக்தி மகாராஜாவின் உத்தரவின்படி...

இந்தக் கிராமத்தின் பாதியை நமது வெற்றிக்காகவும் நீண்ட ஆயுளுக்காகவும் இம்மை மறுமையின் செழிப்பிற்காகவும் நாம் பிராமணர்களுக்குத் தானமாக வழங்குகிறோம். சதுர்வேதங்களாலும் முந்தைய மன்னர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட வழக்கமான விதி விலக்குகள் இந்த நிலமானியத்திற்கும் பொருந்தும். இங்குள்ள ஆட்சி வேறு பிரதேசங்கள்போல் அல்ல. உப்பு, மதுபானம் ஆகியவற்றை உற்பத்திச்செய்யக்கூடாது. அரச கருவூலத்திற்கு பணமோ, உணவு தானியங்களோ வைப்புநிதியாக கொடுக்கத்தேவையில்லை . மன்னருக்குப் பூவோ பாலோ கொடுக்கத் தேவையில்லை. அதிகாரிகளுக்குப் பசு மாடு மற்றும் காளை ஆகியவற்றைக் கொடுக்கத் தேவையில்லை. நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டாம். குதிரைகளுக்கான அலங்கார பொருட்களோ கரியோ வழங்க தேவையில்லை. சட்டப் பாதுகாவலர்கள் இங்கு நுழையக்கூடாது. பயணம் செய்யும் அதிகாரிகளுக்கு படுக்கைகள், அடுப்புகள் போன்றவற்றைக் கொடுக்கத் தேவையில்லை. அரசருக்கு வரி செலுத்த வேண்டியதில்லை. பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் பணம் செலுத்த வேண்டியதில்லை. நிலத்தடி புதையல் வைப்புகளில் உரிமை இருக்கும். நிலத்திற்கு வேலி அமைக்கவும் பூமியை உயர்த்தவும் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்தவும் உரிமை இருக்கும். இதற்கு இடையூறு விளைவிப்பவர்கள் அல்லது காரணமாக இருபவர்களுக்குப் புகாரின் அடிப்படையில் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

**Cdr Alok Mohan, Ancient Indian Inscriptions, Vol 3, 1967, pp-122-124*

இது வாகாடக மன்னன் இரண்டாம் விந்தியசக்தி (CE 355 – 400) –ஆல் வெளியிடப்பட்ட ஆணையாகும். அரசரின் கைவசமிருந்த சில நிலங்களைச் சிறப்பு உரிமைகளோடு பிராமணர்களுக்குக் கொடுப்பது பற்றி இந்த ஆணையில் விளக்கப்படுகிறது. இது பூமிதானம் என்றறியப்படுகிறது.

- அரசர் பூமிதானம் வழங்குவதின் நோக்கம் என்ன?
- பூமிதானங்கள் எப்பொழுது ஆரம்பமாயின? எதற்காக?
- இவை சாதாரணமான தானங்களைப் போன்றவையா?

பூமிதானம் பற்றிய குறிப்புகளைப் புத்தமத நூல்களில் காணலாம். ஆனால் மௌரியர்களுக்குப் பின்னர் இது பரவலாகி பெரும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தியது.

மௌரிய பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பலவித அரசவம்சங்கள் அதிகாரத்தில் வந்தன. கீழே தரப்பட்டுள்ள நிலப்படத்திலிருந்து அவற்றை கண்டறிந்து பதிவு செய்யவும்.




- ..........................................
- ..........................................
- ..........................................
- ..........................................
- ..........................................
- ..........................................
- ..........................................
- ..........................................

## பூமிதானம் (Land Grants)

இவர்களில் தக்காணத்தை மையமாகக்கொண்டு ஆட்சி செய்த சதவாகன மன்னர்கள் அன்றைய சமூக அமைப்பில் முன்னணியில் இருந்த பிராமணர்களை மகிழ்விக்க நிலம் வழங்கும் முறையைத் தொடங்கினர். இந்த முறை CE 4 –ஆம் நூற்றாண்டில் பாடலிபுத்திரத்தை மையமாக கொண்டு ஆட்சிக்கு வந்த குப்த மன்னர்களின் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டது.

### குப்த அரசர்கள்

குப்த பேரரசை நிறுவியவர் ஸ்ரீ குப்தர் ஆவர். பிற முக்கியமான மன்னர்கள்

- முதலாம் சந்திரகுப்தர்
- சமுத்திர குப்தர்
- இரண்டாம் சந்திரகுப்தர்
- முதலாம் குமாரகுப்தர்
- ஸ்கந்த குப்தர்




### குப்தர் காலத்தில் பூமிதான முறையில் நிகழ்ந்த மாற்றங்களைப் பார்ப்போம்

- தானமாக வழங்கப்பட்ட நிலத்தின் மீது அரசனின் செல்வாக்கு குறைந்தது.
- தானமாக அளிக்கப்பட்ட பூமியிலிருந்து வரி வசூல் செய்தல் மற்றும் நீதி நடைமுறைப் படுத்தும் அதிகாரம் நிலத்தின் உரிமையாளருக்கு அளிக்கப்பட்டது.
- நிலத்தைத் தானமாகப் பெற்றவர்கள் தாங்கள் விரும்பியவருக்கு நிலத்தைத் தானமாக வழங்கும் உரிமையும் பெற்றனர்.
- படிப்படியாக, அரசரும் பிரபுக்களும் தங்கள் பெற்ற சேவைகளுக்கு உரிய பிரதிபலத்தைப் பணத்திற்குப் பதிலாக நிலமாக வழங்கினர்.
- பிராமணர்கள் அரசனிடமிருந்து அதிக நிலத்தைப் பெற்றாலும், படிப்படியாக பிற வகுப்பினருக்கும் நிலமானியங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு பூமி பெருமளவில் தானமாக அளிக்கப்பட்டதால் சமூகத்தில் பெரும் செல்வம் மற்றும் அதிகாரம் கொண்ட சக்தியான நில உரிமையாளர்களின் ஒரு பிரிவு உருவானது. எந்த உரிமையும் இல்லாமல் நிலத்தில் வேலைசெய்யும் வேலையாட்கள் நிலஉரிமையாளர்களைச் சார்ந்தும் இருந்தனர். இந்நிலையில் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், அடிமைகள் போன்றோர் பூமியில் கட்டுண்டவர்களாயினர். ஒரே மண்ணில் பிறந்து, வாழ்ந்து இறந்தனர். அவர்கள் தங்கள் நில உரிமையாளர்களுக்காக வேலை செய்தனர். கீழ்மட்டத்தில் இருந்த மக்கள் மேல் மட்டத்தில் இருப்பவர்களுக்கு வரிக்குமேல் தங்கள் உழைப்பையும் இலவசமாக கொடுக்க வேண்டியிருந்தது. இந்த நிலையை இந்திய நிலமானியமுறை என்று கூறுவர். இக்காலத்தில் வேளாண்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

*வேளாண்மை பரவுவதற்கு உதவிய காரணிகள்*

- வேளாண்மைக்குப் பயன்படாத பகுதிகளைக் கூட விவசாயத்திற்கு ஏற்ற பகுதிகளாக மாற்றினர்.
- புதிய சமூக அமைப்பு வேளாண்மைக்குத் தேவையான தொழிலாளர்களை வழங்கியது.
- வேளாண் தொழில் நுட்பம் மற்றும் காலநிலை பற்றிய பிராமணர்களின் அறிவு.
- பல்வேறு வகையான நீர்ப்பாசன முறைகள்.

*எந்தெந்த நீர்ப்பாசன முறைகள் விவசாயம் பரவ உதவின என்று பார்ப்போம்.*



குப்தர் காலத்தில் இந்தியாவில் உருவான நிலமானியமுறையின் சிறப்பம்சங்களைப் பற்றி விவாதிக்கவும்.



நீர் சக்கரம்

## கைத்தொழிலும் வியாபாரமும்

பூமி தானங்களின் விளைவாக விவசாயத்தின் பரவல், விவசாயம் அல்லாத பிற தொழில்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது. மக்கள் பல்வேறுவகையான கைத்தொழில்களை வாழ்வாதரங்களாக ஏற்றுக்கொண்டனர். தொல்பொருட்கள் மற்றும் இலக்கிய நூல்களிலிருந்து இக்காலகட்டத்தில் கைத்தொழில்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. அகழ்வாராய்ச்சியில் இருந்து கிடைக்கப்பட்ட தொல் பொருட்கள் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து அக்காலத்தில் எந்தெந்த கைத்தொழில்கள் இருந்தன என்பதைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்பவும்.

| கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் | கைத்தொழில்கள் |
|---|---|
| • மண்பாண்டங்கள் | • மண்பாண்டங்களை உருவாக்கல் |
| • தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த கற்களால் செய்யப்பட நகைகள் | • ........................ |
| • முத்துக்கள் | • ........................ |
| • கண்ணாடிப் பொருட்கள் | • ........................ |
| • பட்டு மற்றும் பருத்தி ஆடைகள் | • ........................ |
| • யானை தந்தத்தால் செய்யப்பட்ட சிற்பங்கள் | • ........................ |

பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் அவர்களின் குழுக்களை உருவாக்கினர். இது கில்டுகள் (வணிகக் குழு) என்றழைக்கப்படுகிறது. ஆட்சியமைப்பு வணிகக்குழுக்களுக்கு அனுமதி கொடுத்தது. கில்ட் உறுப்பினர்கள் வணிகக் குழுவின் விதிகளுக்கு கட்டுப்படவேண்டியிருந்தது.

### வணிகக்குழு

கைத்தொழில் செய்பவர்களுடையவும், வணிகர்களுடையவும் அமைப்பே வணிகக் குழு. மூலப்பொருட்களைச் சேகரித்தல், உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உற்பத்திப் பொருட்களைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்லுதல் என்பது இவர்களின் கடமையாகும்.

ST-519-7-SOC.SCI.-I (T)-9-VOL-1

## வியாபாரமும், வாணிபமும் (Trade and Commerce)

குப்தர் காலத்தில் உள்நாட்டு வியாபாரம் மிக பரவலாக இருந்தது. வேளாண்மைக்கு மேல் பல்வேறு கைத்தொழில்களும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியும் இருந்தன என்பதை அட்டவணையிலிருந்து புரிந்து கொண்டீர்களல்லவா? கைவினைக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட இத்தகைய பொருட்கள் வாணிபத்தில் மிக முக்கிய பொருட்களாகயிருந்தன. ஆடைகள் மிகப் பெரிய உள்நாட்டு வாணிபப் பொருட்களில் ஒன்றாகும். பல்வேறு வகையான துணிகள் (மஸ்லின், காலிகோ, லினன்) அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன.

**நகரத்தார் (நகர தலைவர்)**

நகரங்களில் செல்வந்தர்களாகிய வணிகர்கள் ஆட்சியிலும் பங்காளிகளாயிருந்தனர். வியாபாரத்திலும் இவர்கள் சிறந்தவர்களாக இருந்தனர்.

குப்தர்களுக்கு மேற்கு ஆசியா, மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ரோம் ஆகிய நாடுகளுடன் வெளிநாட்டு வாணிபத் தொடர்பு இருந்தது. இந்தக் காலக்கட்டத்தில் புதிய வாணிபப் பாதைகள் வளர்ச்சியடைந்ததன. சிறந்த தங்க நாணயங்கள், வெள்ளி மற்றும் செம்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன. நகரத்தலைவர் மற்றும் சார்தவாஹா ஆகிய வணிகத் தலைவர்களுக்கு ஆட்சியில் பங்களிப்பு இருந்தது. வைஷாலி, பாடலிபுத்ரா, கனோஜ், ஸ்ராவஸ்தி, கௌசாம்பி, உஜ்ஜயினி, மதுரா போன்றவை முக்கியவணிக நகரங்களாக இருந்தன.



முத்திரை பதிக்கப்பட்ட குப்தகால நாணயங்கள் (Puch Marked Coins)

குப்தர் காலத்தின் சில முக்கிய நகரங்கள்




நிலப்படத்திலுள்ள குப்தர் கால நகரங்கள் இன்றைய மாநிலங்களில் எந்தெந்த மாநிலங்களில் உள்ளன என்பதை கண்டறியவும்.

- ..............................
- ..............................
- ..............................
- ..............................
- ..............................
- ..............................
- ..............................
- ..............................

CE 6 ஆம் நூற்றாண்டில், ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததால் மேற்கத்திய நாடுகள் சீனர்களிடமிருந்து பட்டு உற்பத்தி நுட்பத்தை கற்று கொண்டதன் விளைவாக இந்தியாவின் வெளிநாட்டு வியாபாரத்தில் பெரும் மந்தநிலை ஏற்பட்டது. இது உள்நாட்டு வியாபாரத்தை கடுமையாகப் பாதித்தது. கைவினைப் பொருட்கள் செய்பவர்களும், கைத்தொழிலில் ஈடுபட்டவர்களும் நாட்டின் பல பகுதிகளுக்கு வியாபாரத்திற்காகச் செல்வதில் குறைவு ஏற்பட்டது. அவர்கள் தங்களது கிராமங்களில் தங்கி வாழத்தொடங்கினர். இது கலை மற்றும் கைத்தொழில்கள் கிராமமயமாக்கலுக்கு வழிவகுத்தது. வியாபாரத்தின் வீழ்ச்சியும், கைத்தொழில்களின் சரிவும், கிராமமயமாக்கலும் பல முக்கிய நகரங்கள் வீழ்ச்சியடைய காரணமாகின. கௌசாம்பி, ஹஸ்தினாபுரம், அஹிச்சத்திரம், தட்சசீலா, அயோத்தி, உஜ்ஜயினி, மதுரா போன்ற நகரங்கள் தங்கள் புகழை இழந்தன. CE 5 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீனப்பயணியான பாஹியானின் குறிப்புகளில் பெரிய நகரங்களாக விவரிக்கப்பட்டுள்ள பல நகரங்களும் 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீனப்பயணியான ஹூயாங் சாங்கின் குறிப்புகளில் கிராமங்களாக விவரிக்கப்பபட்டுள்ளன. இந்த விளக்கங்கள் அக்காலத்தில் நகரங்களின் வீழ்ச்சியைக் குறிக்கின்றன.

## சமூக வாழ்க்கை

குப்தர்களின் காலத்தில் உருவான பல்வேறு தொழிற்சங்கங்கள் (வணிகக்குழுக்களை) பற்றி முன்னர் விவாதித்தோம் அல்லவா?

புதிய தொழில் குழுக்களுடையவும் பல மக்கள் பிரிவுகளுடையவும் வருகையால் பல துணைப் பிரிவுகள் உருவாக காரணமாயின. நடைமுறையிலிருந்த சாதி முறையால் புதிதாக உருவாகும் தொழில் குழுக்களுக்கு இடமளிக்க முடியவில்லை. இந்த நிலையில் ஒவ்வொரு தொழில் குழுவும், புதிய சாதிகளாகவும், துணைச்சாதிகளாகவும் மாறியது. பலதரப்பட்ட தொழில் குழுக்கள் அல்லாமல் வெளிநாடுகளிலிருந்து அடைக்கலம் புகுந்தவர்கள், காடுகளில் வாழ்ந்தவர்கள் (நிஷாதர்கள்) வேறுபட்ட சாதிகளுக்கு இடையே திருமணங்கள் மூலம் பிறந்தவர்கள் அனைவரும் புதிய சாதிகளாக மாறினர். இதனால் சாதி அமைப்பு சிக்கலாக மாறியது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட முறையில் பிராமணர், சத்திரியர், வைசியர் என்பவர்களுக்கு வழங்கப்பட்ட சமூக அந்தஸ்து மாறவில்லை. 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப்பயணியான ஹுயான்சாங் சூத்திரர்களைப் விவசாயிகள் என்று விவரிக்கிறார். இந்த விளக்கங்கள் சூத்திரர்களின் சமூக நிலையைக் குறிப்பிடுகின்றன.

சதுர்வர்ணா முறைக்கு வெளியே இருந்த 'அந்தியஜர்கள்' என்ற பிரிவினர் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்டனர். அந்தியஜர்களில் மிகவும் தாழ்ந்தவர்கள் 'சண்டாளர்கள்' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் தகனம் செய்யும் வேலை செய்பவர்களாகவும் சாமகாரர்கள் என்று அழைக்கபட்டுபவர்கள் தோல் பதனிடுபவர்களாகவும் இருந்தனர்.

### அனுலோமா பிரதிலோமா திருமணங்கள்

அர்த்தசாஸ்திரம் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இடையிலான திருமணங்களை விளக்குகிறது. உயர்சாதி ஆணுக்கும், தாழ்ந்த சாதி பெண்ணுக்கும் நடக்கும் திருமணம் அனுலோமா திருமணம் எனப்படும்.

உயர்ந்த சாதி பெண்ணுக்கும், தாழ்ந்த சாதி ஆணுக்கும் இடையே நடக்கும் திருமணம் பிரதிலோமா திருமணம் எனப்படும்.

## பெண்களின் நிலை

வாகாடக ராணியாக இருந்த பிரபாவதி குப்தா போன்ற சில ராணிகள் உயர்வாக மதிக்கப்பட்டாலும் பொதுவாகப் பெண்களின் நிலை மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தது. ராணி முதல் கீழ்த்தட்டிலிருக்கும் அனைத்துப் பெண்களும் ஆண்களுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டும். உயர்ந்த வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கு கூட சமூகத்தில் உயர்ந்த பதவியோ, மதிப்போ கிடைக்கவில்லை. பிராமணப் பெண்ணுக்குக்கூட பூமிதானம் கொடுக்கப்பட்டதாக ஆதாரம் இல்லை.

### சண்டாளர் பாஹியானின் குறிப்புகளில்

இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சியின்போது (CE 5 ஆம் நூற்றாண்டு) இந்தியாவிற்கு வருகை தந்த சீனாவைச் சேர்ந்த புத்த பயணியான பாஹியான் சண்டாளர்களைக் குறித்து இவ்வாறு கூறுகிறார். நகரத்திலோ அல்லது சந்தையிலோ நுழையும் சண்டாளர் ஒரு மரப் பலகையில் அடித்து ஒலி எழுப்ப வேண்டும். இவர்கள் வருகையை முன்னரே அறிந்து உயர்சாதியினர் விலகி நிற்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது.

# நாடு: மத்திய அதிகாரமும் உள்ளாட்சி அதிகாரமும்



"குபேரனும், வருணனும், இந்திரனும், அந்தகனும் நிகரானவனும், தனக்கு நிகரான எதிராளியும் பூமியில் இல்லாதவனும்"

குப்தர் காலத்தில் மிகவும் சக்திவாய்ந்த ஆட்சியாளரான சமுத்திர குப்தரைப் பற்றி அலகாபாத்தில் அமைந்துள்ள பிரயாகா மெய்கீர்த்தியின் வரிகளாகும்.

குப்தர்காலத்தில் மன்னரின் அதிகாரம் பற்றிய என்னென்னதகவல்களை இதிலிருந்து பெறலாம்?

- அரசன் கடவுளைப்போலக் கருதப்பட்டான்.
- 

### குப்தர் காலத்தில் கிராம ஆட்சி

குப்தர் காலத்தில் கிராம ஆட்சி 'கிராமபதி' அல்லது 'கிராமத்தலைவரால்' நடத்தப்பட்டது.கிராமத்தில் ஏற்பட்ட தகராறுகளை 'கிராமப் பெரியவர்' என்று அழைக்கப்படும் கிராமத் தலைவர்கள் தீர்த்து வைத்தனர். கிராமத்தில் முக்கியமான மக்கள் பிரிவு விவசாயிகளாயிருந்தனர். தச்சர்கள்/நெசவாளர்கள் மற்றும் கன்று காலி மேய்ப்பவரும் இருந்தனர். இவர்களின் உறுப்பினர்களுக்கு கிராம ஆட்சியில் பிரதிநிதித்துவம் இருந்தது.

குப்த அரசர்களுக்கு விரிவான அதிகாரம் இருந்தது. மேலும் அவர்களுக்கு சில பொறுப்புகளும் இருந்தன. அவை என்னவென்று பார்ப்போம்.

- தாக்குதலிலிருந்து மக்களைப் பாதுகாத்தல்
- பிராமணர்கள், சிரமணர்கள் (புத்த – சமண பிரிவினர்) மற்றும் கோவிலைச் சார்ந்து வாழ்கின்ற மக்களையும் பாதுகாத்தல்.
- நீதி நிர்வாகம் நடத்துதல்

குப்த அரசர்களால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் அங்குள்ள உள்ளூர் மன்னர்கள் தங்களுக்குச் சமமாகக் கருதி ஆட்சியில் தொடர அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டது. குப்த மன்னர்கள் தங்கள் ஆட்சி விவகாரங்களிலும், வாரிசுரிமையிலும் தலையிடவில்லை. ஆனால் அவர்கள் நேரடியாக ஆட்சி செய்த பகுதிகளில் விரிவான ஆட்சி அமைப்பை வளர்த்தனர்.

குப்தர் காலத்து ஆட்சி முறையையும், மௌரியர் காலத்து ஆட்சி முறையையும் ஒப்பிட்டுக் குறிப்புத் தயாரிக்கவும்.

### மெய்க்கீர்த்திகள்

பண்டைய இந்திய மன்னர்கள் தங்கள் சாதனைகளைக் விளம்பரப்படுத்துவதற்காக செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மெய்க்கீர்த்திகள் எனப்படும். CE இரண்டாம் நூற்றாண்டில் முதல் முதலாக செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் ருத்ர தாமனின் ஜூனாகட் மெய்க்கீர்த்தி ஆகும். அசோக மன்னனின் ஜூனாகட் மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதிதான் இந்தக் கல்வெட்டுக்களில் செதுக்கப்பட்டுள்ளது. ராஜாவை புகழ்ந்து பேசுதல், அவரது போர் சாதனைகளை மகிமைப்படுத்துதல் போன்றவை இதன் சிறப்பியல்புகள் ஆகும். தென்னிந்தியாவில் சோழர், ராஷ்டிர கூடர், சாளுக்கியர் மற்றும் பல்லவர் ஆகியோர் மெய்க்கீர்த்தி புதிய உருவத்தில் எழுதுவதைப் பின்பற்றினர். ஆச்சரியப்படுத்தும் ஒரு ஆட்சியாளரைப் பற்றியுள்ள வலராற்றுச் சான்றுகள் என்ற நிலையில் இவை நமக்கு உதவுகின்றன.

### பிரயாக் மெய்க்கீர்த்தி

சமுத்திர குப்த மன்னனின் படையெடுப்புகளையும், போர் வெற்றிகளையும் புகழ்ந்து கொண்டு செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகும். இது அலகாபாத் மெய்க்கீர்த்தி என்று அறியப்படுகிறது. இந்த மெய்க்கீர்த்தி சமுத்திரகுப்தன், வடக்கே நேப்பாளத்திலிருந்து தெற்கே தமிழ்நாடு வரையிலான பகுதிகளைக் கையடக்கியதைக் குறிக்கிறது. குப்த மன்னனின் அரசவையில் கவிஞராயிருந்த ஹரிசேனனன் இந்த மெய்க்கீர்த்தியைச் சமஸ்கிருதத்தில் எழுதினார்.

## கலையும் இலக்கியமும்

குப்தர் காலத்தின் சமூக அரசியல் வளர்ச்சியைப் பார்த்தோம் அல்லவா. இக்காலக் கட்டத்தில் இதற்கு இணையாக கலை மற்றும் சம்ஸ்கிருத இலக்கியங்களும் வளர்ந்தன. கட்டிடக்கலை மிகவும் மேம்பட்ட கலையாக இருந்தது. இக்காலத்தில் பல கோவில்கள் கட்டப்பட்டன. அவற்றின் சிறப்பம்சங்களைப் பார்ப்போம்.

கோயில்களின் கட்டமைப்பு (Structural Temples)

- கல் மற்றும் செங்கல் பயன்படுத்தி கோவில் கட்டுதல்
- சிற்பக்கலை

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை ஆராய்ந்து குப்தர் காலக் கட்டிடக்கலையில் சிறப்பம்சங்களைக் கண்டறிந்து பட்டியலிடவும்.



தசாவதார கோவில் தேவ்கட் உத்தரப்பிரதேசம்



மத்திய பிரதேசத்தில் உள்ள திகாவாவில் உள்ள விஷ்ணு கோவில்



நாச்னா – குதாரா பார்வதி கோவில், பன்னா, மத்திய பிரதேசம்

அஜந்தாவின் (மகராஷ்டிரா) உலகப் புகழ்பெற்ற குகை ஓவியங்கள் குப்தர் காலத்திலுள்ளவையாகும். அரச வாழ்க்கை, அரச சபை, மனிதாபிமானமற்ற மனிதர்கள் ஆகியவையும் ஓவியங்களில் சித்தரிக்கப்படுகின்றன. அவற்றில் இராமாயணம், மற்றும் மகாபாரதக்காட்சிகளும் உள்ளன. பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் அழகாக இருக்கும் இந்த ஓவியங்களில் பெரும்பாலனாவை இயற்கையான வர்ணங்களால் உருவாக்கப்பட்டவையாகும்.



குப்தர் கால கோவில்களையும் குகை ஓவியங்களையும் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் பதிப்புத் தயாரித்துக் காட்சிப் படுத்தவும்.

குப்தர் ஆட்சியின்போது சம்ஸ்கிருத இலக்கியம் அரச ஆதரவைப் பெற்றது. சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக இருந்தது. பாலி போன்ற மக்கள் பேசும் மொழிகளைப் பயன்படுத்திய புத்தமதத்தினர் கூட சமஸ்கிருத்தத்தில் எழுதினார்கள். இவர்கள் காலத்தில்தான் இராமாயணம், மகாபாரதம் போன்ற பெரும்பாலான புராணங்களும் வாய்மொழியிலிருந்து எழுத்து மொழிக்கு மாற்றப்பட்டன.

சமஸ்கிருதத்தில் நாடகங்கள், காப்பியங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள் போன்றவை இக்காலத்தில்தான் எழுதப்பட்டன. இவற்றில் முக்கியமானவை கீழே கொடுக்கப்பட்டுள்ளதன.

| நூலின் பெயர் | நூலை இயற்றியவர் | இலக்கியத்துறை |
|---|---|---|
| அபிஜ்ஞான சாகுந்தலம் | காளிதாசன் | நாடகம் |
| குமார சம்பவம் | காளிதாசன் | காப்பியம் |
| மிருச்ச கடிகம் | சூத்ரகன் | நாடகம் |
| சொப்பனவாசவதத்தம் | பாசன் | நாடகம் |
| திரிகாண்டி | பர்த்ருஹரி | இலக்கணம் |
| அமரகோசம் | அமரசிம்மன் | நிகண்டு |

சம்ஸ்கிருத நாடகங்கள் உலகப் புகழ் பெற்றாவையானாலும், அவை நிகழ்தப்படும்போது சமூகத்தில் உயரந்த நிலையிலிருந்த ஆண் கதா பாத்திரங்கள் மட்டுமே சமஸ்கிருத மொழியில் உரையாடியிருந்தனர். ராணி உட்பட பெண்களும் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படும் ஆண் கதாபாத்திரங்களும் பிராகிருத மொழியில் பேச வேண்டிய நிலை இருந்தது.

இந்தியத் தத்துவ சிந்தனையின் அடிப்படையான சில தத்துவங்களும் இக்காலத்தில் தோன்றின. ஆறு தத்துவங்கள் (Six system of philosophy) என்று அழைக்கப்படும் இவை ஒருவருக்கொருவர் நிகழ்த்தும் விவாதங்கள் மூலம் உருவாக்கப்பட்டவை. அந்தத் தத்துவங்களையும் அவற்றின் படைப்பாளிகளையும் பற்றி தெரிந்து கொள்வோம்.

| தத்துவங்கள் | படைப்பாளிகள் |
|---|---|
| சாம்க்யா | கபிலன் |
| யோகா | பதஞ்சலி |
| நியாயா | கௌதமன் |
| சேஷிகவை | கணாதன் |
| வேதாந்தம் | பாதராயணம் |
| மீமாம்ஸா | ஜைமினி |

ST-519-8-SOC.SCI.-I (T)-9-VOL-1

## அறிவியல்

குப்தர் காலத்தில் அறிவியல் நூல்களும் இயற்றப்பட்டிருந்தன. இவை முக்கியமாக சோதிடம், கணிதம், மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்தவையாகும். வராஹமிஹிரரின் பிருஹத்சம்ஹிதை, ஆர்யபட்டனின் ஆர்யபடியம் அமரசிம்மனின் அமரகோசம் ஆகியவை இக்காலத்தில் இயற்றப்பட்ட முக்கிய அறிவியல் நூல்கள் ஆகும்.

### உலோக வேலைப்பாடு

CE 4 ஆம் நூற்றாண்டில் டெல்கிக்கு அருகிலுள்ள மெஹ்ரௌளியில் உருவாக்கப்பட்ட இரும்புத்தூண் அக்காலத்தில் உலோக வேலைத் தொழில்நுட்பத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். பல நூற்றாண்டுகளாக மழை, வெயில் கொண்ட இந்த இரும்புத்தூண் இன்றும் துருப்பிடிக்காமல் அப்படியே உள்ளது.





குப்தர் காலத்தின் அறிவியல் நன்கொடைகளை மதிப்பிடுங்கள்.

## தென் இந்தியாவிற்கு

குப்த மன்னர்கள் பிராமணர்களுக்குப் பூமி தானம் கொடுத்ததைப் பற்றி முன்னர் கலந்துரையாடினோம் அல்லவா. CE 6 ஆம் நூற்றாண்டில் பூமிதானம் செய்கின்ற பழக்கம் தென்னிந்தியாவிலும் பரவின. வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவிற்கு பிராமணர்கள் இடம்பெயர்ந்ததே இதற்குக்காரணம். இந்நேரத்தில் தென்னிந்தியாவில் பல்லவரும், பாண்டியர்களும் முக்கியமான அரசவம்சங்களாக இருந்தனர். அவர்கள் பிராமணர்களுக்கும் கோவில்களுக்கும் பூமிதானம் செய்தனர். இதன் விளைவாக பிராமணர்களுக்குத் தென்னிந்தியாவில் சமூகத்திலும், பொருளாதாரத்திலும் உயர்ந்த பதவிகள் கிடைத்தன. பிராமணர்களுக்கு பூமி தானமாக கிடைத்ததினால் இப்பகுகுதிகளில் வேளாண்மை வளர்ச்சிபெற்றது. முன்பு குறிப்பிட்டபடி பிராமணர்களுக்கு விவசாய தொழில்நுட்பத்தைக் குறித்தும், காலநிலையைக் குறித்தும் உள்ள அறிவு வேளாண்மை பரவுவதற்கு உதவிபுரிந்தது. அரசர்களும், கிராம ஆட்சி அமைப்பும் நீர்த்தேக்கங்களைக் கட்டி நீர்ப்பாசனம் செய்து வேளாண்மையை ஊக்குவித்தனர்.

பிராமணர்களின் கட்டுபாட்டிலிருந்த கோயில்களின் தலையீடு காரணமாக பல்லவப் பேரரசில் விவசாய முன்னேற்றம் ஏற்பட்டது. விவசாயத்தின் அதிக உற்பத்தி வியாபர வளர்ச்சிக்கு காரணமானது. உள்நாட்டு வியாபாரத்துடன் கடல் வியாபரமும் வளர்ச்சியடைந்தது. மகாபலிபுரம் பல்லவர்களின் பரபரப்பான துறைமுகமாக இருந்தது. நாகபட்டினம் மற்றொரு துறைமுகம் ஆகும். பாண்டிய நாட்டின் வணிகச்சங்கங்கள் வியாபாரத்தின் முக்கிய சிறப்பம்சமாக இருந்தன. வடஇந்தியாவின் "ஸ்ரேணிகள்" என்றழைக்கப்படும் வணிகக்குழுக்கள் தென்னிந்தியாவில் வணிகச் சமூகம் என்று அறியப்பட்டது. ஒவ்வொரு உற்பத்தி பொருட்களின் வியாபரத்தில் ஒவ்வொருவணிக சங்கங்களும் கவனம் செலுத்தினர்.

'நகரத்தார்' வியாபாரிகளாயிருந்தனர். நல்ல மிளகு, சந்தனம், தங்கம் மற்றும் முத்து ஆகியவை பாண்டியர்களின் முக்கிய ஏற்றுமதி பொருட்களாயிருந்தன. பாண்டியர்கள் கொற்கை, காயல்பட்டினம், பெரிய பட்டணம் முதலிய துறைமுகங்கள் வழியாக ரோமன், கிரேக்கம், சீன, அரபு, வணிகர்களுடன் வியாபரம் செய்தனர். வேளாண்மையின் பரவல், வியாபர வளர்ச்சி வேறுபட்ட தொழில்கள் போன்றவை பல்லவ பாண்டிய நாடுகளுக்கு வரிவிதிப்புக்கான வழிமுறையாக மாறின. இதில் நிலவரி முக்கியமானது. இது விளைச்சலின் $\frac{1}{10}$ முதல் $\frac{1}{6}$ வரை வரி செலுத்த வேண்டியிருந்து. வெவ்வேறு வேலைகளைச் செய்பவர்களும் வரி செலுத்த வேண்டியிருந்தது. கோயில்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட பிரம்மதேயம், பிராமணர்கள் தங்கியிருந்த நிலப்பகுதியான அக்ரஹாரம் போன்றவை நிலவரியிலிருந்து விலக்கப்பட்டிருந்ததன.

### பிரம்மஸ்வம் அல்லது பிரம்மதேயம்

ஒரு பிராமணர் குழுவிற்கு தானமாக வழங்கப்பட்ட நிலம் பிரம்மதேயம் என்று அழைக்கப்படுகிறது.

### அக்ரஹாரம்

பிராமண கிராமங்கள் அக்ரஹாரங்கள் என்று அழைக்கப்பட்டன.

### தேவஸ்வம் அல்லது தேவதானம்

தெய்வத்திற்கு அல்லது கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலம் தேவதானம் எனப்பட்டது. கோயில் நிர்வாகிகளால் இந்நிலங்கள் பராமரிக்கப்பட்டு வந்தன

தென்னிந்தியாவிற்குப் பூமிதானமுறை பரவியதால் பொருளாதாரதுறையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி விவாதிக்கவும்.

இனி தென் இந்தியாவின் சமூக – கலாச்சார வாழ்க்கையைப் பற்றி கலந்துரையாடலாம்.

பல்லவ –பாண்டிய பகுதிகளின் சமூகம் சாதி முறையை அடிப்படையாகக் கொண்டிருந்து. பூமியைப் பிரம்மதேயம் என்ற பெயரில் தானமாக பெற்றுக்கொண்ட பிராமணர்கள் பணக்காரர்களாகவும் சமூகத்தில் உயர்

பதவியிலும் இருந்தனர் தாழ்த்தப்பட்ட சாதியினராகக் கருத்தப்பட்டவர்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். இவர்கள் வர்ண அமைப்பிற்கு வெளியிலுள்ள சாதி பிரிவுகளாக இருந்தனர்.

பல்லவ – பாண்டிய நாடுகளில் கிராம சுயாட்சி நிலவியிருந்தது. கிராம, நீதிமன்றங்களும் இருந்தன. கல்வி, நீதி முறையை நடைமுறைப்படுத்துதல் ஒன்று கூடி கலந்தாலோசித்து தர்க்கங்களுக்குத் தீர்வு காணுதல், ஆகியனவும் இருந்தன. இவற்றில் அரசர்கள் தலையிடவில்லை. சடங்குகள், வழிபாட்டுமுறைகள், சாதி விதிகள் ஆகியவற்றிலும் மன்னர்கள் குறுக்கிடவில்லை.

முந்தைய பாடத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட சமண மற்றும் புத்த மதங்கள் பல்லவர்களின் காலத்திற்கு முன்னரே தென்னிந்தியாவில் வளர்ச்சி பெற்றிருந்தன.

ஆனால் பிராமணர்களின் அதிகாரம் கூடியதால் இந்த மதங்கள் வீழ்ச்சியடைந்தன. பல்லவர்களும், பாண்டியர்களும் சைவ–வைணவக் கோயில்களைக் கட்டி பக்தி இயக்கத்தின் வளர்ச்சியை ஊக்குவித்தனர்.

அக்காலத்தில் தென்னிந்திய இலக்கியங்களில் பிராமணர்களுடைய மதம், பக்தி குறித்த கருத்துக்கள் பிரதிபலித்தன. பல்லவர்கள் சமஸ்கிருத இலக்கியத்தை ஊக்குவித்தார்கள். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் சம்ஸ்கிருத அறிஞராக விளங்கினார். இவர் "மத்தவிலாசப்பிரஹஸனம்" என்ற நூலை இயற்றினார்.

தென்னிந்திய கோவில்கள் அன்றைய மக்களின் வாழ்க்கைமுறையில் ஏராளம் தாக்கத்தை ஏற்படுத்தின. கோவில்கள் அக்காலத்திலுள்ள கலைக்கட்டமைப்புகளாயிருந்தன. அன்றைய முக்கிய கோவில்கள் காஞ்சிபுரம், மகாபலிபுரம், மதுரை ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. 'திராவிட முறை' என்று அழைக்கப்படும் தென்னிந்தியக் கோவில் கட்டுமான முறை பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் கோவில் கட்டுமானம் மூன்று நிலைகளில் வளர்ச்சியடைந்தது. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பாறையை உடைத்து கட்டப்பட்ட கோவில்கள்
- ஒன்றைக் கல்லால் ஆன தேர்க்கோவில்கள்
- கட்டமைப்புடைய கோவில்கள்



மாமண்டூர் குகைக்கோவில் (காஞ்சிபுரம்)



மதுரை மீனாட்சி கோவில்



மகாபலிபுர தேர்க் கோவில்

## திராவிடக் கட்டிடக்கலை

இந்தியாவில் பழங்காலத்திலிருந்தே கோவில் கட்டுமானம் உள்ளது. மூன்று வகை கோயில் கட்டிடக்கலைகள் இருந்தன. பொதுவாக வட இந்தியாவில் 'நகரர்' மற்றும் 'வாசரா' முறையும், தென்னிதியாவில் 'திராவிட' முறையும் நடைமுறையில் இருந்தன. பிரமாண்டமான மண்டபங்கள் திராவிடக் கட்டிடக்கலையில் முக்கிய சிறப்பு அம்சமாக இருந்தன.

திராவிடக் கட்டிடக்கலையின் திறமையை வெளிப்படுத்தியவர்கள் பல்லவர்கள் ஆவார்கள். மகாபலிபுரத்தில் உள்ள கோயில்கள் அவர்களின் கட்டிடக்கலை திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் பெரும்பாலான திராவிடக் கோவில்கள் சோழர்களால் கட்டப்பட்டவை. அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் இன்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன. மதுரை மீனாட்சி கோயில், ஸ்ரீரங்கம் கோயில் போன்றவை பாண்டியர்களின் காலத்தில் புகழ்பெற்ற கட்டிடங்கள் ஆகும்.

திராவிட கட்டிடக்கலையில் கட்டப்பட்டக் கோயில்களில் முக்கியமாக ஸ்ரீகோவில் (கர்ப்ப கிரகம்), விமானம் (கோயிலின் மேல் பாகம்) சிகரம் (விமானத்தின் உச்சிப்பகுதி) மண்டபம் மற்றும் சுற்றுப்பாதை ஆகியவை உள்ளன. பிரமாண்டமான நுழைவாயில்கள், உயரமான கோபுரங்கள் ஆகியவை அலங்காரமாக செதுக்கப்பட்ட யானை, குதிரைகள் டிராகன் முகங்கள் போன்றவை திராவிட முறையின் சிறப்பியல்புகளாகும். இதிகாசங்கள் மற்றும் புராணங்களில் காணப்படும் கதைகள் மற்றும் கதாபாத்திரங்கள், இந்த கோயில்களின் சுவர்களில் பல்வேறு நுண்ணிய கலைப்பாடுடன் செதுக்கப்பட்டுள்ளன.

### மகாபலிபுரம்


ஷோர் கோவில்

இந்தக் கால கட்டத்தில் கட்டப்பட்ட மிகவும் கவனத்தை ஈர்க்கக்கூடிய கோவில்களும், கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் தமிழ்நாட்டில் உள்ள மகாபலிபுரத்தில் காணப்படுகின்றன. மாமல்லபுரம் என்று அழைக்கப்படும் மகாபலிபுரம் வங்காள விரிகுடாவின் கரையில் அமைந்துள்ளது. பஞ்ச பாண்டவர்களைக் குறிக்கும் ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து தேர் கோயில்களும், கடலோரத்தில் கட்டப்பட்ட ஷோர் கோயிலும் (Shore Temple) பல்லவ கட்டிடக்கலைக்குச் சிறந்தது, எடுத்துக்காட்டுகள் ஆகும். 'அர்ஜுனா தவம்', 'மஹிஷாசுரமர்தனம்' போன்ற பாறையில் செதுக்கபட்டவையும் பல்லவர்கள் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மகாபலிபுரம் பண்பாட்டு நகரமாக யுனேஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## தொடர்செயல்பாடுகள்

- குப்த அரசாட்சியின் காலத்தில் 'பூமிதானங்களும் விளைவுகளும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யவும்.
- பல்வகை கட்டுமான முறைகளைக் காட்டும் கோவில்களின் படங்களைச் சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்
- குப்தர்காலத்தின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறை அடைந்த சாதனைகளை உள்ளடக்கி ஒரு டிஜிட்டல் காட்சியை உருவாக்கவும்.

# 4 இந்திய அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு






பல ஆண்டுகளுக்கு முன்னர் நாம் விதியைக் குறித்த நேரத்தில் சந்திப்பதாக ஒப்பந்தம் செய்திருந்தோம். அந்த நேரம் வந்து விட்டது. உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த நள்ளிரவில், இந்தியா சுதந்திரத்துடன் விழித்துக் கொண்டிருக்கிறது. இந்த நொடிப்பொழுது வரலாற்றில் மிக அரிதாகவே வரும்.

ஒரு வரலாறு முடிவுக்கு வந்து மற்றொரு புதிய வரலாறு உருவாகும் காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். ஒடுக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஆன்மா இன்று மௌனம் கலைக்கிறது. இந்தப் புனிதமான நேரத்தில், இந்திய மக்களாகிய நாம் மனித குலத்துக்குச் சேவை செய்ய நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்."

சுதந்திரத்தின் விடியலின் போது முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு நாட்டிற்கு ஆற்றிய உரையின் ஒரு பகுதிதான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

அந்நிய ஆட்சியின் தீமைகளை அகற்றி அரசியல் அமைப்பு உருவாக்கச் சபையில் நாட்டை நம்பிக்கையான, பொறுப்பான மற்றும் முழுமையான பாதையில் கொண்டு செல்ல நேரு அழைப்புவிடுத்தார். 1947 ஆகஸ்ட் 15 –ல் சுதந்திரம் பெற்ற இந்தியா நமது அரசியலைப்பு உருவாக்கச் சபைக்கு ஒப்படைத்த பொறுப்பு மிக பெரியதும் முக்கியமானதுமாகும். ஆங்கிலேய ஆட்சியின் பாரபட்சமானதும் மக்களாட்சிக்கு எதிரானதும் நீதிமறுக்கப்பட்டதுமான நடவடிக்கைகளால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அன்றைய இந்தியச் சமூகத்தில் காணப்பட்ட சாதி அமைப்பு, பிற சமூக மூடப்பழக்கவழக்கங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவை நவீன சமுதாயம் நினைப்பதற்கு அப்பாற்பட்டவையாக இருந்தன. சுதந்திரத்திற்குப் பிறகு மக்களாட்சியும் பொதுநல அரசு அமைப்பும் இருக்க வேண்டும் என்ற சிந்தனை நமது தேசிய இயக்ககங்களுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டிருந்தது.

சுதந்திர இந்தியா மக்களுக்கு கொடுத்த இரண்டு வாக்குறுதிகள், ஜனநாயக ஆட்சியும் பொதுநல அரசை கட்டியெழுப்புவதும் ஆகும். இதற்கான முதல் படி அரசியலமைப்பு சபையின் உருவாக்கமும் நேருவின் இலட்சியத் தீர்மானமும் ஆகும்.

## இலட்சியத்தீர்மானத்திலிருந்து அரசியலமைப்பிற்கு

### இலட்சியத் தீர்மானம்

- அரசியலமைப்பு சபை இந்தியாவை ஒரு சுதந்திர இறையாண்மை கொண்ட குடியரசாக மாற்றுவதற்கு ஓர் அரசியலமைப்பை உருவாக்குவதற்கான உறுதியான தீர்மானத்தை அறிவிக்கிறது.
- சுதந்திர இந்திய இறையாண்மை என்பது பழைய இந்தியப் பிரதேசங்கள், இந்திய மாநிலங்கள், இந்திய யூனியனுடன் சேர்வதற்கு விருப்பமுள்ள பிரிட்டீஷ் இந்தியாவுக்கு வெளியேயுள்ள பிற பகுதிகள் என்பவை சேர்ந்த ஒரு யூனியனாக இருக்கும்.
- இந்திய யூனியன் உருவாக்கும் பிரதேசங்கள் சுயாட்சி பகுதிகளாக இருக்கும். மட்டுமல்ல மத்திய அரசுக்கு வழங்கப்படாத அனைத்து அதிகாரங்களும் கடமைகளும் அவற்றிற்கு கொடுக்கப்படும்.
- சுதந்திர இந்திய இறையாண்மையில் எல்லா அதிகாரங்களும் மக்களுக்கே.
- இந்திய மக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி, பதவி சமத்துவம், வாய்ப்பு சமத்துவம், சட்டத்தின் முன் அனைவரும் சமம், அத்துடன் பேச்சு, கருத்து வெளியீடு, நம்பிக்கை, மதவழிப்பாடு, தொழில் சங்கச் செயல்பாடு, சுதந்திரம் போன்ற அடிப்படை சுதந்திரங்களை உறுதிபடுத்தவும் பாதுகாக்கவும் செய்தல்.

1946 டிசம்பர் 13 அரசியலமைப்பு உருவாக்க சபையில் ஜவஹர்லால் நேரு முன்வைத்த இலட்சிய தீர்மானத்தின் சில கருத்துக்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய இயக்கம் முன்வைத்த முக்கிய கருத்துக்கள் இலட்சியத் தீர்மானத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய இயக்கம் முன்வைத்த என்னென்ன கருத்துக்கள் இலட்சியத் தீர்மானத்தில் உட்பட்டுள்ளன?

- வாய்ப்பு சமத்துவம்
- 
- 
- 

## இந்திய அரசமைப்பு

### முகப்புரை

இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக** நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையவராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

ST-519-9-SOC.SCI.-I (T)-9-VOL-1

இலட்சியத்தீர்மானத்தில் வெளியிடப்பட்ட என்னென்ன கருத்துக்கள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் உட்படுத்தப்பட்டுள்ளன என்று ஒப்பீடு செய்து கண்டுபிடிக்கவும்.

- இறையாண்மை மக்களுக்கு
- 
- 
- 

இலட்சியத் தீர்மானத்தில் பல தரப்பட்ட கருத்துக்கள் நமது அரசியலமைப்பின் முகவுரையில் உட்படுத்தப்பட்டுள்ளன என்று புரிந்துகொண்டீர்களல்லவா? முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள், கண்ணோட்டங்கள், குறிகோள்கள் போன்றவற்றை நிறைவேற்ற அரசியலமைப்பின் விதிகள் எந்தளவு போதுமானவை என்பதை நாம் ஆராய்வோம்.

## அரசியலமைப்பின் சிறப்புகள்

காபினட் குழுவின் பரிந்துரையின்படி 1946–ஆம் ஆண்டு டிசம்பர் 6–ஆம் தேதி அரசியலமைப்பு உருவாக்கச் சபை உருவாக்கப்பட்டது. 1946 டிசம்பர் 9 ஆம் தேதி முதல் 2 ஆண்டுகளும் 11 மாதங்களும் 17 நாட்களும் நீடித்த ஒரு மகத்தான செயல்முறையில் உருவாக்கப்பட்டது தான் இந்திய அரசியலமைப்பு. 1949 நவம்பர் 26 –ல் அரசால் அங்கீகரிக்கபட்டு சட்டமாக்கி நமக்காக சமர்பித்த இந்திய அரசியலமைப்பு 22 பகுதிகளில் 395 பிரிவுகளும் 8 அட்டவணைகளும் அடங்கியவையாகும். 1950 ஜனவரி 26 ஆம் தேதி நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்பு காலத்திற்கேற்ற மாற்றங்களை உள்ளடக்கிய ஓர் உயிருள்ள ஆவணமாக உள்ளது.

இந்திய தேசிய இயக்கம் உறுதியானதும் இலட்சியத் தீர்மான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல கருத்துக்களும் அரசியலமைப்பின் பகுதியாக உள்ளன. விரிவான கற்றலுக்கும் விவாதங்களுக்கும் பிறகு தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பின் சிறப்புகளை நாம் அறிந்துகொள்வோம்.

மிகப்பெரிய எழுதப்பட்ட அரசியலமைப்பு → சுமார் ஒன்றரை இலட்சம் சொற்களைக் கொண்ட ஒரு தொகுப்பானதும் நாட்டின் பன்முகத்தன்மை, பரந்த தன்மை ஆகியவை அடங்கிய ஒரு விரிவான உள்ளடக்கத்தைக் கொண்ட ஆவணம் ஆகும்.

பாராளுமன்ற ஜனநாயகம் → சட்ட செயலாக்கப்பிரிவின் உறுப்பினர்கள் சட்டம் உருவாக்கும் சபையில் உள்ளவர்களாக இருக்க வேண்டும். சட்டம் உருவாக்கும் சபை, சட்ட செயலாலக்கப் பிரிவை கட்டுப்படுத்தவும் செய்கிறது.

**உறுதியான மற்றும் நெகிழ்வான அமைப்பு** → சில நிபந்தனைகளைத் திருத்துவதற்கு சிறப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஆனால் மற்றும் சில நிபந்தனைகள் சாதாரண சட்ட உருவாக்க முறையில் திருத்தப்படலாம்.

**அடிப்படை உரிமைகளும் அடிப்படை கடமைகளும்** →
- ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நாடு உறுதி செய்ய வேண்டிய அடிப்படை உரிமைகள்.
- குடிமகன் நாட்டிற்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகள்.

**அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்** → எதிர்கால நாட்டின் சமூக – பொருளாதார முன்னேற்றத்திற்காக நாட்டிற்கு வழங்கப்படும் அறிவுரைகள்.

**இருமண்டல சட்ட உருவாக்க சபைகள்** → எல்லா மக்களையும் பிரநிதித்துவப்படுத்தும் மக்களவை (லோக்சபை); சட்ட உருவாக்கத்தில் இரண்டாவது ஒரு சிந்தனைக்காக மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்களவை (ராஜ்யசபை) ஆகிய இரண்டு சபைகள்

**வலுவான மத்திய அரசுடனான கூட்டாட்சி** → மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மத்திய அரசுக்கு சில சிறப்பு அதிகாரங்கள் அரசியலமமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

**சுதந்திரமான மற்றும் பாகுபாடற்ற நீதித்துறை** → சட்ட உருவாக்க சபையினுடையவும் சட்டச் செயலாக்க சபையினுடையவும் கட்டுப்பாடிகளில்லாத ஒரு நீதிமன்ற அமைப்பு.

**சுதந்திரமான அரசியலமைப்பு நிறுவனங்கள்** → ஜனநாயக அமைப்பை விரிவானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவதற்கு சுதந்திரமான அரசியலமைப்பு நிறுவனங்கள்.

தற்போது, அரசியலமைப்பில் எத்தனை பகுதிகளும் அட்டவணைகளும் உள்ளன என்று கண்டுபிடிக்கவும்.

## இந்தியக் கூட்டாட்சி

அரசியலமைப்பின் சிறப்புகளைக் குறித்து வகுப்பில் வெளியிட்ட கருத்தரங்கு அறிக்கையில் முக்கியமான பகுதியைக் கவனிக்கவும்.

நம் நாட்டின் பன்முகத்தன்மையையும் ஒற்றுமையையும் ஒன்றுபோல் பராமரிக்க கூட்டாட்சி அமைப்பு உதவுகிறது. மேலும் வட்டார பிரதிநித்துவத்தை உறுதி செய்வதன் மூலம் பிரிவினவாத போக்குகளைத் திறம்பட எதிர்ப்பதற்கு இதுபோன்ற ஒரு ஆட்சி முறை உதவுகிறது. ஆட்சியின் பல்வேறு அமைப்புகளை இணைத்து பொருளாதார முன்னேற்றம் கொண்டுவருவதற்கும் எல்லா பிரிவு மக்களின் நலனை நிறைவேற்றுவதற்கும் கூட்டாட்சியால் முடிகிறது. மத்திய அரசும் மாநில அரசுகளும் அதிகாரம் பங்குகிட்டுக்கொள்ளும் இந்த ஆட்சிமுறை ஜனநாயகம் என்ற கருத்தைக் கூடுதல் பொருள் உள்ளதாக மாற்றுகிறது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் இந்திய கூட்டாட்சி முறையை ஏற்றுக்கொள்வதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்தவும்.

- மத்திய, மாநிலங்களுக்கிடையில் அதிகாரம் பங்கு வைப்பதன் மூலம் மக்களாட்சியை உறுதி செய்வதற்கு.
- 
- 
- 
- 
- 

அரசியலமைப்பின் அடிப்படையில் அதிகாரம் இரண்டு நிலைகளில் பிரிக்கப்படுகின்ற ஆட்சிமுறையே கூட்டாட்சி முறை. இது மத்திய அரசும் மாநில அரசும் அதிகாரம் பங்கு வைக்கின்ற ஒழுங்குமுறை ஆகும். கூட்டாட்சியின் அடிப்படை சிறப்புக்களாக கணக்கிடப்படுவது எழுதப்பட்ட உறுதியான

அரசியலமைப்பு, அதிகார பிரிவு, சுதந்திரமான நீதித்துறை என்பவையாகும்.

## பகுதி I
## யூனியனும் அதன் நிலப் பகுதிகளும்

1. **யூனியனின் பெயரும் நிலப்பகுதிகளும்** (1) இந்தியா அதாவது பாரதம், மாநிலங்களின் ஒரு யூனியனாகும்.

[1][(2) மாநிலங்களும் அவற்றின் நிலப்பகுதிகளும் முதலாம் அட்டவணையில் கூறியிருப்பது போல இருக்க வேண்டும்]

(3) பாரதத்தின் நிலப்பகுதி

(அ) மாநிலங்களின் நிலப்பகுதிகள்;

[2][(ஆ) முதலாம் அட்டவணையில் கூறியிருக்கும் யூனியன் பிரதேசங்கள்;]

(இ) கையகப்படுத்தப்பட்ட பிற நிலங்களும் இதில் அடங்கும்.

இந்திய அரசியலமைப்பின் முதலாம் சட்டப் பிரிவை நீங்கள் வாசித்தீர்கள் அல்லவா? இதன்படி இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களின் ஒரு யூனியன் ஆகும். ஆனால் அரசியலமைப்பில் எந்த இடத்திலும் இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு என்று குறிப்பிடப்படவில்லை. இந்தியாவின் சமூக, வட்டார, புவியியல் வேறுபாடுகளை உட்கொள்ளவும் நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காகவும் கூட்டாட்சி அமைப்பை நாம் ஏற்றுக்கொண்டோம்.

இந்தியக் கூட்டாட்சியின் சிறப்புகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



இந்திய அரசியலமைப்பு உயர்த்திக்காட்டும் ஜனநாயக அர்பணிப்பின் வேறொரு சிறப்பம்சமே இந்தியக் கூட்டாட்சி முறை ஆகும். நாட்டின் அதிகாரங்கள் ஓர் இடத்தில் மட்டும் மையமாக அமையாமல் அவை மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் பகிர்ந்து கொடுக்கப்படும் அணுகுமுறையையே இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. அதிகாரப்பிரிவு குறிப்பிடுகின்ற அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையை நாம் பரிசோதனை செய்யலாம்.

## அதிகாரப் பிரிவு (Division of Powers) ஏழாவது அட்டவணையில்

**யூனியன் லிஸ்ட்** (Union List) – மத்திய அரசின் முழுமையான சட்ட உருவாக்க அதிகாரமுள்ள துறைகளின் ஓர் அட்டவணையாகும். அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது இதில் 97 பிரிவுகள் இருந்தன.

எடுத்துக்காட்டு – வெளியுறவு, பாதுகாப்பு, ரயில்வே, வங்கி, குடியுரிமை போன்றவை.

**மாநில பட்டியல்** (State List) – சாதாரணமாக மாநில அரசு சட்டம் உருவாக்குவதற்கு அதிகாரமுள்ள துறைகளின் அட்டவணையாகும். தொடக்கத்தில் இதில் 66 துறைகள் இருந்தன.

எடுத்துக்காட்டு – வேளாண்மை, சிறை, காவல், உள்ளாட்சி போன்றவை.

**ஒருங்கிணைக்கப்பட்ட பட்டியல்** (Concurrent List) – மத்திய அரசுடையவும் மாநில அரசுடையவும் சட்டம் உருவாக்குவதற்கு அதிகாரமுள்ள துறைகளின் அட்டவணையாகும். ஆரம்பத்தில் இதில் 47 பிரிவுகள் இருந்தன.

எடுத்துக்காட்டு – கல்வி, வனம், தொழிற்சங்கம், திருமணம், பிறப்பு – இறப்பு பதிவு போன்றவை.

எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) – மேற்கூறிய மூன்று அதிகாரப் பட்டியலிலும் உட்படாதப் பிரிவுகள் எஞ்சிய அதிகாரங்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றில் சட்ட உருவாக்க அதிகாரம் மத்திய அரசாங்கத்தினுடையது.

எடுத்துக்காட்டு – சைபர் சட்டங்கள்



மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்தி தலைப்புகளைக் கவனித்தீர்கள் அல்லவா? இவை எந்த அட்டவணையில் உட்பட்டவை என்று குறிப்பிடவும்.

| மத்திய பட்டியல் | மாநில பட்டியல் | ஒருங்கிணைக்கப்பட்ட பட்டியல் |
|---|---|---|
| | | |

இந்தியக் கூட்டாட்சி, மக்களாட்சி முறையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது? விவாதம் செய்யவும்.

## அதிகாரங்களைப் பிரித்தல்

“அரசியலமைப்பு ஓர் அடிப்படை ஆவணமாகும். ஆட்சிக்கூடத்தின் மூன்று காரணிகளான சட்ட உருவக்கப் பிரிவு, சட்ட செயலாக்கப் பிரிவு, நீதித்துறை பிரிவு என்பவற்றின் நிலையையும், அதிகாரத்தையும் அரசியலமைப்பு குறிப்பிடுகிறது. அரசியல் அமைப்பின் இலக்கு, அரசு சார் நிறுவனங்களை உருவாக்குவது மட்டுமல்ல, அவற்றின் அதிகாரத்தை வரையறை செய்வதும் ஆகும். காரணம் இந்த அமைப்புகளின் மீது வரம்புகளை ஏற்படுத்தாவிட்டால் அடக்குமுறை மற்றும் சர்வாதிகார ஆட்சியாக மாறிவிடும்."

டாக்டர்.பி.ஆர். அம்பேத்கர் அரசியலமைப்பு உருவாக்க சபையில் ஆற்றிய உரையில் இருந்து.



## அதிகாரங்களைப் பிரித்தல் (Separation of Powers)




நமது அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரம் பிரித்தல் முறையை குறித்து அரசியலமைப்பு சிற்பியான டாக்டர்.பி.ஆர். அம்பேத்கருடைய உற்றுநோக்கலைக் கவனித்தீர்கள் அல்லவா. இந்தியாவின் ஆட்சிமுறையில் சட்ட உருவாக்கப் பிரிவு, சட்டச் செயலாக்கப் பிரிவு, நீதித்துறைப் பிரிவு ஆகியவற்றில் எவையேனும் ஒன்றில் அதிகாரம் மையப்படுத்துவதைத் தடைசெய்வதையும் மக்களாட்சியைப் பின்னடையச் செய்து ஏகாதிபத்திய ஆட்சி மேலோங்காமல் இருப்பதையும் அரசியலமைப்பு கவனிக்கிறது. இந்த விவாதத்தில் இருந்து தான் பாராளுமன்ற ஆட்சிமுறையும் கூட்டாட்சி முறையும் உருவாயின.

இனி நம்முடைய அரசியலமைப்பின்படி சட்ட உருவாக்கப் பிரிவு, சட்ட செயலாக்கப் பிரிவு, நீதித்துறைப் பிரிவு ஆகியவற்றின் அமைப்பு, அதிகாரங்கள், பொறுப்புகள் எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பரிசோதனை செய்யலாம்.

### சட்ட உருவாக்கச் சபை (Legislature)

இந்தியாவின் சட்ட உருவாக்கச் சபையின் பெயர் பாராளுமன்றம். நாட்டிற்கான சட்டங்களை உருவாக்குவது பாராளுமன்றத்தின் முதன்மையான பொறுப்பாகும். பலதரப்பட்ட மக்களின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்தும் காலத்திற்கேற்ற மாற்றங்களை ஏற்படுத்தியும் புதிய இலக்குகளை நிறைவேற்றுவதற்காகவும் சட்டங்கள் இயற்றுவதுண்டு. மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் உட்பட்டதே இந்தியப் பாராளுமன்றம். இது ஒரு இருமண்டலச் சட்ட உருவாக்க சபையாகும். பெரியதும் பல்வகைமையுள்ள நாடுகள் சாதாரணமாக அவற்றின் தேசிய சட்ட உருவாக்க சபையில் இரண்டு சபைகள் நிறுவுவதுண்டு. நாட்டின் எல்லா பன்முகத்தன்மைகளையும் (மக்களையும், பகுதிகளையும்) பிரதிநிதித்துவம் செய்வதற்கு இது உதவுகிறது. மட்டுமல்லாமல் ஜனாதிபத்திய முறையிலான கலந்துரையாடல்களையும் விவாதங்களையும் சாத்தியமாக்குவதில் இரு மண்டல சட்ட உருவாக்க சபை முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலங்களில் சட்டங்களை உருவாக்குவது மாநிலச் சட்ட உருவாக்கச் சபையின் பொறுப்பாகும்.

சட்ட உருவாக்கச் சபையின் பொறுப்புகள் எவையெல்லாம் என்று காண்போம்.




பாரளுமன்றத்தின் முக்கிய பொறுப்புகளை அறிந்து கொண்டீர்கள் அல்லவா? பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளான மக்களவை, மாநிலங்களைவையின் முக்கிய சிறப்பம்சங்களைப் பரிசோதனை செய்யலாம்.

## மக்களவை (லோக்சபை)



மக்களவை பாராளுமன்றத்தின் கீழ்சபையாகும். பாராளுமன்றத்தின் மக்களவை உறுப்பினர்கள் பெரும்பான்மையின் அடிப்படையில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருபத்தி ஐந்து வயது நிரம்பிய இந்தியக் குடிமகனுக்கு மக்களவை தேர்தலில்போட்டியிட தகுதி உள்ளது. மக்களவையின் ஆட்சிகாலம் ஐந்து ஆண்டுகளாகும். மக்களவையின் அதிகபட்ச உறுப்பினர்கள் 550 ஆகும். ஆனால் தற்போது 543 (2023) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். மக்களவையில் பெரும்பான்மையின் அடிப்படையில்தான் அரசாங்கத்தின் உருவாக்கமும் நிலை நிற்பும் சாத்தியமாகிறது. ஒரு கட்சி அல்லது கூட்டணி கட்சி, ஆட்சி அமைக்க தவறினாலோ, ஆளும் கட்சி அல்லது கூட்டணி கட்சி பெரும்பான்மையை இழக்கும்போதோ நாடு பொதுத் தேர்தலுக்கு செல்கிறது. மக்களவையின் தலைவர் சபாநாயகர் ஆவார். நிதித்தொடர்பான காரியங்களில் மாநிலங்களவையை விட மக்களவைக்கு கூடுதல் அதிகாரம் உள்ளது. பண மசோதாவும் நம்பிக்கையில்லா தீர்மானமும் மக்களவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

## மாநிலங்களவை (ராஜ்யசபை)

பாராளுமன்றத்தின் மேல் சபைதான் மாநிலங்களவை. இது மக்கள்தொகை விகித அடிப்படையில் மாநிலங்களுக்கு பிரதிநித்துவம் கொடுக்கும் உறுப்பினர்கள் சபையாகும். மாநில சட்ட உருவாக்கச் சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் (Member of Legislative Assembly) தான் மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். முப்பது வயது நிரம்பிய இந்தியக் குடிமகனுக்கு மாநிலங்களவைக்கு போட்டியிட தகுதியுண்டு. மாநிலங்களவை ஒரு நிலையான சபையாகும். இந்த சபை



உறுப்பினர்களின் ஆட்சிக் காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். மாநிலங்களவையில் மூன்றில் ஒருபகுதி உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகள் நிறைவடையும்போது ஓய்வு பெறுகின்றனர். அந்த காலியிடங்கள் தேர்தல் மூலம் நிரப்பப்படுகின்றன. துணைக் குடியரசுத் தலைவர் ராஜ்யசபையின் தலைவர் ஆவார். மாநிலங்களவையின் அதிகபட்ச உறுப்பினர்கள் 250 ஆகும். இதில் 238 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் 12 உறுப்பினர்கள் குடியரசுத்தலைவரால் நேரடியாக நியமனம் செய்யப்படவும் செய்கின்றனர். துணைக் குடியரசுத் தலைவரை பதவி நீக்கம் செய்வதற்குள்ள நடவடிக்கைகள் மாநிலங்களைவையிலிருந்து தொடங்குகிறது. மட்டுமல்ல புதிய அனைத்து இந்திய சர்வீஸ் உருவாக்குவதற்கு பாரளுமன்றத்திற்கு அதிகாரம் கொடுப்பது மாநிலங்களவை ஆகும்.

லோக்சபையுடையவும் ராஜ்யசபையுடையவும் சிறப்பம்சங்களைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.

| மக்களவை (லோக்சபை) | மாநிலங்களவை (ராஜ்யசபை) |
|---|---|
| கீழ் சபை | மேல்சபை |
| | |
| | |
| | |
| | |



கேரளத்தில் எத்தனை மக்களவை தொகுதிகள் உள்ளன? அவற்றின் பெயர்களைக் கண்டுபிடிக்கவும்

## இந்தியாவில் சட்ட உருவாக்கம்

இந்தியாவில் சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்காகும். சட்ட உருவாக்கச் செயல்பாட்டில் அரசியலமைப்பு குறிப்பிடுகின்றதும் பின்னர் உருவம் கொண்ட அநேக செயல்முறைகளும் உள்ளன. சட்ட உருவாக்கம் ஒரு தொழில்நுட்பச் செயல் மட்டுமல்ல. இது ஒரு அரசியல் செயல்பாடும் ஆகும். சமூகத்தின் பல பகுதிகளிலுள்ள மக்களுடைய கருத்துக்களின் அடிப்படையில் அரசாங்கம் சட்டங்கள் உருவாக்குகிறது. அரசியல் கட்சிகளுடைய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கும் ஆட்சி செயல்பாடுகளை எளிமையாக்குவதற்கும் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சட்டம் உருவாக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தால் அது தொடர்பான

அமைச்சகத்தின் மேற்பார்வையிலும் கருத்துக்களின் அடிப்படையிலும் அலுவலர்களால் சட்டத்தின் வரைவு மசோதா உருவாக்கப்படுகிறது.

பல்வேறு மசோதாக்கள் உள்ளன. அமைச்சர்கள் தாக்கல் செய்கின்ற மசோதாதான் அரசாங்க மசோதா. அமைச்சர்கள் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிமுகப்படுத்துகின்ற மசோதா தனியார் மசோதா ஆகும். அதுமட்டுமல்லாமல் பொது கருவூலதிற்குள்ள பணத்தைத் திரட்டுவதற்கும் செலவிடுவதற்கும் உள்ள மசோதா பண மசோதா என்று அழைக்கப்படுகிறது. பண மசோதா முதலில் மக்களவையில் தாக்கல் செய்யப்படுகின்றது. பணத்தோடு தொடர்பு இல்லாத மசோதாக்கள் பணம் சாராத மசோதாக்கள் ஆகும். அரசியலமைப்பு திருத்தல் மசோதாக்களும் சாதாரண மசோதாக்களும்தான் பணம் சாராத மசோதாக்களாக கருதப்படுகின்றன.

ஒரு மசோதா சட்டமாக மாறுவதற்கான பல்வேறு நிலைகளை ஆராய்வோம்.

**முதலாம் வாசிப்பு** - பணமல்லாத எந்தவொரு மசோதாவும் இரு அவைகளில் ஏதாவது ஓர் அவையில் அமைச்சராலோ அல்லது தனிப்பட்ட உறுப்பினராலோ அறிமுகப்படுத்தப்படுகிறது.

**இரண்டாம் வாசிப்பு** – இந்தக் கட்டத்தில் மசோதா குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவோ சபையில் விவாதிக்கவோ செய்கின்றனர். இது குழுநிலை என்று அறியப்படுகிறது. மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இந்தக் கட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**மூன்றாம் வாசிப்பு** – மசோதாவை சபை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ செய்கிறது.

மசோதா முதலில் தாக்கல் செய்யப்பட்ட சபையில் நடவடிக்கைகள் பூர்த்தியானால் இதே செயல்பாடு இரண்டாவது சபையிலும் திரும்பச் செய்யப்படுகிறது. இருசபைகளும் அங்கீகரித்தால் மசோதா குடியரசுத்தலைவரின் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது. குடியரசுத்தலைவரின் அங்கீகாரத்துடன் மசோதா சட்டமாக மாறுகிறது.

## அரசியலமைப்பு திருத்தம்



மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்தி தலைப்புகளைக் கவனிக்கவும்..... அரசியலமைப்பு திருத்தத்தின் தேவையை விவாதிக்கவும்.....

அரசியலமைப்பில் திருத்தங்கள், நீக்கம் செய்தல், சேர்த்தல் ஆகியவற்றை செய்தல் அரசியலமைப்பு திருத்தங்கள் என அழைக்கப்படுகின்றன. சமூக – அரசியல் தேவைகளை ஏற்றுக்கொண்டு காலத்திற்கேற்றவாறு அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு திருத்தல் செயல்பாடுகள் உதவுகின்றன. இந்தியாவில் அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மட்டுமே உள்ளது. அரசியலமைப்பின் சட்டபிரிவு 368 –ன்படி பாராளுமன்றத்துக்கு திருத்தம் செய்யும் அதிகாரம் உண்டு. திருத்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவரின் முன் அனுமதி தேவையில்லை. அரசியலமைப்பு திருத்த மசோதா சட்டமாக மாற இரு சபைகளுடையவும் அங்கீகாரம் மிகத் தேவையாகும். அரசியலமைப்பு திருத்த மசோதா மீதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இரண்டு அவைகளின் ஒருங்கிணைந்த கூட்டம் தேவையில்லை. ஏதாவது ஒரு அரசியலமைப்பு சட்டத் திருத்தம், அரசியலமைப்பின் வார்த்தைகளுக்கோ, அர்த்தத்திற்கோ எதிராக இருந்தால் அந்த சட்டத்தை ரத்து செய்வதற்கான அதிகாரம் நீதித்துறைக்கு உள்ளது.

இந்திய அரசியலமைப்பு குறிப்பிடுகின்ற பல திருத்தல் முறைகளை அறிந்துகொள்வோம்.

## திருத்தல் முறைகள்

| நெகிழ்வான திருத்தம் (Flexible Amendment) | உறுதியான திருத்தம் (Rigid Amendment) | மிக உறுதியான திருத்தம் (More Rigid Amendment) |
|---|---|---|
| சாதாரணமாக இந்திய அரசியலமைப்பின் சில சட்டப்பிரிவுகள் பாராளுமன்றத்தின் ஓரளவு பெரும்பான்மையுடன் சட்டத் திருத்தம் செய்யப்படலாம். எடுத்துக்காட்டு மாநிலங்களின் பெயர், எல்லைகள், குடியுரிமை போன்றவை. | சில முக்கியமான சட்டப்பிரிவுகளில் திருத்தம் செய்வதற்கு பாராளுமன்றத்தின் இரு சபைகளுடையவும் தனிப் பெரும்பான்மை தேவையாகும். எடுத்துக்காட்டு: அடிப்படை உரிமைகள், அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் போன்றவை. | சில முக்கியமான சட்டங்கள் பாராளுமன்றத்தின் இருச்சபைகளுடையவும் தனிப் பெரும்பான்மையுடன், பகுதிக்கும் குறையாத மாநிலங்களின் ஒப்புதலுடன் மட்டுமே திருத்தம் செய்ய முடியும். எடுத்துக்காட்டு : மத்திய, மாநில அதிகாரப் பகிர்வு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் போன்றவை. |

இந்திய அரசியலமைப்பின் மூன்று விதமான திருத்தங்களை நாம் அறிந்துகொண்டோம் அல்லவா. இதன் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலை நிரப்பவும்.

| சான்றுகள் | திருத்த முறை |
|---|---|
| மாநிலங்களின் பெயர் மாற்றம் | |
| 86 வது அரசியலமைப்பு திருத்தம் | |
| ஒருங்கிணைந்த பட்டியலில் திருத்தம் செய்தல் | |

நமது அரசியலைமைப்பு சட்டம் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப திருத்தங்கள் செய்யும் ஓர் அரசியலமைப்பு சட்டமாகும். பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றும் துறையை நாம் தெரிந்துகொண்டோம் அல்லவா? பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது சட்டச் செயலாக்கச் சபை ஆகும்.

## சட்டச் செயலாக்கப் பிரிவு (Executive)

சட்டங்கள், கொள்கைகள், ஆட்சி, நிர்வாகம் போன்றவற்றை நடைமுறைப் படுத்தும் அரசாங்கத்தின் பிரிவே சட்டச் செயலாக்கப் பிரிவு. இதை நிறைவேற்றும் அதிகாரம் குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர், பிரதமரைத் தலைவராக கொண்ட அமைச்சரவை, ஆட்சி செயலாக்கம் போன்றவர்கள் அடங்கும் அரசாங்கப் பிரிவு ஆகும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி சட்டம் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் குடியரசுத்தலைவருக்கு இருந்தாலும் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை குழுவே நடைமுறைப்படுத்துகிறது.



மேலே கொடுத்திருக்கும் நழுவு வரைபடத்தை கவனித்தீர்கள் அல்லவா? இவை ஒவ்வொன்றைக் குறித்தும் அறிந்துகொள்ளலாம்.

## அரசியல் சட்டச் செயலாக்கப் பிரிவு (Political Executive)



டாக்டர் இராஜேந்திர பிரசாத்
(இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்)

அரசியல் சட்டச் செயலாக்கப் பிரிவு என்பது குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத்தலைவர், அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கும் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் அடங்கிய பிரிவாகும். அரசியலமைப்புச் சட்டப்படி சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரம் குடியரசுத்தலைவருக்கு இருப்பினும் பிரதமர் மற்றும் அமைச்சரவை குழுவின் ஆலோசனையின்படி சட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். குடியரசுத்தலைவர் தன்னுடைய சிறப்புரிமையைப் பயன்படுத்தி செயல்படக்கூடிய சூழல்களும் உண்டு.

## குடியரசுத்தலைவர் (President)

இந்தியாவில் சட்டச் செயலாக்கப் பிரிவின் தலைவர் குடியரசுத்தலைவர் ஆவார். முப்பத்தி ஐந்து வயது நிரம்பிய இந்தியக் குடிமகனுக்கு குடியரசுத்தலைவர் பதவிக்கு தேர்தலில் போட்டியிட தகுதியுண்டு. பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் மாநில சட்டமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய தேர்தல் குழு (Electoral College) குடியரசுத்தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. ஜானதிபதியின் பதவிகாலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். பாராளுமன்றத்தை கூட்டுதல், மக்களவையைப் பிரித்துவிடுதல், பிரதமரையும் மத்திய அமைச்சர்களையும் நியமித்தல், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற உயர் நிதிபதிகளை நியமித்தல், மாநில ஆளுநர்களை நியமித்தல், அவசரநிலையை நடைமுறைப்படுத்துதல், முப்படைகளின் தலைமை தளபதியாக செயல்படுதல் போன்றவை ஜனாதிபதியின் பொறுப்புகள் ஆகும். குடியரசுத் தலைவர் தனது இராஜினாமா கடிதத்தை வழங்குவது துணைக் குடியரசுத்தலைவருக்கு ஆகும். குடியரசுத்தலைவர் இல்லாத நிலையில் துணைக் குடியரசுத்தலைவர் இந்த பொறுப்பை நிறைவேற்றுகிறார்.

## பிரதமர் (Prime Minister)

நாட்டின் ஆட்சித் தலைவரான பிரதமர் மக்களைவையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை பெற்ற கட்சியினுடையவும் கூட்டணியுடையவும் தலைவராவார். அமைச்சரவையிலும் காபினட்டிலும் உறுப்பினர்களை நியமிப்பது பிரதமர் ஆவார். அமைச்சர்களின் துறைகளில் மாற்றம் செய்தல், காபினட்டிற்கும் அமைச்சர் சபைக்கும் உறுப்பினர்களை உட்படுத்துதல், அவர்களைத் தகுதிநீக்கம் செய்தல் போன்ற அதிகாரம் பிரதமருக்கு உண்டு. குடியரசுத்தலைவரையும் அமைச்சரவை உறுப்பினர்களையும்

பாராளுமன்றத்தையும் இணைக்கும் கன்னியாக பிரதமர் செயல்படுகிறார். ஐந்து ஆண்டிற்குள் மக்களவையில் ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்தால் பிரதமர் குடியரசுத்தலைவருக்கு இராஜினாமா கடிதம் கொடுத்து பதவி விலக வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளில் சரியானவைக்கு நேராக (✓) தவறானவற்றிற்கு நேராக (×) செய்யவும்.

- சட்டச் செயலாகப் பிரிவின் தலைவர் பிரதமர். ☐
- குடியரசுத்தலைவருக்கு விருப்ப அதிகாரம் (Discretionary Power) உண்டு. ☐
- அமைச்சரவையின் தலைவர் பிரதமர். ☐
- பாதுகாப்புத்துறைகளின் தலைமை தளபதி பிரதமர். ☐
- ஆளுநரை நியமனம் செய்பவர் குடியரசுத்தலைவர். ☐
- குடியரசுத் தலைவர் இராஜினாமா கடிதம் கொடுப்பது பிரதமருக்கு ஆகும். ☐
- ஆளுநர் பிரதமரை நியமிக்கிறார். ☐

ஆட்சிக் காரியங்களில் குடியரசுத்தலைவருக்கு உதவுவது அமைச்சரைவை ஆகும். இதன் தலைவர் பிரதமர். அமைச்சரவையின் முக்கிய பொறுப்புகளைப் பரிசோதிப்போம்.

## அமைச்சரவையின் பொறுப்புக்கள்



## நிலையான சட்டச் செயலாக்கப் பிரிவு (Permanent Executive)

அரசாங்கத்தின் தினசரி செயல்பாடுகளை நிறைவேற்றுவதும் பட்ஜெட் போன்ற மசோதாக்களை உருவாக்குவதும் அரசியல் செயலாக்கப் பிரிவிற்கு உதவுவதும் பியூரோக்ரஸி (Bureaucracy) என்றறியப்படும் அலுவலர்களின் கூட்டம் ஆகும். இந்த அலுவலர்கள் கல்வித் தகுதிகளின் அடிப்படையில் போட்டித் தேர்வு வழி தேர்வு செய்யப்பட்டு பயிற்சிப் பெற்ற திறனுள்ளவர்களும் நிர்வாக அறிவு பெற்றவர்களும் ஆவர். குறிப்பிட்ட ஓய்வுபெறும் வயது வரை பதவிக்காலம் உள்ளவர்கள் ஆகையால் இவர்கள் நிலையான சட்டச் செயலாக்கப் பிரிவினர் என்று அழைக்கப்படுகின்றனர்.

## நீதித்துறைப் பிரிவு (Judiciary)





மேலே குறிபிடப்பட்டுள்ள சட்ட உருவாக்கப் பிரிவு மற்றும் சட்டச் செயலாக்கப் பிரிவுகள் அரசியல் அமைப்பு சட்டபடி செயல்படுகின்றனவா என்று உறுதி செய்யும் நிறுவனமே நீதித்துறைப் பிரிவு. குடிமகனின் உரிமைகளைப் பாதுகாக்கப்படுவதுடன் அரசியல் அமைப்பு விழுமியங்களையும் (Values) பாதுகாக்கின்றது. அதனால் நீதித்துறைப் பிரிவு அரசியலமைப்பின் காவல்காரன் என்று அறியப்படுகிறது. நல்ல செயல்திறன் கொண்ட மக்களாட்சிக்கு சுதந்திரமும் பாகுபாடற்ற நீதித்துறையும் இன்றியமையாததாகும்.




"பார் அம்மு.. உச்சநீதிமன்றத்தின் தலைமையில் ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறை அமைப்பு இந்தியாவுக்கு இருக்கிறது. இவை பிரமிடின் வடிவத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. நமது நீதிமன்றங்களின் கீழிலிருந்து மேலே போகும் தோறும் அதிகாரங்கள் கூடவும் நீதிமன்றங்களின் எண்ணிக்கை குறையவும் செய்கின்றன. கீழே வரும்போது நீதிமன்றங்களின் எண்ணிக்கை கூடவும் அதிகாரங்கள் குறையவும் செய்கின்றன."



## உச்ச நீதிமன்றம் (SupremeCourt)

இந்தியாவின் மிகவும் உயர்ந்த நீதிமன்றமான உச்ச நீதிமன்றம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி 28–ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இதன் தலைமையிடம் புது டில்லி ஆகும். உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளின் பதவிக் காலம் அறுபத்தி ஐந்து வயது வரையாகும். நீதிபதிகளின் பதவிக்காலத்திற்கு முன்னர் பதவி நீக்கம் செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் உறுதிமொழியைச் செய்து பதவியேற்பதும் இராஜினாமா கடிதம் கொடுப்பதும் குடியரசுத்தலைவரின் முன்னிலையிலாகும். பல்வேறு சட்டப் பிரச்சனைகளுக்குத் தீர்வு அளிப்பதுடன் உச்சநீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின் விளக்கவுரையாளராகவும் அடிப்படை உரிமைகளின் பாதுகாவலனாகவும் நிலை கொள்கிறது.

## உச்சநீதிமன்றத்தின் அதிகாரங்கள்

- **அசல் அதிகாரம் :** உச்ச நீதிமன்றத்திற்கு மட்டும் தீர்வு காணக்கூடிய சில பிரச்சினைகள் இதன் சிறப்பதிகாரத்தின் கீழ் வருகின்றன. (எ.கா) மத்திய–மாநில பிரச்சினைகள்.

- **மேல்முறையீட்டு அதிகாரம் :** உச்ச நீதிமன்றம் இந்தியாவின் மிக உயர்ந்த மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். அதனால் நாட்டில் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையிட்டு மனுக்களை ஏற்றுகொள்ளும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு உள்ளது.

- **அறிவுரை வழங்கும் அதிகாரம் :** உச்ச நீதிமன்றத்திற்கு ஜனாதிபதி தேவைப்படுகின்ற எந்த ஒரு கருத்தைக் குறித்தும் அரசியலமைப்புச் சட்டப்படி அறிவுரை வழங்குவதற்கான அதிகாரம் உள்ளது.

- **ரிட் அதிகாரம் :** அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அவற்றைப் பாதுகாக்கும் விதத்தில் ரிட்டுகளின் வடிவில் சிறப்பான உத்தரவுகள் வெளியிட உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரமுள்ளது.

- **மறு சீராய்வு செய்யும் அதிகாரம் :** அரசியலமைப்பின் பாதுகாவலன் என்ற பொறுப்பை நிறைவேற்றுவதில் நீதித்துறைப் பிரிவிற்கு மிகவும் பக்கபலமாக நிற்பது நீதித்துறையின் மறு சீராய்வு செய்யும் அதிகாரமாகும்.

> **நீதித்துறை மறு ஆய்வு**
> **(Judicial Reveiw)**
>
> பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்கள், மற்று செயலாக்கப் பிரிவு பிறப்பிக்கும் ஆணைகளின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி செல்லுபடியாகுமா என்று பரிசோதிப்பதற்கும் அது அரசியலமைப்புச் சட்டத்தின் கூற்றிற்கோ, பொருளுக்கோ எதிராகவுள்ளது என்று அறிந்துகொள்ளும் போது அச் செயல் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று வெளிப்படுத்துவதற்கு உச்சநீதி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரம் நீதித்துறை மறு ஆய்வு அதிகாரம் ஆகும்.

## பரஸ்பர கட்டுப்பாடும் அதிகார சமநிலையும் (Checks and Balances)

அரசியலமைப்பு ரீதியாக அரசாங்கத்தின் அதிகாரங்கள், பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. சட்ட உருவாக்கம், சட்டச் செயலாக்கம், நீதித்துறை ஆகியவைகளுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தாலும் இவற்றிற்கிடையே அறிவு பூர்வமான பரஸ்பர கட்டுப்பாடும், ஒருங்கிணைப்பும்

ST-519-11-SOC.SCI.-I (T)-9-VOL-1

அதிகாரத்தில் சமநிலையையும் உறுதி செய்வதை நமது அரசியலமைப்பு கவனத்தில் கொள்கிறது.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கப் படத்தை (Diagram) உற்று நோக்கவும்.




இந்திய அரசிலமைப்புச் சட்டம், நாட்டின் மக்களாட்சி என்ற ஆட்சி முறையையும் விழுமியத்தையும் (Values) பெற்று தேசியத்தை வளர்ப்பதில் உறுதித்தன்மை அளிக்கிறது. அதிகார மையப்படுத்துதலைத் தவிர்க்கவும் சர்வாதிக்காரப் போக்கைத் தடுக்கவும் மக்களாட்சிக் கொள்கைகளைப் பேணுவதற்குமே அரசின் அதிகாரங்கள் மூன்று பிரிவுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. சுதந்திர போராட்டத்தின் கருத்துக்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களை அரசியலமைப்புச் சட்டம் முன்மொழிகின்ற விழுமியங்கள், தொலை நோக்குப் பார்வையுடன் நடைமுறைப் படுத்துவதற்கு நம் நாடு இம்மூன்று அதிகாரப் பிரிவுகளின் வாயிலாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

## தொடர் செயல்பாடுகள்

- 'இந்தியக் கூட்டாட்சியின் சிறப்புகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தவும்.
- அரசியலமைப்பின் மூன்று அதிகார பட்டியல்களில் தற்போது எத்தனை துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை நூலகத்தின் உதவியுடன் கண்டறியவும்.
- சட்ட உருவாக்கச் செயல்பாட்டின் பல்வேறு நிலைகளை உட்படுத்தி ஒரு மாதிரி பாராளுமன்றத்தை வகுப்பில் ஒழுங்கமைக்கவும்.
- உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் குறித்து ஒரு சட்ட வல்லுனருடன் நேர்காணல் நடத்தவும்.

# 5 இந்திய மக்கள்தொகையின் போக்கு



இந்தியாவில் அதிக மக்கட்தொகை: மக்கட்தொகையும் உணவு தானிய உற்பத்தி திறனும் நேருக்குநேர்

இந்தியாவில் அதிகரித்து வரும் மக்கள் பெருக்கம் வறுமைக்கும் ஊட்டச்சத்துக் குறைவிற்கும் காரணமாகிறது.

அதிக மக்கட்தொகையுள்ள நாடு : இந்தியா மகிழுமா? பதட்டப்படுமா?

இந்தியாவின் மக்கட்தொகை: தொழில் பிரச்சினை, லட்சகணக்கான மக்களைப் பெரிய நகரங்களுக்குக் குடிபெயரச் செய்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கம் ஆரோக்கிய நிலையிலும் வாழ்க்கை தரத்திலும் நீண்ட கால நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

இந்தியாவில் மக்கள் தொகை: ஒரு சிக்கலான பிரச்சினை

செய்தி தலைப்பைப் படித்தீர்கள் அல்லவா. இந்தியாவின் மக்கட்தொகை வளர்ச்சியைக் குறித்துதான் இவை குறிப்பிடுகின்றன. மக்கட்தொகை அதிகரிக்கும்போது என்னென்ன பிரச்சினைகள் உருவாகின்றன.

- வறுமை
- வேலையின்மை
- பட்டினி
- 

ஒரு பகுதியில் குறிப்பிட்ட கால அளவில் வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கைதான் அந்தப் பகுதியின் மக்கட்தொகை. மக்களின் எண்ணிக்கை கூடும்போது நாட்டின் சமூக – பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையே செய்தி தலைப்புகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு ஏற்பட்டால் நம்முடைய நாட்டிற்கு நிலையான முன்னேற்றத்தை பெறமுடியுமா? பூமியில் கிடைக்கின்ற வளங்களுக்கு ஏற்ப மக்கட்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டுமல்லவா?

### யுனைட்டட் நேஷன் போப்புலேஷன் பண்ட் (UNFPA)

ஐக்கியநாட்டு சபையின் கீழுள்ள ஒரு சர்வதேச ஏஜென்சிதான் யுனைட்டட் நேஷன்ஸ் போபுலேஷன் பண்ட். எல்லா தனிநபர்களுக்கும் சிறந்த இனப்பெருக்க சுகாதார அமைப்புகள், தன்னார்வ குடும்பக் கட்டுப்பாடுகள் தாய்மார்களின் ஆரோக்கிய உடல் நலப் பாதுகாப்பு, முதியோர் பாதுகாப்பு, விரிவான பாலியல் கல்வி என்பவை கிடைக்க செய்தலும் அதன்மூலம் மக்கட்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதே இதனுடைய முக்கிய நோக்கம்.

2023 இல் யுனைட்டட் நேசன்ஸ் போப்புலேஷன் பண்ட் (UNITED NATIONS POPULATION, FUND) அறிக்கையின்படி உலக மக்கட்தொகை 804.5 கோடியும் இந்தியாவின் மக்கட்தொகை142.86 கோடியுமாகும்.

ஒருநாட்டின் அல்லதுபகுதியின் சமூக வளர்ச்சி குறியீட்டை தீர்மானிப்பது அங்குள்ள மக்கட்தொகை விவரங்களின் (பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், குழந்தைகள் இறப்பு விகிதம், வயது நிலை போன்றவை) அடிப்படையிலாகும். அதற்காக மக்கட்தொகையினுடைய வெவ்வேறு போக்குகளையும் மக்கட்தொகை அமைப்புகளையும் குறித்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பிறப்பு – இறப்பு விகிதங்கள், குடியேற்றம் மக்கட்தொகை அடர்த்தி போன்ற மக்கட்தொகை அமைப்பு குறித்து படிக்கின்ற அறிவியல் பிரிவு மக்கட் தொகையியல் (Demography) எனப்படுகிறது.

ஒரு பகுதியின் பல்வகையான மனித வளங்களையும் அதன் கட்டமைக்கப்பட்ட மாற்றங்களையும் மக்கட்தொகையியல் பகுப்பாய்வு செய்கிறது. இந்த மனிதவளங்கள் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டுமென்ற தெளிவான கல்விமுறைதான் மக்கட்தொகையியல், என்ற பொருளில் அமையும்.

முறையான மக்கட்தொகை கல்விதான் மக்கட்தொகையியல் (Demography). இந்தச் சொல் கிரேக்க வார்த்தையான Demos (மக்கள்) Graphein (விவரிப்பது) என்பவை சேர்ந்து உருவானதாகும்.

மக்களைப் பற்றியுள்ள விளக்கத்தைக் குறிப்பிடுவது. மக்கட்தொகையுடன் தொடர்புடைய போக்குகளையும் செயல்முறை களையும் குறித்த கல்வியாகும்.

மக்கட்தொகை பெருக்கத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், குடியேற்றம் போன்றவையாகும். ஒரு பகுதியில் மக்கட் தொகை பெருக்கத்தில் (Size of Population) மாற்றம் ஏற்படுத்துவது மேற்குறிப்பிட்டவையின் அளவின் அடிப்படையிலாகும். ஒரு பகுதியின் மக்கட்தொகை அமைப்பை ஒழுங்குபடுத்துவதும் (Structure and composition of population) புரிந்துகொள்வதும் அங்குள்ள மக்களின் வயதுநிலை, ஆண், பெண் விகிதம், சார்பு விகிதம் போன்றவற்றின் கணக்கெடுப்பு அடிப்படையிலாகும்.

ஒரு நாட்டில் வசிக்கும் மக்களை முறையான தகவல் சேகரிப்பு, மக்கட்தொகை கணக்கெடுப்பு, போன்றவற்றின் அடிப்படையில் மக்கட்தொகை கல்வி நடைபெறுகிறது. மக்கள் தொகை அறிவியலின் ஊகங்கள் விகித அளவில் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டு – பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், ஆண் – பெண் விகிதம், சார்பு விகிதம் போன்றவையாகும்.

சமூக மக்கள் தொகை அறிவியலும், முறையான மக்கட்தொகை அறிவியலும் மக்கட்தொகை அறிவியலின் இரண்டு கிளைகளாகும்.

சமூக மக்கட்தொகை அறிவியல் (Social Demography)மக்கட்தொகையின் கட்டமைப்பையும் அதில் ஏற்படும் மாற்றத்தின் காரணங்களையும் பின் விளைவுகளையும் ஆராய்கின்றன. ஒரு பிரதேசத்தின் சமூக–பொருளாதார–அரசியல் முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. முறையான மக்கதொகை அறிவியல்

(Formal Demography) மக்கட்தொகை மாற்றத்தின் காரணிகளை, அளக்கவும், பகுப்பாய்வு செய்யவும் செய்கிறது. முறையான மக்கட்தொகை அறிவியல் கல்விக்கு எடுத்துக்காட்டுதான் மக்கட்தொகை கணக்கெடுப்பாகும் (Census) இது ஒரு நாட்டில் மக்களின் எண்ணிக்கை, வயது நிலை, ஆண்–பெண் விகிதம் சமூக – பொருளாதார நிலை, போன்றவற்றை சேகரித்துப் பகுப்பாய்வு செய்கிறது.

இந்தியாவில் மக்கள் தொகை (Census) கணக்கெடுப்பு செயல்பாடுகளுக்கு தலைமை தாங்குவது ரெஜிஸ்ட்றார் ஜெனரல் அன்ட் சென்செஸ் கமிஷனர் ஆப் இந்தியா ஆவார். உலகிலேயே மிகப்பெரிய மக்கள் தொகை கணக்கெடுப்பு இந்தியாவுடையதாகும். பொதுவாகப் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் இந்தியாவில் மக்கட்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.



- இந்தியாவில் மக்கட்தொகை கணக்கெடுப்புத் தொடங்கியது எப்போது?
- இந்தியாவில் கடைசியாக மக்கட்தொகை கணக்கெடுப்பு நடந்தது எப்போது?

## இந்தியாவின் மக்கட்தொகை வளர்ச்சி

| வருடம் | மொத்த மக்கட்தொகை (பத்து லட்சத்தில்) |
|---|---|
| 1901 | 238 |
| 1911 | 252 |
| 1921 | 251 |
| 1931 | 279 |
| 1941 | 319 |
| 1951 | 361 |
| 1961 | 439 |
| 1971 | 548 |
| 1981 | 683 |
| 1991 | 846 |
| 2001 | 1028 |
| 2011 | 1210 |




கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை மற்றும் வரை படத்தைக் கவனித்து இந்தியாவில் மக்கட்தொகை வளர்ச்சியைக் குறித்து குறிப்பு தயாராக்கவும்

Source: Census of India 2011 (Provisional).
website: http//censusindia.gov.in

## மக்கட்தொகையியலின் சமூக முக்கியத்துவம்

மக்கள்தொகையியல் என்பது பல்வேறு மக்களைப் பற்றிய ஆய்வு ஆகும். மக்கள் தொகையின் இயக்கத்தையும் வளர்ச்சியையும் குறித்துப் படிப்பதாகும். மக்கள் தொகை பகுப்பாய்வு சாத்தியமாவது அது சமூகச் சூழலுடன் இணைந்து செயல்படும் போதாகும். மக்கட்தொகையியல் என்பது, மக்கள்தொகை அமைப்பும், மாற்றமும், அவற்றோடு தொடர்புடைய சமூக ஆய்வுகளும் அது எவ்வாறு சமூகவியல் காரணிகளுடன் (பிரதேசம், மதம், ஜாதி, பாலினம் போன்றவை) தொடர்புகொண்டுள்ளது என்பதை பற்றியுமாகும். ஒரு பகுதியில் உள்ள மக்கள் தொகை காரணிகள் அந்தப் பகுதிகளில் உள்ள பல்வேறு சமூகக் காரணிகளுடன் எவ்வாறு தொடர்புகொள்கின்றன என்பதை சமூக மக்கள் தொகை பகுப்பாய்வு செய்கிறது.

<u>சமூகக் காரணிகள்</u> :

- கலாச்சாரம்
- பழக்கவழக்கம்
- மதம்
- சமூகக் கட்டுப்பாடு
- பொருளாதாரம்
- சமுதாயம் போன்றவை

<u>மக்கள்தொகை காரணிகள்</u> :

- மக்கள் தொகை அளவு
- வயதும் பாலின நிலையும்
- மக்கள்தொகை மாற்றம்
- உள்நாட்டு குடியேற்றம்
- சர்வதேசக் குடியேற்றம்
- நோயற்ற தன்மை போன்றவை

இந்தியாவில் மக்கள்தொகை ஆய்வுகளை நடத்தும் முக்கியமான நிறுவனங்கள் நேஷனல் ஸ்ட்டாடிஸ்டிக்கல் ஆபீஸ் (NSO) நீதி ஆயோக் (National Institution for Transforming India) நேஷனல் இன்ஸ்டிட்யூட் பார் போப்புலேஷன் சயன்ஸ் (NIPS) நேஷனல் பாமிலி ஹெல்த் சர்வே போன்றவையாகும்.

மக்கள்தொகையியலின் பல்வேறு குறியீடுகளைப் பற்றி அறிந்துகொள்வோம்.




## குடியேற்றம்

இந்தக் கவிதையை கவனிக்கவும்

“ജനിച്ചനാടുവിട്ടകലെയാസ്സാമിൽ
പണിക്കുപോകുന്ന പരിഷകൾ നമ്മൾ
കുതിച്ചു തീവണ്ടി കിതച്ചു പായുന്നു
തിരയടിക്കും താഴ്‌വാരവും പാടവും”

ആസ്സാം പണിക്കാർ (വൈലോപ്പിള്ളി ശ്രീധരമേനോൻ)

இரண்டாம் உலகப்போரின்போது கேரளத்தில் இருந்து அசாமுக்கு தொழில்தேடிச் சென்ற தொழிலாளர்களைக் குறித்து வைலோபள்ளி தனது கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

1941 காலகட்டத்தில் கேரள மக்கள் தொழில்தேடி அசாமுக்கு போயிருந்தார்கள் என்று புரிந்து கொண்டீர்கள் அல்லவா? தற்போது அசாமில் இருந்தும் பிற மாநிலங்களில் இருந்தும் மக்கள் கேரளத்துக்கு வருகிறார்கள்.

**வெளிமாநில தொழிலாளர்களை 'அதிதிதொழிலாளர்' (Guest workers) என்று அழைத்தது கேரளம், உலகம் கைத்தட்டியது.**

கேரளத்தில், புலம் பெயர்ந்த தொழிலாளர்களை "அதிதி தொழிலாளிகள்" என்ற ஒரு புதிய சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

கொடுக்கப்பட்டுள்ள செய்தியைக் கவனித்தீர்கள் அல்லவா? அதிதி தொழிலாளர்கள் என்ற சொல்லை நீங்கள் எங்கேயாவது கேட்டுள்ளீர்களா?

அதிதி தொழிலாளர்கள் இன்று கேரள சமூகத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டனர். நகரம் – கிராமம் என்று பாராமல் அனைத்துத் துறைகளிலும் இன்று அதிதி தொழிலாளர்கள் உள்ளனர். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வேலை தேடிச் செல்வதற்கான காரணங்கள் எவை?

மேலும் தகவல்களைச் சேர்க்கவும்.

- மேம்பட்ட வருமானம்
- உயர்ந்த சமூக நிலை
- 
- 

### கேரளத்தில் குடியேற்ற வரலாறு

மலையாளம் பேசும் மக்கள் தேசிய உணர்வு, மொழி, புவியியல் என்பவற்றின் அடிப்படையில் கேரளியர்களாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு முன்பே இங்கிருந்து பலவகையான குடியேற்றங்களும், புலம்பெயர்வும் நடந்தன. கேரளத்திலிருந்து ஆங்கிலேயர்களின் காலனியில் அடிமைத் தொழிலாளிகளாக கேரளமக்களை வலுக்கட்டாயமாகப் பயன்படுத்தினர். 20 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் மத்திய மற்றும் தெற்கு கேரளத்திலிருந்து மலபார் பகுதிக்கு தனியாகவும் கூட்டமாகவும் குடியேற்றங்கள் நடைபெற்றன. இந்தக் காலகட்டத்தில் மலையாளிகள் வேலை தேடி மும்பை (பம்பாய்) சென்னை (மெட்ராஸ்) கொல்கத்தா (கல்கத்தா) டெல்லி போன்ற இந்தியாவின் பெரு நகரங்களுக்கு பரவலாக சென்றது மக்கள் தொகையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும். இதற்குப் பிறகுதான் கேரளத்திலிருந்து வளைகுடா பகுதிகளுக்கு பரவலான இடம்பெயர்வு நடைபெறுகிறது. உலக வளர்ச்சியில் முன்னணியில் இருக்கும் உலகநாடுகளுக்கு வேலைக்காகவும், நிரந்தரமாக வசிப்பதற்கும் மலையாளிகள் சென்றுள்ளனர். கேரளத்திலிருந்து குடியேறியவர்களில் பெரும்பாலோரும் கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகளைத் தேடி செல்கின்றனர். கனடா, யு.கே, யு.எஸ்.எ, நியூசிலான்ட் போன்ற நாடுகளுக்கு தற்போது ஏராளம் மக்கள் குடியேறுகின்றனர்.

மேலே கூறப்பட்ட காரணங்களிலிருந்து குடியேற்றம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ இடம்பெயர்வதுதான் குடியேற்றம். முக்கியமாக இரண்டு வகையான குடியேற்றங்கள் உள்ளன.

### உள்நாட்டுக் குடியேற்றம்

நாட்டின் எல்லைகளுக்கு உள்ளேயே உள்ள குடியேற்றங்கள் உள்நாட்டு குடியேற்றம் என்று கூறுவர். கேரள– மக்கள் தொழில் தேடி பிற மாநிலங்களுக்கு போவதும் பிற மாநிலங்களிலிருந்து மக்கள் கேரளத்திற்கு வருவதும் உள்நாட்டு குடியேற்றத்துக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### சர்வதேச குடியேற்றம்

நாட்டின் எல்லையைக் கடந்து குடியேறுவதை சர்வதேச குடியேற்றம் என்பர். இந்தியாவில் இருந்து வளைகுடா நாடுகளுக்கும் ஐரோப்பா நாடுகளுக்கும் மக்கள் செல்வது சர்வதேச குடியேற்றத்துக்கு எடுத்துக்காடுகளாகும்.

குடியேற்றம் ஒரு பகுதியின் மக்கள்தொகை அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.



பல வகையான குடியேற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை எந்தெந்தக் குடியேற்றங்கள் என்பதைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்தவும்.

- வெளி நாடுகளில் வேலை செய்யும் மலையாளிகள்
- கேரளத்தில் கட்டுமானத்துறையில் பணிபுரியும் வடமாநிலத் தொழிலாளர்கள்
- கல்வித் தேவைக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள்

| உள்நாட்டு குடியேற்றம் | சர்வதேச குடியேற்றம் |
|---|---|
| • | • |

## பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும்

ஒரு பகுதியின் மக்கள் தொகை வளர்ச்சியை மதிப்பிடுவதில் பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் முக்கியமான காரணிகளாகும்.

ST-519-12-SOC.SCI.-I (T)-9-VOL-1

மக்கள் தொகையில் ஆயிரம் பேருக்கு இடையில் எத்தனை குழந்தைகள் உயிருடன் பிறக்கிறார்கள் என்பது பிறப்பு விகிதமாகும்.

மொத்த மக்கள் தொகையில் ஆயிரம் பேரில் எத்தனை மரணங்கள் நிகழ்கின்றன என்பது இறப்பு விகிதமாகும்.

பிறப்பு விகிதத்திற்கும், இறப்பு விகிதத்திற்கும் இடையிலான வேறுபாட்டால்தான் மக்கள் தொகை வளர்ச்சி அளவிடப்படுகிறது. பிறப்பு விகிதம் குறையவும் இறப்பு விகிதம் அதிகரிக்கவும் செய்யும்போது மக்கள்தொகை வளர்ச்சி குறைகிறது. இறப்பு விகிதத்தைவிட பிறப்பு விகிதம் கூடும்போது மக்கள்தொகை கூடுகிறது.

### குழந்தை இறப்பு விகிதம்

ஓர் ஆண்டில் 1000 உயிருள்ள பிறப்புகளில் ஒரு வயதிற்குள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குழந்தை இறப்பு விகிதம் (Infant Mortality) என்பர்.

### தாய் இறப்பு விகிதம்

ஓர் ஆண்டில் மகப்பேரின் போது 1000 பெண்களில் எத்தனை பெண்கள் இறக்கின்றனர் என்பதைத் தாய் இறப்பு விகிதம் என்பர்.

ஒரு நாட்டின் அதிக குழந்தை இறப்புவிகிதம் மற்றும் தாய் இறப்புவிகிதம் ஆகியவை அந்த நாட்டின் வறுமையையும் பின்தங்கிய நிலையையும் சுட்டிக்காட்டுகின்றன.

### இந்தியாவில் பிறப்பு – இறப்பு விகிதம் 1901 – 2001




| ஆண்டு | பிறப்பு விகிதம் | இறப்பு விகிதம் |
|---|---|---|
| 1901 | 49.2 | 42.6 |
| 1911 | 48.1 | 47.2 |
| 1921 | 46.4 | 36.3 |
| 1931 | 45.2 | 31.2 |
| 1941 | 39.9 | 27.4 |
| 1951 | 41.7 | 22.8 |
| 1961 | 41.2 | 19 |
| 1971 | 37.1 | 14.8 |
| 1981 | 33.9 | 12.5 |
| 1991 | 29.5 | 9.8 |
| 2001 | 26 | 9 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை மற்றும் வரைபடத்தைக் கவனித்து இந்தியாவின் பிறப்பு விகிதத்தையும் இறப்பு விகிதத்தையும் கண்டறியவும். 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் பிறப்பு விகிதம் இறப்பு விகிதம் கண்டறியவும்.

*Source: SRS Bulletin, Registrar General of India, 2016, National Commission on Population, Government of India.*
*website: http://populationcommission.nic.in/facts1.htm#*

பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் துல்லியமான புள்ளி விவரங்கள் அவற்றோடு தொடர்புடைய நிறுவனங்களுக்கு தெரிவிப்பதைச் சார்ந்துள்ளது. இந்தியா உட்பட பெரும்பாலான நாடுகளில் பிறப்பு மற்றும் இறப்புகளைச் சரியான நேரத்தில் பதிவு செய்யவேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

கிராமப்புறங்களில் பிறப்பு – இறப்பு பதிவு செய்யப்பட வேண்டிய இடம் எது? நகரம்/ பட்டணங்களில் பிறப்பு – இறப்பு பதிவு செய்யப்பட வேண்டிய இடம் எது?

தொற்றுநோய், பஞ்சம், காலநிலை மாற்றம் போன்றவை இறப்பு விகிதத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பற்றி விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவிலும், கேரளத்திலும் பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் கண்டறிந்து குறிப்பேட்டில் பதிவு செய்யவும்.

## மக்கள் தொகை அடர்த்தி

ஒரு பகுதியின் முக்கிய சமூக – பொருளாதார காரணிகளை வெளிபடுத்துகின்ற ஒன்றே மக்கள் தொகை அடர்த்தி.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட கால அளவில் வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கையே அப்பகுதியின் மக்கள் தொகை எனப்படும். ஒரு சதுர கிலோமீட்டரில் வாழும் மக்களின் சராசரி எண்ணிக்கையே மக்கள் தொகை அடர்த்தி (Density of Population) எனப்படும்.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையை ஆய்வு செய்து, மக்கள் தொகை, மக்கள்தொகை அடர்த்தி கூடிய மாநிலங்கள், மற்றும் குறைந்த மாநிலங்கள் எவையெனக் கண்டறிந்து விளக்கப்படம் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்தவும்.

இந்தியாவில் மக்கள்தொகை அடர்த்தி வட்டார அளவில் வேறுபட்டு காணப்படுகிறது. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி டெல்லி மக்கள் தொகை அடர்த்தியில் மிகவும் முன்னிலும் அருணாச்சலபிரதேசம் மிகவும் பின்னிலும் உள்ளது.

மக்கள்தொகை அடர்த்தி அதிகம் உள்ள பகுதியில் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள் என்னென்ன என்று பட்டியலைப் பூர்த்தி செய்யவும்



- இடப் பற்றாக்குறை
- மாசடைதல்
- நீர் சேமிப்புப் பற்றாக்குறை
- மக்கள் கூட்டம்
- 
- 

இந்தியாவில் சில மாநிலங்களில் மக்கள்தொகை மிக அதிகமாகவும் மற்ற சில மாநிலங்களில் மிக குறைவாகவும் இருப்பதற்கான காரணங்கள் எவை?

- காலநிலை
- நில அமைப்பு
- கிடைக்கும் நீரின் அளவு
- மண் வகைகள்
-
-

## ஆண் – பெண் விகிதமும் குழந்தைகளின் பாலின விகிதமும்

ஆண் – பெண் விகிதம் மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்திலும் அதன் பரிணாமத்திலும் தாக்கம் செலுத்துகிறது. மக்கட்தொகையின் ஆண் – பெண் விகிதம், பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், குடியேற்றம் என்பவற்றைப் பாதிக்கிறது.

ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆயிரம் ஆண்களுக்கு நிகராக எத்தனை பெண்கள் என்பதை கணக்கிடுவதே ஆண் – பெண் விகிதம் (Sex Ratio) என்பர்.

0 - 6 வயதிற்குட்பட்ட ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு நிகராக எத்தனை பெண் குழந்தைகள் என்று கணக்கிடுவதே குழந்தைகளின் பாலின விகிதம் (Child Sex Ration) என்று கூறுவர்.

### இந்தியாவில் குறைந்து வரும் ஆண்–பெண் விகிதமும் குழந்தைகளின் பாலின விகிதமும் 1961-2011

| ஆண்டு | ஆண்–பெண் விகிதம் | குழந்தைகளின் பாலின விகிதம் |
|---|---|---|
| 1961 | 941 | 960 |
| 1971 | 930 | 964 |
| 1981 | 934 | 962 |
| 1991 | 927 | 945 |
| 2001 | 933 | 927 |
| 2011 | 940 | 914 |

*Source: *Census of India 2011 (Provisional) Government of India*

அட்டவணையை உற்றுநோக்கி, இந்தியாவின் ஆண் – பெண் விகிதம், குழந்தைகளின் பாலின விகிதம் ஆகியவற்றின் போக்குகளைப் பற்றி விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும். கேரளாவின் ஆண் பெண் விகிதம் மற்றும் குழந்தைகளின் பாலின விகிதத்தையும் ஒப்பிடுக.

ஆண் – பெண் விகிதத்தில் ஆண் பெண் சமநிலை முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு பகுதியின் மக்கள் தொகை வளர்ச்சியை முன்கூட்டியே கணிப்பதற்கும் மக்கள்தொகையின் அளவைக் கணக்கிடுவதற்கும் ஆண் – பெண் விதிதம் பயன்படுத்துகின்றனர்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவிலும் கேரளத்திலும் ஆண் பெண் விகிதம் எவ்வளவு?

ஆண் – பெண் விகிதம் குறைவதால் என்னென்ன சமூக பிரச்சினைகள் உருவாகின்றன?

•

•

•

•

இந்தியாவில் ஆண் – பெண் விகிதத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை நீதிஆயோக் முன்வைத்துள்ளது. கீழே கொடுக்கபட்டுள்ள பகுதிகளில் கவனம் செலுத்துமாறு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- பெண் குழந்தைகளுக்குச் சிறந்த சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி போன்றவை வழங்குதல்
- பெண்களையும், பெண் குழந்தைகளையும் வலிமைப்படுத்துதல்.

## ஆயுட்காலம்

அனைத்து நாடுகளும் தங்கள் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், இறப்பு விகிதத்தைக் குறைக்கவும் முயற்சி செய்கின்றன. ஒரு பகுதியின் மக்கள்தொகை வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கான ஒரு முக்கிய காரணியே ஆயுட்காலம்.

ஒரு நபர் சராசரியாக எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்கிறார் என்ற கணக்குதான் ஆயுட்காலம் என்று கூறப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஒவ்வொரு வயதினருக்கும் இறப்பு விகிதத்தின் அடிப்படையில் ஆயுட்காலம் கணக்கிடப்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கவனிக்கவும்.

| மாநிலம்/ மத்திய ஆட்சிபகுதி | ஆயுட்காலம் (ஆண்) | ஆயுட்காலம் (பெண்) |
|---|---|---|
| கேரளம் | 72.3 | 78.0 |
| மகாராஷ்டிரா | 71.6 | 74.0 |
| பஞ்சாப் | 71.1 | 74.7 |
| உத்திர பிரதேசம் | 65.0 | 66.2 |
| சத்தீஸ்கட் | 63.7 | 66.9 |
| இந்தியா | 68.4 | 71.1 |

குறிப்பு : NSO, 2022

2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய புள்ளியியல் அலுவலக அறிக்கையின்படி (NSO), இந்தியாவில் ஆண்கள் மற்றும் பெண்களின் ஆயுட்காலம் 2015 - 19 கால அளவில் முறையே 71.1 உம் 68.4 உம் ஆகும். அதே நேரம் கேரளாவில் ஆண் – பெண் ஆயுட்காலம் 78.0 உம் 72.3–உம் ஆகும்.

கேரளத்தில் உயர்ந்த ஆயுட்காலத்துக்குப் பல காரணிகள் காரணமாகின்றன.

- உயர்ந்த கல்வியறிவு விகிதமும், மேம்பட்ட கல்வியும்
- பரவலாக்கப்பட்ட பொது நலவாழ்வுத்திட்டம்
- தூய்மை
- உணவு கிடைத்தலும் பொது விநியோகமும்

☎ **14567**

முதியோர்க்கான உதவி எண்

முதியோர்களின் சமூக நலன் மற்றும் பாதுகாப்புக்காக அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. கேரளத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் முதியோர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாநில அரசு 2013 –ல் "மாநில முதியோர் கொள்கையை" நடைமுறைப்படுத்தியது.

முதியோர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பகல்வீடு, முதியோர் ரக்ஷா திட்டம், வயோமித்ரம் திட்டம், அமிர்தம் திட்டம் போன்றவற்றை அரசு செயல்படுத்திள்ளது. இவற்றைப் பற்றிய சிறுகுறிப்பு தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.



உலக மக்கள்தொகை தினம் என்று கொண்டாடப்படுகிறது? உலக மக்கள்தொகை தினச்செய்தி அடங்கிய அட்டை தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

## மக்கள்தொகை வயது நிலை

மக்கள்தொகை கட்டமைப்பின் முக்கியமான குறியீடே மக்கள் தொகை வயது நிலை.

ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பேர்கள் உள்ளனர் என்பதை ஒப்பிட்டு கூறுவதை (Age structure of population) மக்கள்தொகையின் வயது நிலை அமைப்பு என்பர்.

முன்னேற்றம், சராசரி ஆயுட்காலம் போன்றவற்றிலுள்ள மாற்றங்கள் வயது நிலை அமைப்பைப் பாதிக்கின்றன. மக்கள் தொகையை வெவ்வேறு வயது நிலை பிரிவுகளாகப் பிரித்து மொத்த மக்கள் தொகையில் ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பேர் உள்ளனர் என்று ஒப்பிட்டு கூறுவதை மக்கள் தொகையின் வயது நிலை என்பர்.

| வயது நிலை | பருவம் |
|---|---|
| 0-14 | குழந்தைகள் |
| 15-59 | இளைஞர்கள் |
| 60 க்கு மேல் | முதியோர்கள் |

*Source: Technical Group on Population Projections (1996 and 2006) of the National Commission on Population. http://populationcommission.nic.in/facts1.htm*

ஒரு பகுதியின் பிறப்பு விகிதமும், இறப்பு விகிதமும் அந்த பகுதியின் மக்கள் தொகை வயது நிலை அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நம்முடைய நாட்டில் முன் காலத்தில் முறையான சுகாதாரப் பாதுகாப்புபின்மை, நோய், பிற காரணிகள் ஆகியவை சராசரி ஆயூட்காலம் குறைவதற்குக் காரணமாயின. அதுமட்டுமன்றி குழந்தை – தாய் இறப்பு விகிதம் உயர்ந்ததும் வயது நிலை அமைப்பில் தாக்கம் செலுத்தியது. ஆனால் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ப வாழ்க்கைத் தரம் உயரவும் ஆயுட்காலம் கூடவும் செய்தன. வயதான பிரிவினரின் வயது நிலை விகிதம், குறைந்த வயதுநிலை பிரிவினரைவிட அதிகரிக்கிறது. இந்த வயது நிலை அமைப்பு வயது முதிர்ந்த மக்கள் தொகை என்று அழைக்கப்படுகிறது.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் உள்ள வயதுப் பிரிவு, புள்ளிவிவரம் கீழே கொடுக்கபட்டுள்ளது.



| மக்கள் தொகையின் வயதுநிலைப் பிரிவு | மக்கள் தொகை (சதவீதம்) |
|---|---|
| 0 – 14 வயது | 29 |
| 15 – 59 | 63 |
| 60 வயதும் அதற்கு மேலும் | 8 |

*Source: Based on data from the Technical Group on Population Projections (1996 and 2006) of the National Commission on Population.*

*Webpage for 1996 Report: http://populationcommission.nic.in/facts1.htm*

- மிகவும் கூடுதல் மக்கள்தொகை எந்த வயதுநிலைப் பிரிவில் உள்ளது?
- குறைந்த மக்கள்தொகை எந்த வயதுநிலைப் பிரிவில் உள்ளது?

இந்தியாவில் இளைஞர்கள் அதிக விகிதத்திலும், முதியோர் குறைந்த விகிதத்திலும் இருப்பதாக அட்டவணை குறிப்பிடுகிறது. இளைஞர்களுக்கு அதிக தொழில் வாய்ப்பு அளிக்கவும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் முடியும். இதற்காக இளைஞர்களுக்குக் கல்வியிலும் ஆரோக்கிய பாதுகாப்பிலும் அதிக முக்கியத்துவம் தேவை. அதே வேளையில் முதியோர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகளில் அதிக கவனம் வேண்டும்.



2011 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியா மற்றும் கேரளத்தின் மக்கள்தொகை வயதுநிலை அமைப்பைக் கண்டுபிடித்து முதிர்வயதினரால் நாடும் மாநிலமும் எவ்வாறு பாதிப்படைகின்றன என்பதைக் குறித்து வகுப்பில் கலந்துரையாடவும்.

## சார்பு விகிதம்

ஒரு நாட்டில் உழைக்கும் திறன் மிக்க மக்கள்தொகை 15 முதல் 64 வயது வரையுள்ளவர்கள் (செயல்திறன் மிக்க வயது நிலை அமைப்பு) ஆவர். 15 வயதிற்குக் கீழாகவும் 64 வயதுக்கு மேலாகவும் வயது நிலைப் பிரிவில் உள்ளவர்கள் சார்பு நிலைப் பிரிவில் உட்படுவர்.

மக்கள் தொகையில் சார்ந்திருக்கும் பிரிவையும், உழைப்பு திறன் கொண்டவர்களையும் ஒப்புமைப் படுத்தும் அளவுகோலைச் சார்புவிகிதம் என்கிறோம்.

சார்பு விகிதம் ஒரு நாட்டின் பொருளாதார மேன்மையில் ஒரு எல்லைவரை தாக்கம் செலுத்துகிறது. சார்பு விகிதத்தைப் புரிந்துகொள்ளுதல் மூலமாக அரசாங்கத்திற்கு சுகாதாரமுறை, கல்வி துறை ஆகியவற்றைக் குறித்து தெளிவாக மதிப்பீடு செய்வதற்கும் அதனுடன் அதை மேம்படுத்துவதற்கான செயல்பாடுகளைச் செய்வதற்கும் முடிகிறது. நலச் செயல்பாடுகளும் பராமரிப்பும் தேவை உள்ளவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தேவையான நலத் திட்டங்களை உருவாக்குவதற்கு சார்பு விகிதம் உதவுகிறது.

சார்பு விகிதம் உயரும்போது, முதியோர் எண்ணிக்கையும் அதிகரிப்பது நாடு எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் ஒன்றாகும். உழைக்கும் திறன் கொண்டவர்கள் (15 ற்கும் 64 ற்கும் இடையில் வயதுள்ளோர்) வேலையில் ஈடுபட முடியாமல் உள்ள ஒரு பெரிய பிரிவினரை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். சார்பு விகிதம் குறைவது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் வழிவகுக்கிறது. அதாவது வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையைவிட வேலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இது மக்கள்தொகை இலாப விகிதம் அல்லது மக்கள்தொகை நன்மை என்று அழைக்கப்படுகிறது (Demographic Dividend) வேலை செய்பவர்கள் படிப்படியாக வேலை செய்ய முடியாதவர்களாக மாறுவதால் இது நிலையாக இருக்காது.

**மக்கள் தொகை இலாப விகிதத்தின் நன்மைகள்**

- நாட்டின் சமூக – பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது
- நாட்டின் உற்பத்தி அதிகரிக்கிறது
- நாடு அதிக மனித வளங்களையும் பெறுகிறது

மக்கள் தொகை இலாப விகிதத்தின் முழுப்பலனையும் பெறுவதற்கு இளைஞர்களுக்குச் சிறந்த வேலை வாய்ப்பு தேவையாகும், அதற்காக பல நிறுவனங்கள் உள்ளன.

கேரளத்தில் தொழில் முனைவோரின் வளர்ச்சிக்கும், செயல்பாடுகளுக்குமுள்ள அரசாங்கத்தின் நோடல் ஏஜென்சிதான் கேரளா ஸ்டார்டப் மிஷன், தொழில்நுட்பம் சார்ந்த வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக 2006 இல் திருவனந்தபுரத்தை மையமாகக்கொண்டு இதன் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவின் மக்கள்தொகை இலாபவிகிதத்தின் பலன்களை அடைய எவற்றைப் பின்பற்ற வேண்டும், என்பதைப் பற்றி விவாதித்து குறிப்பு தயார் செய்யவும்.

இந்தியாவின் மக்கள்தொகை இளைஞர்கள் நிறைந்ததாக இருந்தது. அதாவது இங்கு பெரும்பான்மையானவர்கள் இளைஞர்கள் ஆவர். நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு மனிதவளத்தின் பங்கு முக்கியமானதாகும். இந்தப் பாடத்தில் மக்கள்தொகை போக்குகளான பிறப்பு –இறப்பு விகிதம், குடியேற்றம், வயது நிலை ஆண் – பெண் விகிதம், சார்பு விகிதம், ஆயுட்காலம் போன்றவற்றை நாம் விவாதித்தோம். மக்கள்தொகை இலாபவிகிதத்தில் இளைஞர்களுக்கு பலன் அளிக்கும் அதே வேளையில் சார்ந்திருக்கும் குழுக்களின் பாதுகாப்பபையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### தேசிய மக்கள் தொகைக் கொள்கை

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே இந்தியாவில் பெருகிவரும் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும் ஆலோசனைகள் தேசியவாத இயக்கங்களின் ஒரு பகுதியாக தொடங்கின. சுதந்திரத்திற்குப் பிறகு அரசாங்கத்தின் தலைமையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்திய முதல் வளரும் நாடாக இந்தியா மாறியது. இந்தியாவின் முதல் தேசிய மக்கள்தொகைக் கொள்கை 1976 இல் நடைமுறைக்கு வந்தது. அதன்பிறகு நீண்ட கால சாதனைகளின் அடிப்படையில் டாக்டர். எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் புதிய தேசிய மக்கள் தொகை கொள்கையின் வரைவு உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தற்போதைய தேசிய மக்கள்தொகைக் கொள்கை 2000 இல் அமலுக்கு வந்தது. 2045 ஆம் ஆண்டிற்குள் நிலையான பொருளாதாரவளர்ச்சி, சமூக முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை வலுப்படுத்தும் வகையில் மக்கள் தொகையை ஒழுங்கு படுத்த வேண்டும் என்பதுதான் 2000 ஆம் ஆண்டின் தேசிய மக்கள் தொகைக் கொள்கையின் நீண்டகால லட்சியமாகும்.

Courtesy: National Population Policy 2000 Published by Govt. of India.

ஒவ்வொரு தனிநபரின் அறிவு மற்றும் திறன்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட, சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை நாட்டின் மனித வளத்திற்கு அடையமுடியும். இந்தியாவின் மக்கள்தொகை வளர்ச்சியும் கிடைக்கக்கூடிய வளங்களும் எதிர்காலத் தலைமுறைக்கு நன்மை பயக்கும் வகையில் சுற்றுச்சூழல் வளங்களைப் பயன்படுத்துவதின் மூலமும் தற்போதைய தலைமுறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும் மட்டுமே நிலையான வளர்ச்சியை அடைய முடியும்.

## தொடர் செயல்பாடுகள்

- www.censusindia.gov.in என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு மக்கள் தொகை தொடர்பான கூடுதல் தகவல்களைச் சேகரிக்கவும்.
- கேரளத்தில் சர்வதேச குடியேற்றம் மூலம் மனித வளம் சுரண்டப்படுகின்ற பகுதிகளைக் குறித்து செய்திகள் திரட்டி படத்தொகுப்பு தயாராக்கவும்
- மினிஸ்ட்ரி ஆப் எக்ஸ்டேனல் அபயர்ஸ் இணையதளத்தைப் பார்வையிட்டு இந்தியாவில் இருந்துள்ள குடியேற்றத்தின் நிலையான விவரம் சேகரித்து விளக்கப்படத்தைத் தயார்செய்து வெளியிடவும்.
- NSO இணையதளத்தில் (https://mospi.gov.in) விருந்து மற்ற மாநிலங்களில் ஆண்–பெண் விகிதம் கண்டுபிடிக்கலாமல்லவா? எதனால் பல மாநிலங்களில் ஆண்–பெண் விகிதத்தில் வித்தியாசம் உள்ளது. வகுப்பில் கலந்துரையாடல் நடத்தவும்.

  கலந்துரையாடல் குறிப்புகள்

  - பெண் சிசுக்கொலை
  - ஆண் குழந்தைகள் மீது அதிக ஆர்வம் கொள்ளும் மனநிலை
  - குறைவான சுகாதாரப் பராமரிப்பு
- கேரளத்தில் ஆண்–பெண் விகித மேம்பாட்டுக்காகவும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் கேரள அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

  - சஹாய ஹஸ்தம்
  - பிராத்யாஷா
  - விவ கேரளா

  மேலே உள்ள விவரங்களைச் சேகரித்துச் சிறு குறிப்பு தயாரிக்கவும்.
- கேரளத்தில் மக்கள்தொகை வளர்ச்சியைக் குறித்து ஒரு கருத்தரங்கு நடத்தவும். கீழே கொடுத்திருக்கும் கருத்து பகுதிகளைக் அடிப்படையாகக் கொண்டு கருத்தரங்க அறிக்கை தயாரிக்கவும்.

  - கேரளத்தின் மக்கள்தொகை – கூடிய மாவட்டம், குறைந்த மாவட்டம்
  - கேரளத்தின் மக்கள் தொகை அடர்த்தி – கூடிய மாவட்டம், குறைந்த மாவட்டம்.
  - குடியேற்றம் – உள்நாட்டு குடியேற்றம், சர்வதேச குடியேற்றம்.
  - பிறப்பு, இறப்பு விகிதம்

- ஆயுட்காலம்
- வயது நிலை
- மக்கள்தொகை, இலாப விகிதம்
-
-

- மக்கள் தொகை அறிவியலின் சமூகப் பண்புகள் பற்றிய குறிப்புகளை உருவாக்கவும்.
- மினிஸ்ட்ரி ஆப் எக்ஸ்டேனல் அபயேர்ஸ் (MOEA) இணையதளம் பார்த்து இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்கு குடியேறுபவர்களின் விவரக்கணக்கைக் கண்டறிந்து அதை விளக்கப்படத்தில் காட்சிப்படுத்தவும்.

# குறிப்புகள்

# குறிப்புகள்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,

பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

***Online R. T. E Monitoring : www.nireekshana.org.in***